E Paper

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

மின்னிதழ்

2022 நவம்பர் 5 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN

தினகரன்

1932 - 2022

வரு. 90 இல. 262 | Saturday 05, November, 2022 | 15 பக்கங்கள்

## மீண்டும் அதே இடத்தில் டி.ஏ. ராஜபக்ஷ சிலை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டின் பல்வேறு பகுதிகளில் கடந்த மே 9ம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின் போது சிதைக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தந்தையாரான அமரர் டி.ஏ. ராஜபக்ஷவின் உருவச்சிலை மீண்டும் புனரமைக்கப்பட்டுள்ளது.



06

## நாட்டில் முதலாவது குரங்கு அம்மை நோயாளி ஒருவர் இனங்காணல்

### துபாயிலிருந்து வந்த நபரிடம் நடத்திய பரிசோதனையில் உறுதி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இலங்கையில் முதலாவது குரங்கம்மை தொற்றுநோயாளி இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவர் துபாயிலிருந்து இலங்கைக்கு வருகை தந்துள்ள 20 வயது நபரென்றும் சுகாதார ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் முதலாவது தடவையாக இத்தகைய நோயாளி இனங்காணப்பட்டுள்ளதுடன் மேற்படி நபர் கடந்த 01ம் திகதி துபாயிலிருந்து விமானம் மூலம் கட்டுநாயக்க

06

## ஆசிரியர்கள், மாணவர்களது உடைகளில் மாற்றமில்லை

### ஏற்படுத்தமாட்டோம் என்கிறார் கல்வியமைச்சர்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் உடைகள் மற்றும் சீருடைகளில் எந்தவொரு காரணத்திற்காகவும் எத்தகைய மாற்றமும் மேற்கொள்ளப்படமாட்டாது என கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஆசிரியர்களின் உடைகளில் மாற்றம் ஏற்படுத்தி பாடசாலைகளுக்கு சமூகமளிப்பதற்கு வசதியான உடைகளை அவர்கள் அணிவதற்கு இடமளிக்குமாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின்

06

வரவு செலவு திட்ட சமர்ப்பிப்பு தினத்தில்

## அதிதிகளுக்கான தேநீர் விருந்தை தவிர்க்குமாறு ஜனாதிபதி யோசனை

### இம்முறை அவசியமில்லையென அதிகாரிகளுக்கு பணிப்புரை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பாராளுமன்றத்தில் அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் எதிர்வரும் 14 ஆம் திகதி அதிதிகளுக்கான சம்பிரதாயபூர்வ தேநீர் உபசாரம் இம்முறை நடைபெறமாட்டாது.

வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வெளிநாட்டுத் தூதுவர்கள் உள்ளிட்ட விசேட அதிதிகளுக்காக வழமையாக சம்பிரதாயபூர்வமாக நடத்தப்படும் தேநீர் விருந்துபசாரத்தை

06

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் கம்பனியிடம் நட்டஈடு பெற

# சிங்கப்பூர் சர்வதேச நடுவர் மன்றத்தில் வழக்கு

### ஜனாதிபதி ரணில் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவுக்கு பணிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் கம்பனியிடம் நட்டஈட்டைப் பெற்றுக்கொள்வதற்காக குறித்த கப்பல் நிறுவனத்திற்கு எதிராக சிங்கப்பூர் சர்வதேச நடுவர் மன்றத்தில் வழக்குத் தொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.



**தொடரவுள்ள வழக்கு குறித்து அமைச்சரவை பத்திரம் ஒன்றையும் தயாரிக்குமாறு ஜனாதிபதி நீதியமைச்சருக்கு பணிப்பு**

இலங்கை கடற்பரப்பில் கடந்த 2020ம் ஆண்டு தீப்பிடித்து எரிந்த எம்.வீ. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவுக்குமிடையில் பேச்சுவார்த்தையொன்று கடந்த முதலாம் திகதி இடம்பெற்றுள்ளது.

அந்த சந்தர்ப்பத்திலேயே குறித்த கப்பல் நிறுவனத்திடமிருந்து நட்டஈட்டைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையை

06

போதைப்பொருள் கடத்தலை முறியடிக்க

## வடக்கில் களமிறக்கப்பட்டுள்ள பொலிஸாரின் மோப்ப நாய்கள்





வடக்கில் போதைப் பொருள் பாவனை மற்றும் விநியோகம் என்பவற்றை கட்டுப்படுத்தும் நோக்குடன் வவுனியா, நெளுக்குளம் பொலிஸார் மோப்ப நாயின் துணையுடன் விசேட சோதனை நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

வவுனியா, நெளுக்குளம் சந்திப் பகுதியில் நேற்று (04) காலை 9 மணி முதல் மதியம் 1 மணிவரை இந்த விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. அண்மைக்காலமாக வடக்கில் போதைப் பொருள் பாவனை மற்றும்

06

## லிற்றோ Gas போதியளவு கையிருப்பில் உள்ளமை உறுதி

### சில இடங்களில் பற்றாக்குறை; திங்களுக்குள் அவைக்கு தீர்வு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

லிற்றோ கேஸ் போதியளவு கையிருப்பில் உள்ளதாகவும் அதுதொடர்பில் பாவனையாளர்கள் கவலைப்படத்தேவையில்லை என்றும் லிற்றோ கேஸ் நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார். ஒருதொகை லிற்றோ கேஸ் கைவசம் உள்ள நிலையில் மேலும் 28,000 மெட்ரிக் தொன் சமையல் எரிவாயுவை

06

## சுற்றுலா விசாவில் வெளிநாட்டு தொழிலுக்கு செல்ல முடியாது

### வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் முடிவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சுற்றுலா விசா மூலம் ஓமான் மற்றும் ஐக்கிய அரபு இராஜ்ஜியத்திற்கு இலங்கையர்கள் வேலை வாய்ப்புக்காக செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் உத்தரவிற்கு

06



விமான நிலையம், பொது இடங்களில்

## குரங்கு காய்ச்சல் பரவுவதை தடுக்க கண்காணிப்பு அவசியம்

### அதிகாரிகளுக்கு GMOA அவசர கோரிக்கை

இலங்கையில் குரங்குக் காய்ச்சல் பரவுவதைத் தடுக்க விமான நிலையங்கள் மற்றும் ஏனைய இடங்களில் கண்காணிப்பு நடவடிக்கைகளை பலப்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

பாதிக்கப்பட்ட ஒருவரின் காயங்களில் இருந்து வெளியேறும் சுரப்புகளை நேரடியாக தொடுவதன் மூலம் மற்றுமொருவருக்கு

06

## தென்கொரியாவில் உயிரிழந்த இளைஞனுக்கு நிதியுதவி

### கொரிய அரசாங்கம் வழங்குவதாக உறுதியளிப்பு

தென் கொரியாவின் சியோலில் உள்ள இடாவோனில் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த 27 வயதான மொஹமட் ஜினத்தின் குடும்பத்துக்கும் அவரது இறுதிச் சடங்குகளுக்கும் நிதியுதவி வழங்க கொரிய அரசாங்கம் முன்வந்துள்ளது.

கடந்த ஒக்டோபர் 29ஆம் திகதி கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த கண்டி

06



உலக மக்களிடம் இலங்கைக்காக

## நிதி சேகரிப்பு தளத்தை ஆரம்பித்தது ஐ.நா.சபை

இலங்கையின் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள துறைகளுக்கு உதவுவதற்காக, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்றிட்டம் இலங்கைக்கான நிதி சேகரிப்பு தளம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. 1948 க்குப் பிறகு நாடு எதிர்கொண்ட மிக

06

## களனி பல்கலைக்கழக மாணவர் விடுதியில் மோதல்

### ஐந்து மாணவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதி



**லோரன்ஸ் செல்வநாயகம்**

களனி பல்கலைக்கழகத்தில் விடுதியில் தங்கியிருந்த மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஐந்து மாணவர்கள் காயமுற்று ஹோமாகம ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழகத்தின் கலை பீடத்தில் கல்வி கற்கும் 2ம் ஆண்டு மாணவர்கள் ஐவரே இவ்வாறு

06

பாரிய நிதி மோசடி விவகாரம்:

## திலினி வழக்கு தொடர்பில் மற்றுமொரு பெண் கைது

### நேற்றுக் காலை CIDயினர் அதிரடி

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பாரிய நிதி மோசடி குற்றச்சாட்டின் பேரில் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் திலினி பிரியமாலி விவகாரத்துடன் தொடர்புபட்டுள்ளதாகக் குறிப்பிடப்படும் ஜானகி சிறிவர்தன

06



நாட்டின் இருவேறு பகுதிகளில்

**ரூ.36 கோடிபெறுமதியான ஹெரோயின் மீட்பு**

பெண் ஒருவர் உட்பட மூவர் கைது

03

மின்சாரம், பெற்றோலியம், சுகாதாரம் உட்பட

**அத்தியாவசிய சேவைகள் பல ஜனாதிபதியினால் பிரகடனம்**

03



சேதன பசளை கொள்வனவு செய்யும்

**விவசாயிகளுக்கு 20,000 ரூபாய் கொடுப்பனவு**

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு

03

துப்பாக்கி சூட்டுக்கு இலக்கான

## இம்ரான் கானுக்கு நேற்று சத்திரசிகிச்சை



துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த பாகிஸ்தான் முன்னாள் பிரதமரான இம்ரான் கானுக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாக அவருக்கு நெருங்கியவர்களை மேற்கோள்காட்டி சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மீது நேற்றுமுன்தினம் (03)

06

## O/L பரீட்சை முடிவுகள் இம்மாத இறுதிக்குள்

### பரீட்சைகள் ஆணையாளர் தகவல்



க.பொ.த சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் இம்மாத இறுதியில் வெளியிடப்படும் என பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி.தர்மசேன தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும் வெளியீட்டு திகதி முன்கூட்டியே அறிவிக்கப்படாது எனவும் அவர் கூறியுள்ளார்.

06

## முட்டை விலையில் மாற்றம் எதுவுமில்லை

### நுகர்வோர் அதிகார சபை அறிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**




முட்டை விலை அதிகரிக்கப்படவில்லை என்றும் அதற்கான எத்தகைய அனுமதியையும் நுகர்வோர் விவகார அதிகார சபை வழங்கவில்லை என்றும் அந்த சபையின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பாக வெளியிடப்படும் தகவல்கள் உண்மைக்கு புறம்பானவை

06

## யாழ்ப்பாணத்தில் 60 kg கஞ்சா மீட்பு



யாழ்ப்பாணம் சேந்தாங்குளம் கடற்கரையில் இருந்து 60 கிலோகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. கடற் கரை பகுதியில் நேற்று(4) காலை கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரால் இந்த கஞ்சா

06

மைத்திரிக்கு கொரோனா

## சிகிச்சையின் பின் வீடு திரும்பினார்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதாக ஐடிஎச் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. அவருக்கு கொரோனா வைரஸ் நோய் தொடர்பான அறிகுறிகள்

06

90 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# சர்வதேச செய்திகள்

## மூழ்கிய அகதி படகின் பலி 22 ஆக உயர்வு



கிரீஸ் அருகே அளவுக்கு அதிகமான அகதிகளை ஏற்றி வந்த படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளான பகுதியிலிருந்து 22 உடல்கள் மீட்கப்படடுள்ளன. இது தவிர, விபத்தில் மாயமான மேலும் 34 பேரை மீட்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

தலைநகர் எதென்ஸுக்கு அருகே உள்ள எவியா, ஆண்ட்ரோஸ் ஆகிய இரு தீவுகளுக்கு இடையே கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை வந்து கொண்டிருந்த அகதிகள் படகு, அளவுக்கு அதிகமாக ஆட்கள் ஏற்றப்பட்டிருந்ததால் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

விபத்துப் பகுதியையொட்டி இருந்த, ஆளில்லா தீவிலிருந்து 9 பேரை மீட்புக் குழுவினர் கடந்த செவ்வாய்க்கிழமை மீட்டனர். அதன் பின் விபத்தில் மாயமான சுமார் 60 பேரைத் தேடும் பணிகள் தொடர்ந்து நடந்து வந்தன. இதில் மேலும் 3 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர்.

விபத்துப் பகுதியிலிருந்து இதுவரை 22 உடல்கள் மீட்கப்பட்டன. உயிரிழந்த 22 பேரில் 5 சிறுவர்களும் அடங்குகின்றனர்.

# இம்ரான் கான் உடல்நிலை சீராக இருப்பதாக அறிவிப்பு

## தாக்குதலுக்கு அனைத்துத் தரப்பும் கண்டனம்



துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் உடல்நிலை சீராக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க எதிர்ப்பு ஊர்வலத்தின் போது அவர் துப்பாக்கியால் காலில் சுடப்பட்டார். அது, அவரைக் கொலை செய்யும் முயற்சி என்று கூறப்படுகிறது.

லாகூர் நகரிலிருந்து தலைநகர் இஸ்லாமாபாத்திற்கு ஊர்வலம் சென்று கொண்டிருந்தபோது துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் நேர்ந்தது. பேரணியில் இருந்த சிலர் காயமுற்றனர். ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

துப்பாக்கியால் சுட்ட நபரைப் பொது மக்கள் தடுத்து நிறுத்தியதாகச் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் கூறினர்.

அந்நபர் தற்போது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். இவ்வாண்டு ஏப்ரல் மாதம் பிரதமர் பதவியிலிருந்து இம்ரான் கான் நீக்கப்பட்டார்.

அதையடுத்து தேர்தலை மீண்டும் நடத்த வேண்டும் என்று அவர் கோரி வருகிறார்.

இந்நிலையில் இம்ரான் கான் உடல்நிலை சீராக இருப்பதாகவும் அவர் அடுத்த சில நாட்களில் மருத்துவமனையில் இருந்து வெளியேறுவார் என்றும் அவரது நெருங்கிய வட்டாரத்தை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

இம்ரான் கான் மீதான இந்தத் தாக்குதல் நாட்டில் அதிர்ச்சி அலையை ஏற்படுத்தியுள்ளது. அவரது தஹ்ரீக்கே இன்சாப் கட்சி தேசிய அளவில் ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தது. இதனையொட்டி தலைநகர் இஸ்லாமாபாத்தில் நேற்று பாடசாலைகள் மூடப்பட்டன.

இந்த தாக்குதலுக்கு பாகிஸ்தான் அரசியல்வாதிகள் கண்டனங்களை வெளியிட்டுள்ளனர். இது கொடூரமான படுகொலை முயற்சி என்று ஜனாதிபதி ஆரிப் அல்வி தெரித்துள்ளார். இது பற்றி விசாரணை நடத்தும்படி பிரதமர் ஷெஹ்பாஸ் ஷரீப் உத்தரவிட்டுள்ளார்.

அமைதி காக்கும்படி அழைப்பு விடுத்திருக்கும் அமெரிக்க வெளியுறவு செயலாளர் அன்டனி பிளிங்கன், “அரசியலில் வன்முறைக்கு இடமில்லை. அனைத்துத் தரப்பும் வன்முறை, துன்புறுத்தல் மற்றும் மிரட்டலை கைவிடும்படி அழைப்பு விடுக்கிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தானில் கடந்த காலங்களிலும் அரசியல் வன்முறைகள் தொடர்ச்சியாக இடம்பெற்றுள்ளன. 2007 இல் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ படுகொலை செய்யப்பட்டார். இம்ரான் கான் மீதான படுகொலை முயற்சியை இந்த சம்பவத்துடன் பலர் ஒப்பிட்டு பேசுகின்றனர்.

பாகிஸ்தான் தற்போது பொருளாதார நெருக்கடியை சந்தித்து வருவதோடு அங்கு வெள்ள அனர்த்தமும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

## கொவிட் கட்டுப்பாடுகளுக்கு சீன தொழிற்சாலை உறுதி



கொவிட் தொற்றினால் பாதிக்கப்பட்ட சீனாவின் சென்சு நகரில் இருக்கும் ஐபோன் பொருத்தும் நிறுவனம் ஊழியர்களுக்கான பாதுகாப்பான வழிகள் மற்றும் தங்கியிருப்போருக்கான கிருமிநீக்கப்பட்ட சுற்றுச்சூழலை உறுதிப்படுத்தி மூன்று அறிவித்தல்களை வெளியிட்டுள்ளது.

அந்த தொழிற்சாலைக்கு நோய்த் தொற்றுநடவடிக்கைப்படைஒன்றை நகர நிர்வாகம் அனுப்பியதை அடுத்தே இந்த அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. இந்தப் படை தொழிற்சாலைக்கு நுழைந்ததை அடுத்து ஊழியர்கள் தப்பிச்செல்லும் வீடியோக்கள் சமூக ஊடகத்தில் பிரபலம் அடைந்தது. இந்த தொழிற்சாலை தாய்வானின் பொக்ஸ்கோன் தொழில்நுட்பக் குழுமத்தால் நடத்தப்படுவதோடு உலகின் மிகப்பெரிய ஐபோன் தொழிற்சாலையாக கூறப்படுகிறது. இந்த வளாகத்தில் அண்மையில் கண்டிப்பான கொவிட் கட்டுப்பாடு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதில் தினசரி நோய் சோதனை, சிற்றுண்டிச்சாலையில் உணவு உட்கொள்ளத் தடை போன்ற கட்டுப்பாடுகள் அடங்கும்

## பலஸ்தீன அகதிகளுக்கு 2.6 மில். டொலர் உதவி



2022 – 2023 ஆம் ஆண்டுக்கான அருகாமை கிழக்கில் உள்ள பலஸ்தீன அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் நிவாரண மற்றும் பணிகளுக்கு 2.5 மில்லிய அமெரிக்க டொலர் இரண்டாம் கட்ட உதவியை இந்தியா வழங்கியுள்ளது.

கல்வி, சுகாதாரம், நிவாரணம் மற்றும் சமூக சேவைகள் உட்பட நிறுவனத்தின் முதன்மை திட்டங்கள் மற்றும் சேவைகளுக்கு இது உதவும் என்று ரமல்லாவில் உள்ள இந்திய பிரதிநிதித்துவ அலுவலகம் தெரிவித்துள்ளது.

லெபனானில் இருக்கும் பலஸ்தீன அகதிகள் மீள முடியாத பாதிப்பை எதிர்கொண்டிருப்பதாக ஐ.நா முன்னதாக குறிப்பிட்டது. லெபனானில் வறுமை, வேலையின்மை மற்றும் விரக்தி உச்சம்பெற்று லெபனான் மக்கள், சிரிய மற்றும் பலஸ்தீன அகதிகள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## இஸ்ரேலியப் படையினரால் 4 பலஸ்தீனர்கள் சுட்டுக்கொலை



ஆக்கிரமிக்கப்பட்ட கிழக்கு ஜெருசலம் மற்றும் மேற்குக் கரையில் வெடித்த வன்முறைகளில் கடந்த வியாழனன்று (03) இஸ்ரேலிய படையினரால் நான்கு பலஸ்தீனர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

மேற்குக் கரையின் ஜெனின் நகரில் 14 வயது சிறுவன் ஒருவன் மற்றும் 28 வயது ஆடவர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டிருப்பதோடு மேலும் நால்வருக்கு துப்பாக்கிக் காயம் ஏற்பட்டிருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதில் கொல்லப்பட்டிருக்கும் இஸ்லாமிய ஜிஹாத் அமைப்புடன் தொடர்புபட்டவரை இலக்கு வைத்து சுற்றிவளைப்பு தேடுதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது. முன்னதாக கத்திக்குத்து தாக்குதலில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்பட்ட பலஸ்தீனர் ஒருவர் ஜெருசலத்தின் பழைய நகரில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இஸ்ரேலிய அதிகாரி ஒருவரின் உடலின் மேற்பாகத்தில் அவர் கத்திக்குத்து நடத்தியதை அடுத்து சுட்டுக் கொல்லப்பட்டதாக இஸ்ரேலிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மேற்குக் கரை கிராமமான பைத் தக்குவில் இஸ்ரேலிய படையினருடனான மோதலின்போது 42 வயது ஆடவர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

மேற்குக் கரையில் கிட்டத்தட்ட தினசரிய சுற்றிவளைப்புத் தேடுதல்கள் மற்றும் மோதல்கள் இடம்பெற்று வரும் நிலையில் அங்கு அதிக உயிரிழப்புக் கொண்ட ஆண்டாக இது மாறி இருப்பதாக ஐ.நா குறிப்பிட்டுள்ளது.

# ரஷ்யாவின் தாக்குதல்களால் உக்ரைனில் 4.5 மில். மக்கள் மின்சாரமின்றி பாதிப்பு



ரஷ்யா எரிசக்தியைக் குறிவைக்கும் பயங்கரவாதப் போக்கைக் கையாள்வதாக உக்ரைனிய ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி குற்றஞ்சாட்டியுள்ளார்.

உக்ரைனின் எரிசக்திக் கட்டமைப்புகள் மீது ரஷ்யா நடத்திய தாக்குதலை அடுத்து சுமார் 4.5 மில்லியன் மக்கள் மின்சாரமின்றி அவதியுறுவதாக செலென்ஸ்கி கூறினார்.

அண்மைய வாரங்களில், உக்ரைனின் அணுமின் ஆலைகள் மீது ரஷ்யா பெரிய அளவிலான ஏவுகணை, ஆளில்லா விமானத் தாக்குதல்களை மேற்கொண்டது.

நகரில் உள்ள மின்சாரக் கட்டமைப்புகளையும் ரஷ்யத் துருப்பினர் குறிவைத்துத் தாக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் உக்ரைனின் எரிசக்தி நிலையங்களில் மூன்றில் ஒரு பங்கு அழிக்கப்பட்டதாக ஜனாதிபதி செலென்ஸ்கி கூறினார்.

அதன் விளைவாகச் சிக்கனமான முறையில் மின்சாரத்தைப் பயன்படுத்தும்படி உக்ரைனிய அரசாங்கம் மக்களைக் கோரும் நிலை ஏற்பட்டுள்ளது.

உக்ரைனிய வலுசக்தி அமைப்புகளை இலக்குவைத்து தாக்குதல் நடத்துவதை ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு உறுதி செய்துள்ளது.

முக்கிய தெற்கு நகரான கெர்சோனில் இருந்து ரஷ்ய துருப்புகள் உத்தியோகபூர்வமாக வாபஸ் பெறும் நிலையிலேயே இந்தத் தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

போர்க்களத்தில் மோசமான பின்னடைவை சந்தித்த நிலையில் போர் நிலைகளுக்கு அப்பால் இருக்கும் நகரங்களில் உள்ள மின்சார நிலையங்கள் மீது ரஷ்யா தாக்குதல் நடத்த ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆட்குறைப்பு அறிவிப்பை வெளியிட்டது 'ட்விட்டர்'




உலகின் பெரும் செல்வந்தரான இலோன் மஸ்க் ட்விட்டர் நிறுவனத்தை வாங்கிய நிலையில் அதன் ஊழியர்களை பணி நீக்கம் செய்வது குறித்து அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

இது பற்றி நிறுவன ஊழியர்களுக்கு அந்த சமூக ஊடகம் மின்னஞ்சல் ஒன்றை அனுப்பியுள்ளது. “ட்விட்டர் ஆரோக்கியமான பாதையில் செல்ல இந்த ஆட்குறைப்பு அவசியம்” என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அலுவலகங்கள் தற்காலிகமாக மூடப்படும் என்றும் உள்ளே நுழைவதற்கான அனுமதி இடைநிறுத்தப்படும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

44 பில்லியன் டொலர் உடன்படிக்கையில் ட்விட்டரை வாங்கிய மஸ்க், அந்த நிறுவனத்தின் தலைமை நிர்வாகியாக பதவி ஏற்கவுள்ளார். “எமது உலகளாவிய தொழிற்படையை குறைத்து கடுமையான நடைமுறையை நாம் செயற்படுத்தப்போகிறோம்” என்று ட்விட்டர் அந்த மின்னஞ்சலில் குறிப்பிட்டுள்ளது.

ட்விட்டரின் மொத்த பணியாளர்களில் பாதியான 3,700 பேரை பணி நீக்கம் செய்ய மஸ்க் எதிர்பார்ப்பதாக அமெரிக்க ஊடகங்கள் முன்னதாக கூறியிருந்தன.

முன்னதாக தமது ட்விட்டர் கணக்கை உறுதி செய்வதற்காக மாதாந்தம் 8 டொலர் கட்டணத்தை அறவிடும் திட்டம் அறிவிக்கப்பட்டது கடும் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது. “எப்படியேனும் கட்டணம் செலுத்த வேண்டி இருக்கும்” என்று மஸ்க் ட்விட் செய்திருந்தார்.

## பிரிட்டனில் நீண்ட பொருளாதார மந்தநிலை குறித்து எச்சரிக்கை




இங்கிலாந்தின் மத்திய வங்கி, அதன் வட்டி விகிதத்தை 33 ஆண்டுகள் காணாத அளவுக்கு அதிகரித்துள்ளது. இதன்படி வட்டி விகிதம் 0.75 வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இது 2.25 வீதத்தில் இருந்து 3 வீதம் அதிகரித்துள்ளது. 1989ஆம் ஆண்டுக்குப் பின் இதுவே மிகப் பெரிய உயர்வாகும். பிரிட்டன், அதன் மிக நீண்ட பொருளாதார மந்தநிலையைச் சந்திக்கவுள்ளதாக வங்கி எச்சரித்தது.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்திலிருந்து வட்டி விகிதம் அதிகரித்த வண்ணம் உள்ளது. வட்டி விகிதத்தை அதிகரிப்பதால், கடன் வாங்குவது குறையும் என்றும் மக்களின் செலவுகள் குறையும் என்றும் நம்பப்படுகிறது.

வாழ்க்கைச் செலவுகள் அதிகரிக்கும் நிலையில், பொருட்களின் விலையைக் குறைக்க அந்நடவடிக்கை உதவும் என்று அதிகாரிகள் நம்புகின்றனர்.

அமெரிக்க மத்திய வங்கியும் அதன் வட்டி விகிதத்தை, தொடர்ந்து 4ஆவது முறையாக அதிகரித்துள்ளது. வட்டி விகிதம், 75 அடிப்படைப் புள்ளிகள் உயர்த்தப்பட்டது. 15 ஆண்டுகளில் இதுவே மிக அதிகமாக உள்ளது.

## இந்திய, பிரான்ஸ் விமானப்படை ஜோத்பூரில் கூட்டு போர்ப் பயிற்சி



இந்தியாவினதும் பிரான்ஸினதும் விமானப் படைகள் கருடா கூட்டு விமான போர்ப் பயிற்சியை ஜோத்பூரில் ஆரம்பித்துள்ளன. இப்பயிற்சி எதிர்வரும் 12 ஆம் திகதி வரை நடைபெறும் என்று இந்திய விமானப்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இப்பயிற்சியில் பிரான்ஸ் நான்கு ரபெல் போர் விமானங்களையும் ஏ–330 பல்வகைப் பணிகளை மேற்கொள்ளக்கூடிய போக்குவரத்து விமானமொன்றையும் 220 வீரர்களுடன் ஈடுபடுத்தியுள்ளது. இந்தியா ரபெல் போர் விமானம், சுகோய்–30 எம்.கே.ஐ, தேஜாஸ் மற்றும் ஜகுவார் ஜெட் விமானங்கள், எம்.ஐ. 17 மற்றும் புதிய உள்நாட்டு தயாரிப்பான இலகுரக யுத்த ஹெலிகொப்டர்களுடன் இப்பயிற்சியில் பங்குபற்றியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், இக்கூட்டுப் பயிற்சியின் ஊடாக இந்திய விமானப்படையும் பிரான்ஸின் விமான மற்றும் விண்வெளி படையினரும் தங்கள் செயற்பாட்டு திறன்களையும் இயங்குதளத்தையும் மேம்படுத்திக் கொள்வர். இந்திய விமானப்படையின் எரிபொருள் நிரப்பும் விமானமும் முன்னெச்சரிக்கை விடுக்கும் விமானங்களும், கட்டுப்பாடு விமானங்களும் கூட இப்பயிற்சியில் இணைந்து கொண்டுள்ளன என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 நவம்பர் 5 சனிக்கிழமை
தினகரன்
THINAKARAN
තිනකරන්



**தொழுகை நேரம்**

01 முதல் 07 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.41 |
| லுஹர் | 11.56 |
| அஸர் | 03.17 |
| மஃரிப் | 05.51 |
| இஷா | 07.03 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் ஐப்பசி 19

ராகுகாலம் : காலை : 09.00 - 10.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | சுகம் |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | செலவு |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | வெற்றி |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

மின்சாரம், பெற்றோலியம், சுகாதாரம் உட்பட

# அத்தியாவசிய சேவைகள் பல ஜனாதிபதியினால் பிரகடனம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசாங்கத்தினால் மக்களுக்கு பெற்றுக்கொடுக்கப்படும் மின்சாரம், எரிபொருள், வைத்தியசாலைகள் உள்ளிட்ட அதற்கு சமமான நிறுவனங்களின் சேவைகள் அத்தியாவசிய சேவைகளாக பெயரிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அதிவிசேட வர்த்தமானி பத்திரமொன்று வெளியிடப்பட்டுள்ளது.

மின்சார விநியோக சேவை, எரிபொருள் உற்பத்தி மற்றும் எரிபொருள் விநியோக, பகிர்ந்தளித்தல் சேவை, ஆஸ்பத்திரி சேவைகள் மருந்தகங்கள் மற்றும் அதனோடு இணைந்த நிறுவனங்கள், நோயாளிகள் பராமரிப்பு, வரவேற்பு, பாதுகாப்பு, போசணை மற்றும் சிகிச்சையளித்தல் உள்ளிட்ட சில சேவைகள் இவ்வாறு அத்தியாவசிய சேவைகளாக பெயரிடப்பட்டுள்ளன.

அத்தியாவசிய மக்கள் சேவை சட்டத்தின் கீழ் இயல்புவாழ்க்கையை முன்னெடுத்துச் செல்ல அத்தியாவசியமான சேவையாக இவற்றைக் கவனத்திற்கொண்டு அரசாங்க கூட்டுத்தாபனங்கள் அரச திணைக்களங்கள் உள்ளூராட்சி சபை நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்படும் சேவைகளும் அத்தியாவசிய சேவைகளாக குறித்த வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශේෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதிவிசேஷமானது

# நவம்பர் 07 புத்தளத்தில் மு.கா பேராளர் மாநாடு

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 30ஆவது பேராளர் மாநாடு எதிர்வரும் 7ஆம் திகதி, திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு புத்தளம், கே.ஏ. பாயிஸ் ஞாபகார்த்தக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இரு அமர்வுகளாக இடம்பெறவுள்ள இம் மாநாட்டில் நாடெங்கிலுமிருந்து கட்சியின் பேராளர்கள் கலந்து கொள்வர் எனவும்அதற்கு முன்னதாக, 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொழும்பில், கட்சியின் "தாருஸ்ஸலாம்" தலைமையகத்தில் முஸ்லிம் காங்கிரஸின் கட்டாய உயர்பீடக் கூட்டம் நடைபெறவுள்ளதாகவும் அதன் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# இலங்கையே சுற்றுலா பயணத்திற்கு சிறந்த நாடு

## தம்மை சந்தித்த ஆசிய ஊடக, கலாசார குழுவினரிடம் பிரதமர் தினேஷ் தெரிவிப்பு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



உலக நாடுகளின் தற்போதுள்ளநிலைமைகளை நோக்கும் போது இலங்கையே சுற்றுலா பயணத்திற்கு முதலாவது சிறந்த நாடாக காணப்படுவதாக பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஊடகங்களில் தெரிவிக்கப்படும் அளவிற்கு எத்தகைய மோசமான நிலைமையும் இலங்கையில் காணப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டியுள்ள பிரதமர் உலக நாடுகளின் தற்போதைய நிலைமையில் இலங்கையே சிறந்த சுற்றுலா நாடாக திகழ்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆசிய ஊடக மற்றும் கலாசார சங்கத்தின் இந்திய மற்றும் நேபாளத்தைச் சேர்ந்த ஊடக பிரதிநிதிகள் குழுவொன்று கொழும்பிலுள்ள பிரதமர் அலுவலகத்தில் வைத்து பிரதமருடன் விசேட சந்திப்பொன்றை மேற்கொண்டனர். அந்த சந்திப்பின் போதே பிரதமர் தினேஷ் குணவர்தன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சுற்றுலாத்துறை தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள இரு

நாடுகளினதும் ஊடக பிரதிநிதிகள் குழு இலங்கையின் சுற்றுலாத்துறையில் முன்னேற்றம் அனைத்து நடவடிக்கைகளுக்கும் தமது ஊடகங்கள் ஊடாக முழுமையான ஒத்துழைப்பைப் பெற்றுத் தருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

பல்வேறு சவால்கள் பொருளாதார நெருக்கடியிலிருந்து குறுகிய காலத்தில்

இலங்கை இயல்பு நிலையை அடைந்து வருவது தொடர்பில் அதற்காக அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பில் அந்த ஊடக பிரதிநிதிகள் குழு பிரதமரிடம் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளது.

இலங்கை தொடர்பில் சமூக வலைத்தளங்களில் பல்வேறு தகவல்கள்

வெளியிடப்படுகின்றன. சுற்றுலாப் பயணத்துக்காக இலங்கைக்கு செல்லவேண்டாம் என்றும் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்பதை சுட்டிக்காட்டியுள்ள அந்தக் குழுவினர், நாட்டின் உண்மை நிலையை நேரடியாக கண்டுணர்ந்ததாகவும், எந்தவித சிக்கலுமின்றி நாட்டின் அனைத்து பிரதேசங்களுக்கும் பயணிக்கக்கூடிய நிலை உள்ளதாகவும் அதைக் கண்டு தாம் ஆச்சரியமுற்றதாகவும் அவர்கள் பிரதமரிடம் மேலும் தெரிவித்துள்ளனர்.

## சேதன பசளை கொள்வனவு செய்யும்

# விவசாயிகளுக்கு 20,000 ரூபாய் கொடுப்பனவு

## விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

சேதனப்பசளையை கொள்வனவு செய்யும் விவசாயிகள் அனைவருக்கும்

ஹெக்டயாரொன்றுக்கு 20 ஆயிரம் ரூபா வீதம் உதவிக் கொடுப்பனவொன்றை பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அதேவேளை, எதிர்வரும் சிறுபோகத்தின் ஆரம்பத்தில் உபயோகப்படுத்தப்படும் சேற்று உரத்தை இலவசமாக விவசாயிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அமைச்சில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அது தொடர்பில் குறிப்பிட்டுள்ள அமைச்சர் மஹிந்த அமரவீர 10.6 மில்லியன் லீற்றர் எரிபொருள் விவசாய நடவடிக்கைகளுக்காக சீனாவிடமிருந்து நன்கொடையாக இலங்கைக்கு கிடைக்கவுள்ளதாகவும் அதனை அறுவடைக் காலத்தில் விவசாயிகளுக்கு இலவசமாக பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை சேதனப்பசளை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள்

முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வாறு சேதனப்பசளையைக் கொள்வனவு செய்யும் விவசாயிகளுக்கு ஹெக்டயார் ஒன்றுக்கு 20 ஆயிரம் ரூபா நிதி உதவித்தொகையாக வழங்கப்படும் என்றும் மேலும் தெரிவித்தார்.



லுணுகலை, அடாவத்தை தோட்டத்தில்

# குளவி கொட்டி 6 தொழிலாளர்கள் வைத்தியசாலையில் அனுமதி

பதுளை லுணுகலைப் பகுதியின் அடாவத்தை பெருந்தோட்டப் பிரிவைச் சேர்ந்த தொழிலாளர்களை நேற்று (04) குளவிகள் கொட்டியதால் 06 தொழிலாளர்கள் லுணுகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

அடாவத்தை பெருந்தோட்டத்தில் பெண் தொழிலாளர்கள் தேயிலைத் தளிர் கொய்யும் கடமைகளில் ஈடுபட்டிருந்த வேளையில், மரமொன்றிலிருந்த குளவிக் கூடு கலைந்து அவர்களை குளவிகள் கொட்டியுள்ளன.

06

நாட்டின் இருவேறு பகுதிகளில்

# ரூ.36 கோடி பெறுமதியான ஹெரோயின் கைப்பற்றல்

## பெண் ஒருவர் உட்பட மூவர் கைது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டின் இருவேறு பகுதிகளில் நேற்றைய தினம் பொலிசார் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின் போது 36 கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளுடன் பெண் ஒருவர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பலாந்தோட்டை பிரதேசத்தில் வீடொ ன்றிலிருந்து 25 கிலோ ஹெரோயின் போதைப் பொருளை கைப்பற்றியுள்ளதுடன் அதனோடு சம்பந்தப்பட்டுள்ள சந்தேக நபர்கள் இருவரையும் கைது செய்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

30 கோடி ரூபா பெறுமதியான மேற்படி ஹெரோயின் போதைப் பொருளை அம்பலாந்தோட்டை, கொக்கல்ல பிரதேசத்திலுள்ள வீடொன்றிலிருந்து கைப்பற்றியுள்ளதாகவும் அந்த வீட்டிற்குள் சாக்குப் பையில் மறைத்து ஒளித்து வைத்திருந்த நிலையிலேயே அதனை மீட்டுள்ளதாகவும் அம்பலாந்தோட்டை பொலிசார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் பெண் என்றும் பொலிசார் தெரிவித்தனர்.

அம்பலாந்தோட்டை பொலிசாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய அப்பகுதியில் பொலிஸ் குழுவொன்று மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போதே மேற்படி ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாக பொலிசார் தெரிவித்தனர்.

அதேவேளை, நேற்றைய தினம் காலை அங்குனுகொலபெலஸ்ஸ பிரதேசத்தில் ஆறு கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளை பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன் சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

அங்குனுகொலபெலஸ்ஸ முலனகொட பகுதியில் நேற்று மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே போதைப் பொருளுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

# ஐரோப்பிய நாடுகளிலிருந்து அனுப்பப்பட்ட ரூ. 7 கோடி பெறுமதியான போதைப்பொருள் மீட்பு

## மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் கைப்பற்றல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜெர்மன், கனடா ஐக்கிய ராஜ்ஜியம் உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலிருந்து இலங்கைக்கு தபால் பொதி மூலம் அனுப்பப்பட்டுள்ள 7 கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுடைய போதைப் பொருளை சுங்க அதிகாரிகள் நேற்று கைப்பற்றியுள்ளனர்.

மேற்படி நாடுகளிலிருந்து கொழும்பிலுள்ள தபால் பரிவர்த்தனை நிலையத்திற்கு அனுப்பப்பட்டிருந்த பொதிகளையே சுங்கத்திணைக்கள அதிகாரிகள் கைப்பற்றியுள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளர் சுதந்த சில்வா தெரிவித்துள்ளார்.

சுங்கத்திணைக்களத்தின் தபால் பெறுமதி நிர்ணைய பிரிவு அதிகாரிகள் சந்தேகத்திற்கு இடமான வகையில் தடுத்து வைத்துள்ள 13 பார்சல்கள் சுங்கத்திணைக்கள போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவு அதிகாரிகள், தபால் திணைக்கள அதிகாரிகள், பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவு செயலணி அதிகாரிகள் ஆகியோர் முன்னிலையில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அதன் போதே அந்த பார்சல்களில் சூட்சுமமாக பொதி செய்து மறைத்து வைக்கப்பட்டிருந்த போதைப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குஷ் ரக போதைப்பொருள் 921 கிராம், ஐஸ் ரக போதைப்பொருள் 106 கிராம், கஞ்சா விதைகள் மூலம் தயாரிக்கப்பட்டுள்ள ஒரு லீற்றர் திரவ எண்ணெய், 5272 மெனமிப்டமய்க் ரக போதைப் பொருள் வில்லைகள், 425 போதைப்பொருள் கட்டிகள், மென்ட் ரக போதைப் பொருள் 2 கிராம், ஐஸ் ரக போதைப் பொருள் 4 கிராம் ஆகியன அதில் உள்ளடங்குவதாகவும் சுங்க ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்த போதைப் பொருட்களின் பெறுமதி 7 கோடியே 30 இலட்சத்து 65,000 ரூபாவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாகவும் மேலதிக விசாரணை நடவடிக்கைகளுக்காக அதனை பொலிஸ் தலைமையக போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதி நாளை எகிப்துக்கு விஜயம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

எகிப்தில் ஷாம் எல் சீக் நகரில் நாளைமுதல் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபை காலநிலை மாற்றம் தொடர்பான COP 27 உலக மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை அதிகாலை எகிப்துக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இந்த மாநாட்டில் எதிர்வரும் 7, 8 ஆம் திகதிகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றவுள்ளார். இலங்கையில் உருவாக்கப்படவுள்ள காலநிலை மாற்றம் தொடர்பான செயலகம் தொடர்பாகவும் இலங்கை உட்பட சர்வதேச ரீதியிலான காலநிலை மாற்றம் தொடர்பிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவரது உரையின்போது கருத்துக்களை முன்வைக்கவுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த எகிப்துக்கான

06

# ஈரானில் இடம்பெறும் ஹிஜாப் எதிர்ப்பு போராட்டத்தில் 277 பேர் உயிரிழப்பு

ஈரானில் கடந்த 6 வாரங்களாக இடம்பெற்று வரும் ஹிஜாப் எதிர்ப்பு போராட்டத்தில் 277 பேர் உயிரிழந்துள்ளதோடு 14,000 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஈரானில் இஸ்லாமிய மத சட்டங்களின்படி ஹிஜாப் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்த சூழலில், தெஹ்ரான் நகரில் ஹிஜாப் சரியாக அணியவில்லை என கூறி பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலில் கோமா நிலைக்கு சென்ற 22 வயதான மாஷா அமினி என்ற இளம்பெண் கடந்த மாதம் 17 ஆம் திகதி உயிரிழந்தார்.

இந்நிலையில் குறித்த சம்பவத்தைக் கண்டித்து ஈரான் முழுவதும் பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஹிஜாப்பை கழற்றி வீசியும், ஹிஜாப்பை தீ வைத்து எரித்தும் பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், ஈரானில் மனித உரிமை மீறல் குறித்து ஐ.நா. குழுவைச் சேர்ந்த ஜாவத் ரஹ்மான் தெரிவிக்கையில்,

"கடந்த 6 வாரங்களாக ஈரானில்

06



**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 223.10 | 233.90 |
| கனடியன் டொலர் | 257.50 | 269.44 |
| யூரோ | 345.67 | 360.32 |
| ஜப்பான் யென் | 2.4481 | 2.5509 |
| சிங்கப்பூர் டொலர் | 247.77 | 258.33 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 394.42 | 410.24 |
| சுவிஸ் பிராங்க் | 355.17 | 372.22 |
| அமெரிக்க டொலர் | 359.23 | 369.96 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 961.64 | கட்டார் ரியால் | 99.31 |
| குவைத் டினார் | 1,168.79 | சவூதி ரியால் | 96.54 |
| ஓமான் ரியால் | 942.56 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.79 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 19ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ரபீஉனில் ஆகிர் பிறை 09

### குறள் தரும் சிந்தனை



வினைக்கண் வினையுடையான் கேண்மைவே றாக
நினைப்பானை நீங்கும் திரு

எடுத்த காரியத்தை முடிப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பவரின் உறவைத் தவறாக எண்ணுபவரை விட்டுப் பெருமை அகன்று விடும்.

# நுகர்வோர் நலனில் வர்த்தகர்கள் அக்கறை கொள்வது அவசியம்

மக்கள் அன்றாடம் பயன்படுத்துகின்ற அத்தியாவசிய உணவுப் பொருட்கள் சிலவற்றின் விலைகள் சமீப நாட்களாக ஓரளவு குறைந்திருப்பதை அறிய முடிகின்றது. அரிசி, பருப்பு, கோதுமைமா ஆகிய பொருட்களை இதற்கான உதாரணமாகக் கூறலாம். அதுமாத்திரமன்றி எரிபொருட்களின் விலையும் அண்மையில் சிறிது குறைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அத்தியாவசிய பாவனைப் பொருட்களின் விலைகள் படிப்படியாகக் குறைக்கப்படுவது மக்களுக்கு ஓரளவு நிம்மதியளிக்குமென்பதில் ஐயமில்லை. அத்துடன் எதிர்காலத்தில் வாழ்க்கைச் செலவுச் சுமை குறைந்துவிடுமென்ற நம்பிக்கையும் மக்கள் உள்ளத்தில் தோன்றுவதற்கு இடமுண்டு. பொருட்களின் விலைகள் எப்போது குறையுமென்று காத்திருக்கின்ற மக்களுக்கு இவ்வாறான ஏக்கம் தோன்றுவது இயல்பாகும்.

ஆனாலும் இந்த விலைக்குறைப்புகள் மக்களின் சுமைகளைக் குறைப்பதற்கு வழிவகுக்கின்றதா என்பதுதான் இங்கு பிரதானமாக ஆராயப்பட வேண்டிய விடயமாகும். கோதுமைமாவின் விலை குறைக்கப்படுமானால் அதில் இருந்து தயாரிக்கப்படுகின்ற உணவுப்பண்டங்களின் விலைகளும் குறைக்கப்படுவது அவசியம். எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்படுமானால் பேருந்துக் கட்டணங்கள் மற்றும் முச்சக்கரவண்டிகளுக்கான கட்டணங்கள் நியாயமான முறையில் குறைக்கப்பட வேண்டும்.

ஆனாலும் மக்கள் நலன் கருதி இவ்வாறான குறிப்பிடும்படியான விலைக்குறைப்போ, கட்டணக் குறைப்போ மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. பஸ்கட்டணங்கள் மிகச்சிறிதளவே குறைக்கப்பட்டுள்ளன. கோதுமைமாவில் இருந்து தயாரிக்கப்படுகின்ற உணவுப்பண்டங்களின் விலைகளும் சிறிதளவே குறைக்கப்பட்டுள்ளன. எனவே நுகர்வோருக்கு குறிப்பிடும்படியான நன்மை இதுவரை கிடைக்கவில்லையெனக் கூறுவதே பொருத்தம்.

நாட்டில் பொருளாதார நெருக்கடி உச்சநிலைக்குச் சென்றிருந்த வேளையிலும், கொவிட் தொற்றுப் பரவல் காரணமாக சமூக முடக்கம் அமுல்படுத்தப்பட்ட வேளையிலும் சாதாரண மக்களே நெருக்கடிக்கு உள்ளாகினர். அவர்களின் வருமான வழிகள் அனைத்தும் முடக்கப்பட்டதன் காரணமாக அன்றாட உணவுக்கே திண்டாடினர்.

ஆனால் அத்தியாவசிய பாவனைப் பொருட்கள் விற்பனை நிலையங்களை நடத்தி வந்த வர்த்தகர்கள் பாதிக்கப்படவில்லை. அனைத்துப் பொருட்களின் விலைகளும் அவ்வேளையில் அதிகரித்தே காணப்பட்டன. கொவிட் முடக்க காலத்திலும், இன்றைய பொருளாதார நெருக்கடியிலும் வர்த்தகர்கள் பாதிக்கப்படவே இல்லை. அனைத்துப் பொருட்களுக்கும் அதிக இலாபம் வைத்து அவர்கள் விற்பனை செய்தனர்.

பாவனைப் பொருட்களின் விலைகள் எவ்வளவுதான் அதிகரித்தாலும் அதிக இலாபத்தை வைத்து அவற்றை விற்பனை செய்வதன் மூலம் வியாபாரிகள் அதிக வருமானம் ஈட்டி விடுகின்றனர். இந்த விலை அதிகரிப்பினால் பாதிக்கப்படுபவர்கள் சாதாரண மக்களேயாவர். மக்களின் நலன் குறித்து வியாபாரிகளில் அநேகர் சிந்தித்துப் பார்ப்பதில்லை. தங்களது அதிகரித்த வரமானம் பற்றி மாத்திரமே வியாபாரிகள் சிந்திக்கின்றனர்.

நாட்டில் தற்போது கோதுமைமா பண்டங்களின் விலைகள் தொடர்பாக மக்கள் மத்தியில் அதிருப்தியே நிலவுகின்றது. கோதுமைமாவின் விலையைக் குறைப்பதற்கு சாத்தியம் உள்ள போதிலும், அதன் இறக்குமதியில் சிலர் செல்வாக்குச் செலுத்துவதால் விலைக்குறைப்பு சாத்தியமில்லையென்று தெரியவருகின்றது. எனவேதான் கோதுமைமாவின் விலை இன்றும் கீழிறங்காமலேயே உள்ளது. அதன் விலை ஓரளவுதான் குறைந்துள்ளது. எனவே பாண் விலையும் குறிப்பிடத்தக்களவு குறைக்கப்படவில்லை.

அதிக விலை கொடுத்து பாணை வாங்க வேண்டியுள்ளதாக மக்கள் கூறுகின்றனர். நகரப்பகுதிகளில் வாழ்கின்ற மக்களைப் பொறுத்தவரை பெரும்பாலும் காலை, மாலை ஆகிய இருவேளை உணவாக பாண் உட்கொள்ளப்படுகின்றது. எனவே பாணின் அதிகரித்த விலையானது மக்களை அதிகம் பாதிக்கின்றது. பாண் மாத்திரமன்றி கோதுமைமாவில் இருந்து தயாரிக்கப்படுகின்ற அனைத்து உணவுப்பண்டங்களின் அதிகரித்த விலைகளும் மக்களைப் பாதிக்கின்றன.

மலையக மக்களைப் பொறுத்தவரை அவர்கள் காலைநேர உணவாக கோதுமைமாவில் தயாராகும் ரொட்டி போன்றவற்றையே அதிகம் உண்ணுகின்றனர். எனவே கோதுமைமாவின் விலையேற்றம் மலையக தோட்டத் தொழிலாளர்களை அதிகம் பாதிக்கின்றதெனக் கூறலாம். பாண் விலையும் அவர்களைப் பாதித்துள்ளது.

பொருளாதார நெருக்கடியானது அனைத்து மக்களையும் பாதிக்கின்றதென்பதை உணவகம் நடத்துகின்றவர்கள், பேக்கரி உரிமையாளர்கள், முச்சக்கரவண்டி சாரதிகள், தனியார் பேருந்து உரிமையாளர்கள் போன்றோர் உணர்ந்து கொள்ள வேண்டியது அவசியம். தாங்கள் அதிக வருமானம் பெற்றுக் கொண்டால் மாத்திரம் போதுமென்ற சிந்தனையில் அவர்கள் நடந்து கொள்வது முறையல்ல.

வியாபாரிகளும் நுகர்வோரும் ஒருவரில் ஒருவர் தங்கியுள்ளவர்களாவர். ஒருவர் நலனில் மற்றவர் அக்கறை கொண்டு செயற்படும் போதே இருதரப்பினரும் நன்மையடைய முடியும். இன்று நாட்டில் பொருளாதார நெருக்கடி நிலவுகின்றது என்பதற்காக வியாபாரிகள் தங்கள் விருப்பப்படி பொருட்களின் விலைகளை நிர்ணயிப்பது முறையல்ல.

editor.tkn@lakehouse.lk

# வடக்கில் பொருளாதார மத்திய நிலையங்களை இயங்கச் செய்வதற்கு அமைச்சர் டக்ளஸ் ஏற்பாடு

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள பொருளாதார மத்திய நிலையங்களை பிரதேச விவசாயிகளும் மக்களும் நன்மையடையும் வகையில் செயற்படுத்துவது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.





சம்பந்தப்பட்ட பொருளாதார மத்திய நிலையங்களுக்கான கண்காணிப்பு விஜயத்தினை மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் ஆகியோர் தொடர்புபட்ட அதிகாரிகளுடன் குறித்த விடயம் தொடர்பாக ஆராய்ந்துள்ளனர்.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் புதிதாக 200 மில்லியன் செலவில் அமைக்கப்பட்டுள்ள 20 கடைகளைக் கொண்ட பொருளாதார மத்திய நிலையத்திற்கான நிர்வாகத்தினை மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் உருவாக்குவதுடன், எதிர்வரும் தைப்பொங்கல் பண்டிக்கைக்கான வியாபார செயற்பாடுகளை மேற்கொள்ளும் வகையில் அதனைத் திறந்து வைப்பதற்கு தீர்மானிக்கப்ட்டுள்ளதுடன், அதற்கு முன்னர் பூரணப்படுத்தப்பட வேண்டிய வேலைகளையும் பூர்த்தி செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள பொருளாதார மத்திய நிலையத்திற்கு சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் ஆகியோர் சந்தையின் தற்போதைய நிலைவரங்கள் நேரடியாக பார்வையிட்டனர்.

அதன்பின்னர், குறித்த சந்தைத் தொகுதியை சிறப்பாக செயற்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது

இதன்போது, கிராமிய பொருளாதார அமைச்சும் கரைச்சி பிரதேச சபையும் இணைந்து அனைத்து தரப்பினரும் நன்மையடையும் வகையில், கிளிநொச்சி பொருளாதார மத்திய நிலையத்தின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான, பொறிமுறையை வகுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், கரைச்சி பிரதேச சபையின் எதிர்பார்ப்புக்களை ஒருவார காலத்தினுள் சமர்ப்பிப்பதற்கு பிரதேச சபையின் தலைவர் இணக்கம் தெரிவித்துள்ள நிலையில், இரண்டு வாரங்களில் கிளிநொச்சி பொருளாதார மத்திய நிலையத்தினை செயற்படுத்துவதற்கான தீர்மானகரமான கூட்டத்தை கூட்டுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.





2017ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கிளிநொச்சி பொருளாதார மத்திய நிலையமானது 40 கடைகளைக் கொண்டுள்ளது. இருப்பினும் நிலையத்தின் அமைவிடம், போக்குவரத்து குறைபாடு, பிரதேச சபையின் கட்டுப்பாட்டில் உள்ள சந்தையில் மொத்த வியாபாரமும் மேற்கொள்ளப்படுகின்றமை உட்பட பல்வேறு காரணங்களினால், பொருளாதார மத்திய நிலையத்தினால் உரிய பலனை பெறமுடியாத நிலை காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டது. இந்நிலையிலேயே இன்றைய கூட்டத்தில் குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஊடகப் பிரிவு: கடற்றொழில் அமைச்சர்)

# பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்க உடனடித் தீர்வுகளை செயல்படுத்த வேண்டும்

## இலங்கை ஏற்றுமதியாளர்களின் தேசிய சபை (NCE) வலியுறுத்தல்

NATIONAL CHAMBER OF EXPORTERS OF SRI LANKA
Voice of the Exporter

முன்னேற்றகரமான அபிவிருத்தியினை அடைந்து வரும் நாடான இலங்கை, கடந்த இரண்டு வருடங்களில் பின்பற்றிய சீரற்ற சமூகப் பொருளாதாரக் கொள்கைகளால் பல இன்னல்களை எதிர்நோக்கியுள்ளது.

கொவிட் 19 நோய்த்தொற்றின் விளைவாக 2020 முழுவதும் நாடு முடக்கப்பட்டு வந்ததால் ஏற்றுமதி, சுற்றுலா மற்றும் முதலீடுகள் உள்ளிட்ட மிக முக்கியமான தொழில்களுக்கு பாதிப்புக்களை ஏற்படுத்தியது. வர்த்தகம், சுற்றுலா மற்றும் அன்னியச் செலாவணி ஆகியவற்றை முதன்மையாக நம்பியிருக்கும் ஒரு தேசம் இலங்கையாகும்.

நாடு புத்துயிர் பெற போராடிக் கொண்டிருக்கும் வேளையில், நாட்டிற்குத் தேவையான அந்நிய செலாவணியை கொண்டு வருவதற்கு ஏற்றுமதியாளர்கள் தங்கள் போராட்டத்தை தொடங்கினர். நாடு இன்னுமொரு பேரழிவைத் தாங்கிக் கொள்ள முடியாது. அரசியல் ஸ்திரமின்மை, பணவீக்கம், எரிபொருள் விலைகள் மற்றும் உணவுப் பொருட்களின் பற்றாக்குறை ஆகியவை சராசரி குடிமக்களை கடுமையாகப் பாதிக்கும் அதே வேளையில், பொது மக்களின் போராட்டங்கள் மற்றும் வெகுஜன எதிர்ப்புகள் அதிகரித்து வருவதற்கான வாய்ப்புகள் அதிகமாக்கும்.

அனைத்து சமூக ஊடக தளங்களும் இலங்கையில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தினாலும் ஏற்கனவே உருவாக்கப்பட்ட எதிர்மறையான பிம்பம் அனைத்து சர்வதேச உறவுகளையும் பாதிக்கிறது. சர்வதேச கொள்வனவாளர்கள் நாட்டின் மீது நம்பிக்கை இழந்ததன் காரணமாக பிராந்தியத்தில் உள்ள வேறு வழங்குநர்களிடம் இடம்பெயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்பதற்கு சீர்திருத்த நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படாவிட்டால், இது இலங்கையின் ஏற்றுமதித் தொழிலில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும். மேலும், நாட்டின் வர்த்தக நடவடிக்கைகளை மேலும் சீர்குலைத்து, வங்கி வசதிகளைப் பெறுவதும் இப்போது கடினமான பணியாக மாறும்.

இந்த நிலையில், நாட்டின் பாதிக்கப்பட்ட அனைத்து பகுதிகளிலும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுக்குமாறு இலங்கையின் ஏற்றுமதியாளர்களின் தேசிய சபை (NCE) அரசாங்கத்திடம் விசேட வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது. நிதி ஸ்திரத்தன்மையைப் பாதுகாக்கும் அதேவேளையில், பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் கடன் நிலைத்தன்மையை மீட்டெடுக்க இலங்கைக்கு உதவும் வகையில் சர்வதேச நாணய நிதியம் (IMF) விரிவான நடவடிக்கைகளைக் கொண்டுள்ளது.

இந்தப் பின்னணியில், இலங்கையின் வளர்ச்சித் திறனை வெளிப்படுத்த அரசியல், அரச மற்றும் பிற கட்சிகளால் ஊழலை ஒழிப்பதும் கட்டாயமாகும். மேலும், சக நாடுகளுடன் வலுவான மற்றும் மூலோபாய உறவுகளை ஏற்படுத்துவது, இலங்கையை மீட்டெடுப்பதற்கான பாதையில் நிச்சயமாக ஆதரிக்கும்.

பல பில்லியன் டொலர் கடன்கள் தேசத்தை அதன் நெருக்கடியின் ஆழத்திலிருந்து ஸ்திரப்படுத்தியிருக்கலாம். ஆனால் சீர்திருத்தங்களின் பற்றாக்குறையானது நாட்டை மீண்டும் நெருக்கடிக்குள் தள்ளிவிடக்கூடும். எனவே, அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு குறித்து அரசு தீவிரமாகக் கவனிக்க வேண்டும் என்று இலங்கை ஏற்றுமதியாளர்களின் தேசிய சபை வலியுறுத்துகிறது.

UNICEF இன் கூற்றுப்படி, இலங்கையில் ஊட்டச்சத்து குறைபாடு உள்ளது. 50% க்கும் அதிகமான குடும்பங்கள் அத்தியாவசிய உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்ய முடியாத நிலையில் காணப்படுகிறது. சராசரி இலங்கையர்களின் வாழ்க்கைத் தரம் வேகமாக வீழ்ச்சியடைந்து வருகிறது. பேராதனைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையின்படி, இலங்கையில் 42% குடும்பங்கள் வறுமையில் உள்ளன. நிலைமையை இன்னும் மோசமாக்கும் வகையில், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளபடி உத்தேசிக்கப்பட்ட 9.6 மில்லியன் மக்கள் நவம்பர் முதல் 36% வரிவிதிப்புக்கு உட்படுத்தப்படுவார்கள்.

எந்தவொரு அரசாங்கத்திற்கும் கணிசமான காலஅவகாசம் வழங்கப்பட வேண்டும் என்ற உண்மையைக் கருத்தில் கொண்டு, நெருக்கடியான பொருளாதாரத்தை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கு, ஆளும் கட்சிகள் மிகவும் ஆபத்தான பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வுகளை உருவாக்க வேண்டும்.

உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், ஊழலைக் கட்டுப்படுத்துவதற்கும், அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கும், முக்கியமாக சிங்கப்பூர், மலேசியா மற்றும் சீனா போன்ற நாடுகளுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதற்கும், இந்தியாவுடன் இருக்கும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களில் புதுப்பிப்பதற்கும், பாகிஸ்தான் இருதரப்பு உறவுகளை மேம்படுத்தவும், அண்டை நாடுகளின் ஆதரவைப் பயன்படுத்தவும். நாட்டில் விவசாயத்தை அமுல்படுத்துவது உள்ளிட்ட வலுவான பொருளாதார இயக்கங்களைச் செயல்படுத்துவதற்கு இது சரியான காலமாகும்.

சர்வதேச நாணய நிதியம் மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளபடி, தெளிவான கொள்கைகளை கடுமையாக அமுல்படுத்துவதில் கவனம் செலுத்துவதுடன், இலங்கையை மீண்டும் அதன் பெருமைக்குக் கொண்டு வர ஒரே தொலைநோக்குடன் அயராது உழைக்க வேண்டும்.

ஏற்றுமதி இன்றியமையாதது, ஏனெனில் தற்போது நாட்டிற்கு மிகவும் தேவையான அந்நிய செலாவணயை கொண்டு வரும் ஒரே துறை இதுவாகும். இது இல்லாமல் நாடு பொருளாதார ரீதியாக மேலும் வீழ்ச்சியடையும். எனவே ஏற்றுமதியை மேற்கொள்வதற்கும் நிலைநிறுத்துவதற்கும் ஆதரவளிப்பது கட்டாயமாகும்.

யார் ஆட்சியில் இருந்தாலும் காலத்திற்கு தேவையான தீர்வுகளை உடனடியாகக் கொண்டு வருமாறு ஜனாதிபதி மற்றும் அமைச்சரவையை இலங்கை ஏற்றுமதியாளர்களின் தேசிய சபை (NCE) வலியுறுத்துகிறது. ஏற்றுமதி மூலம் நமது பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதில் மாற்றத்தை ஏற்படுத்த அதிகாரிகளுக்கு ஆதரவளிக்க இலங்கை ஏற்றுமதியாளர்களின் தேசிய சபை (NCE) உறுதிபூண்டுள்ளது.

# கஷ்டப் பிரதேச மாணவர்களுக்கு உதவும் கல்முனை ரோட்டரி கழகம்

அம்பாறை மாவட்ட கஷ்டப்பிரதேச தேவையான மாணவர்களுக்கு கல்முனை ரோட்டரி கழகம் கற்றல் உபகரணங்களை வழங்கி உதவி வருகின்றது. கழகத்தின் புதிய தலைவர் ரோட்டரியன் விஜயரெத்தினம் விஜயசாந்தன் தலைமையில் உதவித் திட்டம் முன்னெடுக்கபட்டு வருகிறது.





கஷ்டப்பிரதேச மாணவர்களுக்கு அப்பியாசக்கொப்பிகள் வழங்கும் நிகழ்வின் 4 ஆம் கட்டமாக திருக்கோவில் வலயத்துக்கு உட்பட்ட நான்கு பின்தங்கிய பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கி வைக்கப்பட்டன. மண்டான அ.த.க. பாடசாலை, பாலக்காடு பாலவிநாயகர் வித்தியாலயம், தம்பிலுவில் கனகரத்தினம் மகாவித்தியாலய மாணவர்களுக்காக ரூபா 375,000 செலவில் இவை வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் கல்முனை ரோட்டரி கழகத்தலைவர் றோட்டரியன் விஜயரெத்தினம் விஜயசாந்தன் உள்ளிட்ட கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இதற்கான நிதியுதவி அவுஸ்ரேலிய கன்பேரா வெஸ்டர்ன் கிறிக் றொட்டரிக் கழகத்தினால் 4ம் கட்டமாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வி.ரி.சகாதேவராஜா...
(காரைதீவு குறூப் நிருபர்)





# சீனா ஆரம்பித்துள்ள கடலட்டை திட்டத்தினால் வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்பு!



வடபகுதியில் உருவாக்கப்பட்டுள்ள கடலட்டைப் பண்ணைகள் அப்பிரதேச கடற்றொழிலாளர்கள் மத்தியில் எதிர்ப்புகளையும் சர்ச்சைகளையும் தோற்றுவித்துள்ளன. உள்ளூர் மீனவர்களுக்கு இதனால் வருமான இழப்புகளும் பாதிப்புகளும் ஏற்பட்டுள்ளதாக கண்டனம் தெரிவிக்கப்படுகின்றது.

உள்ளூர் மீனவர்களது பாரம்பரிய மீன்பிடித் தொழிலுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் விதத்தில் கடலட்டைப் பண்ணைகள் அமைந்துள்ளதாக வடக்கிலுள்ள மீன்பிடித் தொழிலாளர் அமைப்புகள் எதிர்ப்புக்குரல் எழுப்பி வருகின்றன.

கடலட்டைப் பண்ணைகளுக்கு பின்புலத்தில் சீனாவின் கரம் இருப்பதாக அங்குள்ள மீனவர்கள் குற்றம் சாட்டி வருகின்றனர். பெரும் வர்த்தகப் புள்ளிகள் வடக்கிலுள்ள கடலட்டைப் பண்ணைகளில் முதலீடு செய்துள்ளதாக தகவல்கள் வெளிவருகின்றன. அவர்களது முகவர்களாக உள்ளூர் பிரமுகர்கள் சிலர் உள்ளதாகவும் தெரியவருகிறது. செல்வாக்கு மிகுந்த இவர்களால் உள்ளூர் மீனவர்கள் அச்சுறுத்தப்படுவதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில் கடலட்டை பண்ணைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. சில இடங்களில் கடலட்டை குஞ்சு பொரிக்கும் பண்ணைகள் உள்ளன. அவற்றை சீன முதலீட்டாளர்கள் நடத்தி வருகின்றனர்.

கடலட்டைப் பண்ணைகள் கரையோரத்தை அண்டிய ஆழம் குறைந்த கடற்பகுதியில் அமைக்கப்படுகின்றன. இதற்காக பல ஏக்கர் பரப்பளவுள்ள கடல்பகுதி தனியாருக்கு வழங்கப்படுவதனால், இந்தப் பகுதியில் இதுவரை காலமும் மீன்பிடித்துத் தொழில் நடத்தி வருகின்ற பலநூற்றுக்கணக்கான மீனவர்கள் தமது வருமானத்தை இழந்து வருகின்றனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அரியாலை, அல்லைப்பிட்டி, புங்குடுதீவு பிரதேசங்களிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் கிராஞ்சி, வலைப்பாடு, வேரவில், பள்ளிக்குடா, நாச்சிக்குடா, இரணைதீவு ஆகிய பகுதிகளிலும் கடலட்டைப் பண்ணைகள் அமைக்கப்படுகின்றன.

உள்நாட்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் கடலட்டைப் பண்ணைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பண்ணைகளை அமைப்பதற்கு பெருந்தொகை நிதியை சாதாரண தொழிலாளர்களால் செலவிட முடியாது. பெரும் நிறுவனங்களே கடலட்டைப்பண்ணைகளில் முதலீடு செய்துள்ளன.

250 பண்ணைகள் கிளிநொச்சி மாவட்டத்திலும், 50 பண்ணைகள் யாழ் மாவட்டத்திலும் அமைக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக அந்தப் பிரதேசங்களில் இறால் மற்றும் நண்டு பிடித்தலுக்காக கூடு அமைப்போர், சிறுவலைகள் கொண்டு மீன்பிடிப்போர் தொழில் செய்ய முடியாதுள்ளனர். அவர்கள் தொழில் செய்து வந்த இடங்கள் கடலட்டைப் பண்ணைப் பிரதேசத்துக்குள் அகப்பட்டுப் போயுள்ளன.

"தென்னிலங்கையில் கால்பதித்துள்ள சீனா, தற்போது வடக்கிலும் தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. கௌதாரிமுனை மீனவர்கள் கடலட்டை வளர்ப்புத் திட்டத்துக்காக முன்வைத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டு, தற்போது சீன நிறுவனத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சீனாவுக்கு கடலட்டை ஏற்றுமதி செய்யும் இடமாக இது உள்ளது. இது இலங்கைத் தமிழர்களுக்கு மாத்திரமன்றி, இந்தியாவின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலான விடயமாகும்" என்று வடக்கிலுள்ள தமிழ் அரசியல்வாதிகள் பலர் கூறுகின்றனர்.

கௌதாரிமுனை பிரதேசத்தில் கிராமத்தவர்களின் பிரதான ஜீவனோபாயம் இறால் மற்றும் நண்டு பிடித்தலாகும். அட்டைப் பண்ணை முதலீடு தங்களது வாழ்வாதாரத்தை பாதிப்பது பற்றி அங்குள்ள மீனவர்கள் வேதனையுடன் கூறுகின்றனர்.

மண்ணித்தலை கிராமத்தில் வாழும் மீன்பிடித் தொழிலாளி ஒருவர் இதுபற்றிக் கூறுகையில், சீன முதலீட்டாளர்களால் அமைக்கப்பட்டு வரும் இது போன்ற கடலட்டைப் பண்ணைகளால் சிறுதொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாகக் குறிப்பிட்டார்.

"கரையோரப் பகுதியானது நண்டு, இறால் மற்றும் மீன்வகைகள் இனப்பெருக்கம் செய்யும் இடமாகும். இந்தப் பண்ணைத் திட்டத்தினால் அவற்றின் இனப்பெருக்கம் பாதிக்கப்படுகின்றது. அத்தோடு சாதாரண மீனவர்களாகிய எங்களது வாழ்வாதாரமும் பாதிக்கப்படுகின்றது. எனவே நாங்கள் கடலட்டைப் பண்ணைகளை எதிர்க்கின்றோம்" என அவர் தெரிவித்தார்.





## கடலட்டைப் பண்ணைகளுக்காக கடலோரங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதால் உள்ளூர் மீனவர்கள் கடலுக்குச் செல்ல முடியாத அவலம்!

அதே கிராமத்தைச் சேர்ந்த மற்றொருவர் கூறும் போது, சீன முதலாளிகளால் அமைக்கப்பட்டிருக்கும் கடல் அட்டைப் பண்ணை, தாங்கள் படகுகளை கொண்டு செல்லும் பாதையில் அமைக்கப்பட்டிருப்பதால் மீன்பிடிக்கச் செல்ல முடியாமல் உள்ளதாகக் கூறினார்.

கிராஞ்சிக் கிராமத்தைச் சேர்ந்த மீனவர் ஒருவர் குறிப்பிடுகையில், சகல அட்டைப் பண்ணைகளும் சாதாரண தொழிலாளர்களுக்கு பெரும் இடையூறாக உள்ளன என்றார்.

"எங்களது படகுகளை நாங்கள் சுதந்திரமாக எடுத்துச் செல்ல முடியாதுள்ளது. எமது வழிகளைக் கூட அவர்கள் மறித்துள்ளார்கள். தவறுதலாக அவர்களது வேலிக்கு அண்மையாக நாங்கள் போனால் கூட, எங்களைத் திருடர்கள் போல நடத்துகின்றார்கள், எங்களை விசாரிக்கின்றார்கள். அவர்கள் கொள்ளை இலாபம் ஈட்டுவதற்காக, கடலில் உள்ள சிறிய குஞ்சு அட்டைகளை பொறுக்கி எடுக்கின்றார்கள். இதனால், கடலட்டையின் இனப்பெருக்கம் இல்லாமல் செய்யப்படுகின்றது. சீனாவின் செல்வாக்குடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த கடலட்டைப் பண்ணைத் திட்டங்கள் நிறுத்தப்பட வேண்டும். எங்கள் பாரம்பரிய முறைகளுக்கு அனுமதி அளிக்கப்பட வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார்.

**'சீன மக்களுக்கு உணவு கொடுப்பதற்காக எமது வருமானத்தை தாரைவார்க்க முடியாது' என்கின்றனர் வடக்கு மீனவர்கள்!**

கடலட்டைப் பண்ணை உருவாக்குவதற்காக ஏக்கர் கணக்கில் கடலை அளந்து தனியாருக்கு கொடுத்துள்ளனர். எமது குடும்பமும் நடுத்தெருவுக்கு வந்துவிட்டது. இந்தக் கடல் எம் எல்லோருக்கும் பொதுச் சொத்தாகும். அதை தனியாருக்கு தாரைவார்ப்பதை நாங்கள் எதிர்க்கின்றோம்" என மற்றொருவர் தெரிவித்தார்

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பூவரசன்தீவில் இலங்கை – சீன கூட்டு நிறுவனம் ஒன்றே கடலட்டைப் பண்ணை ஆரம்பித்துள்ளதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

தற்போது சீனர்கள் கடலட்டைக் குஞ்சுகளை இங்கு விட்டுள்ளதாக இவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இது குறித்து யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்கங்கள் சமாசங்களின் சம்மேளன பிரமுகர் ஒருவர் குறிப்பிடுகையில், "சீன முதலீட்டாளர்களால் முன்னெடுக்கப்படுகின்ற கடலட்டை காரணமாக பிரச்சினை என்பது வடக்கு கடற்றொழிலாளர்களை மாத்திரமே சார்ந்தல்ல. ஒட்டுமொத்த இலங்கை மக்களையும் சார்ந்த பிரச்சினையாகவே உள்ளது. ஏனெனில் இந்த பண்ணைகளினால் மீன் உற்பத்தி பெரிதும் பாதிக்கப்படுகின்றது" என்றார்.

யாழ்குடா மீன்பிடித் தொழிற்துறையில் உள்ள உணவுச் சங்கிலி பொறிமுறைகளுக்கும் கடலட்டைக்கும் தொடர்புள்ளது. மீன் இனப்பெருக்கத்துடனும் இந்த கடலட்டைகள் தொடர்புபடுகின்றன. எனவேதான் குறுநகர் பகுதி குடா கடல் அல்லது மண்டைதீவு , வேலணை போன்ற பகுதிகளில் இயற்கையாகவே கடலட்டைகள் காணப்படுகின்றன. கடல் வளங்களைப் பாதிக்காத வகையில் 80 கிராம் எடைக்கு மேலான கடலட்டைகளை எடுத்து தமது வாழ்வாதாரத்தை பாதுகாத்துக் கொள்ளும் சுமார் 1000 குடும்பங்கள் வரை இந்த பிரதேசங்களில் காணப்படுகின்றன.

குருநகர் தொடக்கம் மெழுஞ்சிமுனை வரையில் இவ்வாறான குடும்பங்கள் உள்ளன. இவர்களின் ஏற்றுமதி எவரது பார்வைக்கும் தெரிவதில்லை. ஏனெனில் அவர்கள் கடல் வளத்திற்கு பாதிப்பில்லாமலும், இயற்கையாகவுமே இத்தொழிலில் ஈடுபடுகின்றனர். ஆனால் இயற்கைக்கு மாறாக கடலட்டை பண்னைகள் யாழ்குடா பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் கடற்றொழிலை நம்பியுள்ள மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

2014 ஆம் ஆண்டு அரியாலையில் குயிலன் என்ற நிறுவனத்தை சீனா ஸ்தாபித்தது. கடந்த 7 வருடங்களாக இந்த நிறுவனம் கடற்றொழிலாளர்கள் என்ற போர்வையிலேயே செயற்படுகின்றது. ஆனால் கடலட்டை பெருக்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கியதாக இல்லை. மாறாக ஆய்வு செய்வதாகவே கூறி வருகின்றது. சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான கடற்சூழல் மாற்றங்கள் அதிகம். கடலட்டைகளை உருவாக்கும் தொழிநுட்பத்தை இலங்கையில் முன்னெடுப்பது எந்தளவிற்கு சாத்தியமானது என்பது கேள்விகுறியான விடயமே என்கிறார்கள் வடக்கிலுள்ள சூழலியலாளர்கள்.

"சீனா தன்னுடைய மக்களுக்கு உணவை பெற்றுக் கொடுப்பதற்காக எமது கடல் வளத்தை அழிக்கின்றது. இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் மக்கள் கடலட்டையை உண்ணுவதில்லை" என்பது வடபகுதி மக்களின் கருத்தாகும்.

வடக்கில் சீனாவின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாகவும் வடக்கில் கடலட்டை பண்ணையை ஆரம்பிப்பதற்கு அதிநவீன கருவிகளை சீனா பயன்படுத்தியதாகவும் இந்திய புலனாய்வுத் தரப்பினால் குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளதென கூறியுள்ள தமிழக மாநில புலனாய்வு பணியகம் கரையோர பகுதிகளில் பாதுகாப்பை அதிகரிக்கும்படியும் கோரியிருந்தது.

தமிழ்நாட்டில் அணுசக்தி நிலையங்கள், துறைமுகங்கள் உள்ளதால் போதிய பாதுகாப்பு நடவடிக்கைகள் அவசியம் என்பது தமிழகத்தின் கருத்தாக உள்ளது.

**எஸ்.சாரங்கன்...**

# யூனியன் அஷ்யூரன்ஸ் வருட மத்திய விநியோக விருதுகள்; 2022 இல் சிறந்த செயற்பாட்டாளர்கள் பாராட்டி கௌரவிப்பு












இலங்கையின் முதல்தர ஆயுள் காப்புறுதி சேவைகளை வழங்கும் யூனியன் அஷ்யூரன்ஸ் தனது வருட மத்திய விநியோக விருதுகள் 2022 நிகழ்வை அண்மையில் ஏற்பாடு செய்திருந்தது. முகவர் மற்றும் கூட்டாண்மை பிரிவுகளில் சிறப்பாக செயலாற்றியிருந்தவர்களை கௌரவிக்கும் வகையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இரு பிரிவுகளையும் சேர்ந்த 450 இற்கும் அதிகமான ஆலோசகர்கள் மற்றும் கணக்கு முகாமையாளர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். இந்நிகழ்வு வாத்துவ, ப்ளூ வோட்டர் ஹோட்டலில் இடம்பெற்றது.

பிரதம நிறைவேற்று அதிகாரி ஜுட் கோம்ஸ் கருத்துத் தெரிவிக்கையில், "இந்த ஆண்டு எம் அனைவருக்கும் நெருக்கடிகள் நிறைந்ததாக அமைந்துள்ளது. சந்தைச் சூழல்களில் பல தடைகள் எழுந்த போதிலும், முதல் அரையாண்டு காலப்பகுதியில் நிறுவனம் முன்நோக்கி நகர்ந்திருந்ததுடன், பல்வேறு பிரிவுகளில் முன்னேற்றங்கள அவதானித்திருந்தது. இந்த முன்னேற்றங்களை எய்துவதற்கு எமது ஆலோசகர்கள் முக்கிய பங்களிப்புகளை வழங்கியுள்ளனர். எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த பெறுமதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு அப்பால் சென்று, நிதியளவில் பாதுகாப்பாக திகழ்வதற்கு உதவும் வகையில் இயங்குகின்றமைக்காக எமது சகல ஆலோசகர்களின் அர்ப்பணிப்பான செயற்பாடுகளுக்கும் நான் நன்றி தெரிவிக்கின்றேன்" என்றார்.

சிலாபம் பிராந்தியத்தின் சானக அப்புஹாமிக்கு, தேசிய புதிய வியாபார சம்பியன் எனும் உயர்ந்த விருது முகவர் பிரிவில் வழங்கப்பட்டது.

கூட்டாண்மை நாளிகை புதிய வியாபார சம்பியன் வெற்றியாளராக பிரனீத் விமலசிறி தெரிவு செய்யப்பட்டிருந்தார். கயான் பண்டாரவின் தலைமைத்துவத்தின் கீழ் வோட் பிளேஸ் பிராந்தியம் சிறந்த பிராந்தியத்துக்கான விருதை சுவீகரித்தது. யோகநாதன் லட்சுமிஹரன் தலைமையில் இயங்கும் கிழக்கு வலயம், சிறிய நடுத்தரளவு பிரிவில் சிறந்த வலயத்துக்கான விருதை பெற்றுக் கொண்டது. பாரிய பிரிவில் சிறந்த வலயத்துக்கான விருதை வட வலயம் பெற்றுக் கொண்டது.

பிரதம விநியோக அதிகாரி செனத் ஜயதிலக கருத்துத் தெரிவிக்கையில், "2022 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் சிறந்த செயற்பாடுகளை பதிவு செய்திருந்தமைக்காக எமது அணியினர் தொடர்பில் நான் பெருமை கொள்கின்றேன். நிபுணத்துவம் மற்றும் சேவைச் சிறப்பு போன்றவற்றின் அடிப்படையில் எமது ஆலோசகர்கள் மற்றும் கணக்கு முகாமையாளர்கள் வழிநடத்தப்படுகின்றனர். அவற்றினூடாக எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவைகளைப் பெற்றுக் கொடுக்க முடிந்துள்ளது. மேலும், சகல ஆலோசகர்களுக்கும் எமது நவீன பயிற்சிகளினூடாக தமது திறமைகளை மேம்படுத்திக் கொண்டு, தமது தொழில் நிலைகளில் முன்னேறுவதற்கான வாய்ப்பை வழங்கும் கலாசார முறைமை எமது நிறுவனத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. எமது வெற்றிகரமான செயற்பாடுகளில் ஆலோசகர்கள் முக்கிய அங்கமாக அமைந்துள்ளனர் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளதுடன், அவர்கள் தொடர்ந்து தம்மை விருத்தி செய்து, சிறந்த வெற்றிகரமான சாதனையை எய்தச் செய்யும் சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதில் நாம் எப்போதும் கவனம் செலுத்துகின்றோம்" என்றார்.

ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்சின் அங்கத்துவ நிறுவனமாக யூனியன் அஷ்யூரன்ஸ் திகழ்கின்றது. துறையில் மூன்று தசாப்த கால வெற்றிகரமான சேவையை யூனியன் அஷ்யூரன்ஸ் பூர்த்தி செய்துள்ளதுடன் சந்தை மூலதனவாக்கமாக ரூ. 15.7 பில்லியனைக் கொண்டுள்ளது. 2022 ஜுன் மாதமளவில் ஆயுள் நிதியமாக ரூ. 51.5 பில்லியனையும் கொண்டிருந்தது. இலங்கையர்களின் கனவுக்கு வலுச்சேர்க்கும் வகையில் இயங்கும் யூனியன் அஷ்யூரன்ஸ், கல்வி, ஆரோக்கியம், பாதுகாப்பு, ஓய்வூதியம் மற்றும் முதலீடு போன்ற ஆயுள் காப்புறுதியுடன் தொடர்புடைய தீர்வுகளை இலங்கையர்ளுக்கு வழங்குகின்றது. நாடளாவிய ரீதியில் பரந்த கிளை வலையமைப்பினூடாக 3000 க்கும் அதிகமான ஊழியர்களைக் கொண்டு இயங்குகிறது.

# Euromoney Market Leaders Awards 2022 நிகழ்வில் விருதுகளை வென்றுள்ள DFCC வங்கி




DFCC வங்கி வாடிக்கையாளர்களை மையப்படுத்திய செயல்பாடு மற்றும் டிஜிட்டல் புத்தாக்கத்திற்கான தனது அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில், 2022 ஆம் ஆண்டிற்காக Euromoney ஆல் இரண்டாவது ஆண்டாகவும் வாக்களிக்கப்பட்டு, இலங்கையில் Market Leader in Cash Management என்ற விருதையும், இந்த ஆண்டிற்கான Best Service முதலாம் இடத்திற்கான விருதையும் தனதாக்கியுள்ளது.

இந்த விருது அங்கீகாரங்களை பெற்றுள்ளமை தொடர்பில் DFCC வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியான திமால் பெரேரா கருத்து வெளியிடுகையில், "இலங்கையில் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாகவும் Market Leader for Cash Management என்ற விருது அங்கீகாரத்தைப் பெற்றுள்ளமை ஒரு பெரும் கௌரவமாகும். வாடிக்கையாளரை மையமாகக் கொண்ட செயல்பாடுகள் மீதான எங்கள் அர்ப்பணிப்பு மற்றும் எங்கள் iConnect தீர்வின் ஒட்டுமொத்த வெற்றிக்கு இது சான்றாக அமைந்துள்ளது. இந்த கருத்துக்கணிப்பு வாடிக்கையாளர்களிடமிருந்து நேரடியாக பெறப்படுகின்ற கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டதால், இந்த விருதுகள் மற்றும் பாராட்டுகளைப் பெற்றுள்ளமை நாம் வழங்கும் வாடிக்கையாளர் திருப்தி மற்றும் நாங்கள் தோற்றுவிக்கும் மதிப்பை உண்மையாக பிரதிபலிக்கிறது" என்றார்.

அதிநவீன பண முகாமைத்துவத் தீர்வுகளை வழங்கும் iConnect இலத்தினியல் வங்கிச்சேவைத் தளம், ஒரு பட்டனைக் அழுத்துவதன் மூலம் வாடிக்கையாளர்கள் தங்கள் தினசரி பரிவர்த்தனை வங்கிச்சேவைத் தேவைகளை நிறைவேற்ற உதவும் வகையில் அதிநவீன பணப்புழக்கம், கொடுப்பனவுகள் மற்றும் பண முகாமைத்துவ கட்டமைப்பு ஆகும். இந்த புத்தாக்கமான தீர்வு வாடிக்கையாளர்களின் நிதி மற்றும் திறைசேரி அலகுகள் உள்நாட்டிலும், உலகளாவிய ரீதியிலும் DFCC வங்கியில் பேணப்படும் நிறுவன கணக்குகளை அணுக இடமளிக்கிறது. இது மேம்பட்ட பாதுகாப்பு அம்சங்களையும் வழங்குவதுடன், கணக்கு மீதிகளை நிகழ்நேரத்தில் பார்த்து அறிந்துகொள்ளவும், உள்ளூர் மற்றும் எல்லை தாண்டிய கொடுப்பனவுகள் மற்றும் சேகரிப்பு தீர்வுகளை வருடத்தில் 365 தினங்களும் 24 மணி நேரமும் எங்கும் கிடைக்கச் செய்யும்.

# சதாஹரித குழுமம்–வணிக வனவியல் துறையில் 20 ஆண்டு கால நிறைவு



இலங்கையின் பசுமை வணிக வனவியல் துறையில் முன்னணியில் திகழும் சதாஹரித குழுமத்தின் பெருமைமிக்க 20 ஆவது ஆண்டு நிறைவை 2022 ஆம் ஆண்டு குறிக்கிறது. சதாஹரித குழுமம் தனது ஆண்டு நிறைவை முன்னிட்டு, இலங்கை மக்களுக்கு சமீபத்திய பசுமை முதலீட்டு திட்டங்கள் மற்றும் விசேட வரப்பிரசாதங்களை வழங்குவதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறது.

இலங்கையின் வர்த்தக வனவியல் துறையில் இரண்டு தசாப்தகால பெருமைமிக்க சாதனைகளுடன், சதாஹரித குழுமம் இலங்கைக்கு புத்தாக்கமான பசுமை முதலீட்டுத் திட்டங்களை அறிமுகப்படுத்தியதுடன், தற்போது மிகவும் பிரபலமான அகில் மரக் (Agarwood) காடுகளை இலங்கைக்கு அறிமுகப்படுத்திய முன்னோடி நிறுவனமாகப் போற்றப்படுகிறது.

2002 இல் ஸ்தாபிக்கப்பட்ட சதாஹரித குழுமம், இலங்கையில் பெருந்தோட்டம், ஏற்றுமதி மற்றும் முதலீட்டுத் துறையில் முன்னணி நிறுவனமாக தேசிய பொருளாதாரத்தில் ஒரு முக்கிய சாதனை இலக்கினை எட்டியுள்ளது. பசுமை முதலீட்டுத் துறையில் முன்னிலை வகிக்கும் ஒரு நிறுவனம் என்ற வகையில், நாட்டிற்கு டொலர்களை ஈட்டும் நிறுவனங்கள் மத்தியில், ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கு உட்பட உலகளாவிய அகில் மரச் சந்தையில் இலங்கையின் பெயரை நிலைநாட்டியிருப்பது நிறுவனம் தனது 20 ஆண்டு கால வர்த்தகப் பயணத்தில் ஈட்டியுள்ள பெரிய சாதனையாகும்.

இதுவரை 1,300 க்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு நேரடி வேலை வாய்ப்புகளை உருவாக்கியுள்ள சதாஹரித குழுமம், மறைமுக வேலை வாய்ப்பு உருவாக்கம் மூலம் இலங்கையில் வேலையின்மையைக் குறைப்பதில் பெரும் பங்களிப்பை வழங்கியுள்ள ஒரு உள்ளூர் நிறுவனமாகும்.

தேசத்தின் பசுமை வர்த்தகநாமமாக, சதாஹரித குழுமத்தின் முதலாவது அகில் மர பெருந்தோட்டம், தனது வர்த்தகத்தின் மூலம் நாட்டின் சுற்றாடல் நிலைபேற்றியலை பேணுவதற்கு நேரடியாக பங்களிக்கும் வகையில், களுத்துறை மாவட்டத்தில் நேபொடவில் அமைந்துள்ளது. ஆசியாவின் மிகப் பெரிய அகில் மரச் செடி நாற்று மேடையான சதாஹரித தாவர நாற்று மேடை மற்றும் ஆராய்ச்சி மையம் இங்கிரிய பகுதியில் நிறுவப்பட்டுள்ளது. சதாஹரித வணிக காடுகளின் 3,000 ஏக்கர் நிலத்தில், 1,100 ஏக்கருக்கு மேல் அகில் மரங்கள் ஆக்கிரமித்துள்ளன. வாடிக்கையாளர் நலன்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும், இடர் முகாமைத்துவ முறைக்கு அமைவாகவும், நாட்டின் பல பகுதிகளை உள்ளடக்கும் வகையில் அதன் பெருந்தோட்டங்களை நிறுவுவதற்கு நிறுவனம் கடுமையாக உழைத்துள்ளது. .

உலகின் மிக விலையுயர்ந்த வாசனைத் திரவியங்களை உற்பத்தி செய்வதற்கான மூலப் பொருளாகப் பயன்படுத்தப்படும் அகில் மர ஏற்றுமதிக்கு மேலதிகமாக, சதாஹரித இலங்கை வாசனை திரவிய வர்த்தகநாமத்தையும் 2018 ஆம் ஆண்டில் உலகிற்கு அறிமுகப்படுத்தியிருந்தது. அகில் மர எண்ணெய் பிரித்தெடுத்தல் மற்றும் சீவல்கள் தயாரிக்கும் தொழிற்சாலையும் இங்கிரியவில் நிறுவப்பட்டுள்ளது.

# சமூக சீர்கேடுகளை கட்டுப்படுத்த கிளிநொச்சி மாவட்டத்தில் விசேட குழு

## அமைச்சர் டக்ளஸின் ஆலோசனையில் முன்னெடுப்பு



கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகரித்துள்ள போதைப் பொருள் பாவனை, சிறுவர் துஸ்பிரயோகம் உட்பட சமூக சீர்கேடுகளை கட்டுப்படுத்துவதற்கு, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கிய ஆலோசனையின் அடிப்படையில், விசேட குழு ஒன்றினை, உருவாக்கி அவற்றைக் கட்டுப்படுத்தற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று (04) நடைபெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் அமைக்கப்படவுள்ள இந்த குழு, போதைப்பொருள் பாவனை, பாலியல் துஷ்பிரயோகம், இளவயது கர்ப்பம், குடும்ப வன்முறை, தற்கொலைகள் உள்ளிட்ட முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் செயற்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு தொடர்பாக மாவட்டத்திற்கான பொறிமுறையை உருவாக்குவதற்கான கலந்துரையாடல் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பங்குபற்றலுடன் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில், உணவுப் பாதுகாப்பினையும் போஷாக்கினையும் உறுதிப்படுத்தும் வகையில் விவசாய நடவடிக்கைகளை ஊக்குவிப்பது மற்றும் விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்களுக்கு தீர்வு காணுவது தொடர்பாக ஆராயப்படடது.

அதனடிப்படையில், வன பாதுகாப்பு மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களம் போன்றவற்றினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள மக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பாகவும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டிருந்நமை குறிப்பிடத்தக்கது.

### சிங்கப்பூர் சர்வதேச...

விரைவுபடுத்துமாறு ஜனாதிபதி நீதியமைச்சரிடம் பணிப்புரை விடுத்துள்ளார்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீ அனர்த்தத்திற்குள்ளான போது ஏற்பட்ட சேதங்களுக்கு நட்டஈடு கோரி சிலர் உச்சநீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுக்களைத் தாக்கல் செய்தனர்.

மேற்படி நிறுவனத்திற்கு எதிராக சர்வதேச நடுவர் மன்றத்தில் வழக்கு தொடுப்பது தொடர்பில் சட்டமா அதிபர் சஞ்ஜய் இராஜரத்தினமும் அறிவுறுத்தியுள்ளதாக ஜனாதிபதியின் ஆளணி பிரதானி சாகல ரத்நாயக்க ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார்.

குறித்த கப்பல் நிறுவனத்திடமிருந்து கோரப்படும் நட்டஈட்டு தொகையை குறிப்பிட்டு சிங்கப்பூரிலுள்ள நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வது தொடர்பில் அமைச்சரவைப் பத்திரமொன்றை தயாரிக்குமாறும் ஜனாதிபதி நீதியமைச்சருக்கு பணிப்புரை விடுத்துள்ளார். அதற்கிணங்க அடுத்துவரும் அமைச்சரவைக் கூட்டத்தின்போது அந்த அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### அதிதிகளுக்கான தேநீர்...

இம்முறை நடத்த வேண்டாம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்ற பிரதானிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலையை கவனத்திற்கொண்டே ஜனாதிபதி இத்தகைய தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. நிதியமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 14ஆம் திகதிஅடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து வரவு செலவுத் திட்ட விசேட உரையை ஆற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### முட்டை விலையில்...

என்றும் தெரிவித்துள்ள அவர், நிர்ணய விலையை விட அதிகரித்த விலையில் முட்டையை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நாடளாவிய ரீதியில் சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதிவேளை அதிக விலைக்கு முட்டையை விற்பனை செய்த நபர் ஒருவருக்கு ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அறுபது ரூபா வீதம் ஐந்து முட்டைகளுக்கு 300 ரூபாவைப் பெற்றுக் கொண்டுள்ளவீரகெட்டியபகுதிவர்த்தகர் ஒருவருக்கு எதிராக மாவட்ட நுகர்வோர் விவகார அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளதுடன் அவரை கைது செய்து வலஸ்முல்ல மஜிஸ்திரேட் நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்தியுள்ளதுடன் அதனையடுத்து அவருக்கு ஒரு இலட்சம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதாக அந்த அதிகார சபை தெரிவித்தது.

### குரங்கு காய்ச்சல்...

தொற்று ஏற்படலாம் என சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார்.

குரங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட ஒருவர் நாட்டில் இனங்காணப்பட்டமை குறித்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், "இந்த காய்ச்சலின் சிறப்பு அம்சம் என்னவென்றால், உங்களுக்கு புண்கள் மற்றும் சொறி ஏற்படும். மேலும், உங்கள் ஆசனவாயைச் சுற்றி மற்றும் உங்கள் பிறப்புறுப்புகள் காயமடைந்தால், உடனடியாக மருத்துவ உதவியை நாடுங்கள்.

இது சம்பந்தமாக உறுதியான உறுதிப்படுத்தல் செய்து, நோய் முழுமையாக குணமாகும் வரை பாலுறவு நடவடிக்கைகளில் இருந்து விலகி இருங்கள். இது உலகம் முழுவதும் பரிந்துரைக்கப்படுகிறது.

இந்த நோயின் சிறப்பு என்னவென்றால், 80 வீதத்துக்கும் அதிகமான நோயாளிகள் தாங்களாகவே குணமடைகிறார்கள்.

இந்த நோயைக் கட்டுப்படுத்த நாடு என்ன நடவடிக்கைகள் எடுக்கும் என்பதை தொழில்நுட்பக் குழு அறிவிக்கும் வரை மக்கள் இந்த விடயத்தில் தேவையற்ற பீதியின்றி இருக்கவும்" என மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குரங்குக் காய்ச்சல் ஒரு கடுமையான கொடிய நோயல்ல என்றும் ஆனால் அது பாதிக்கப்பட்ட நபரின் திரவங்கள் மற்றும் சுவாசத் துளிகள் மூலம் மற்றவருக்கு இலகுவாகப் பரவக்கூடியது என மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் வைராலஜி பிரிவின் தலைவி, விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் ஜானகி அபேநாயக்க தெரிவித்தார். இந்த நோயிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ள முகக்கவசம் அணிவது மற்றும் கைகளை சுத்தம் செய்வது உள்ளிட்ட சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவது முக்கியம் என்றும் அவர் கூறினார். இம்மாதம் முதலாம் திகதி டுபாயிலிருந்து வந்த 20 வயதுடைய நபரொருவர் குரங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளமை அடையாளம் காணப்பட்டதாக மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் நேற்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### சுற்றுலா விசாவில்...

அமைய மேற்படி தடை விதிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

சுற்றுலா விசா மூலம் வெளிநாடுகளுக்கு செல்வோர் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதாகவும் சித்திரவதைகளுக்கு உள்ளாகும் பெண்கள் தொடர்பான தகவல்கள் கிடைத்து வருவதாகவும் அது தொடர்பில் ஊடகங்கள் மூலமும் தகவல்கள் வெளியிடப்பட்டு வருவதாகவும் அந்தப் பணியகம் தெரிவித்துள்ளது.

இலங்கையிலிருந்து தொழில் வாய்ப்புகளுக்காக வெளிநாடு செல்வோர் முறைப்படி வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்து வெளிநாடுகளுக்கு செல்ல வேண்டியதன் அவசியத்தையும் அந்த பணியகம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

### மீண்டும் அதே இடத்தில்...

புனரமைக்கப்பட்டுள்ள அமரர் டி.ஏ.ராஜபக்ஷவின் உருவச்சிலை தங்காலை நகரில் அமைந்துள்ள ஏற்கனவே அவரது உருவச்சிலை இருந்த இடத்தில் மீள திறந்து வைக்கப்பட்டுள்ளது.அதுதொடர்பில் கருத்து தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷபின் புதல்வாரன பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, மேற்படி உருவச் சிலையை சிதைப்பதற்காக அன்றை தினம் திட்டமிட்டு குழுவொன்று செயற்பட்டதாகவும் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டனை வழங்கப்படுவார்கள் என்ற நம்பிக்கை தமக்குள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

### தென்கொரியாவில் உயிரிழந்த...

உடத்தலவின்னவைச் சேர்ந்த இளைஞனின் குடும்பத்தினருக்கு கொரிய அரசாங்கம் மற்றும் கொரிய மக்கள் சார்பாக கொரிய தூதுவர் சந்துஷ் வூஜின் ஜியோங் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துள்ளார்.

தூதுவர் நேற்றுமுன்தினம் (3) பிரதமர் அலுவலகத்தில் பிரதமரை சந்தித்து தமது அரசாங்கத்தின் சார்பாக இரங்கலைத் தெரிவித்தார். ஹாலோவீன் கொண்டாட்டத்தின் போதான கூட்ட நெரிசலில் 26 வெளிநாட்டவர்கள் உட்பட 156 பேர் உயிரிழந்தமைக்கும், காயமடைந்தவர்களுக்கும் இலங்கை அரசாங்கம் மற்றும் மக்கள் சார்பாக தமது அனுதாபங்களையும் பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

### நாட்டில் முதலாவது...

விமான நிலையத்தை வந்தடைந்ததாகவும் அவருக்கு காய்ச்சல் மற்றும் சருமத்தில் பருக்கள் காணப்பட்ட நிலையில் அவர் தேசிய பாலுறவு தொடர்பான நோய் சிகிச்சைப் பிரிவிற்கு உட்படுத்தப்பட்டதாகவும் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் வைரஸ் தொற்று நிபுணத்துவப் பிரிவின் ஆலோசகர் டாக்டர் ஜூட் ஜயமஹா தெரிவித்துள்ளார்.

சிகிச்சையின் போது மருத்துவர்களுக்கு ஏற்பட்ட சந்தேகத்தின் பேரில் அந்த நோயாளி மேலதிக பரிசோதனைக்காக மருத்துவ ஆராய்ச்சி பிரிவின் வைரஸ் ஆய்வுப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு அன்றைய தினமே அந்த நோயாளியிடமிருந்து மாதிரியொன்றைப் பெற்றுக் கொண்டதாகவும் அதனை பரிசோதித்தபோது அவருக்கு குரங்கம்மை நோய் உள்ளமை கண்டறியப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது அவர் மேலதிக சிகிச்சைகளுக்காக ஐடிஎச் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த ஜூலை மாதம் முதல் மருத்துவ ஆராய்ச்சி நிறுவகம் ஆறு சந்தேகத்திற்கிடமான நோயாளிகளின் மாதிரிகளை குரங்கம்மை நோய்க்காக பரிசோதித்துள்ளது.

எவ்வாறாயினும், ஏழாவது சந்தேகத்திற்குரிய நபரின் மாதிரி ஊடாக ஆய்வக பரிசோதனை மூலம் இலங்கையின் முதலாவது குரங்கம்மை தொற்றாளர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

### திலினி வழக்கு தொடர்பில்...

என்ற கோடீஸ்வர வர்த்தக பெண் நேற்று குற்றத்தடுப்பு விசாரணை திணைக்கள அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜானகி சிறிவர்தன கிரிஸ் குரூப் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் என்றும் நேற்று கொழும்பு கோட்டையில் உள்ள கிரிஸ் கட்டிடத்தில் இயங்கும் அவரது அலுவலகத்தில் வைத்து அவர் கைது செய்யப்பட்டதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதேவேளை நாட்டின் பிரபல வர்த்தகர்கள் மற்றும் பல்வேறு நபர்களிடமிருந்தும் மில்லியன் கணக்கான நிதியை மோசடிசெய்துள்ளார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சிறையிலடைக்கப்பட்டுள்ள நிக்கோ குரூப் நிறுவனத்தின் உரிமையாளர் திலினிபிரியமாலி உள்ளிட்ட சந்தேக நபர்கள் மூவரையும் எதிர்வரும் 16ம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை மஜிஸ்திரேட் நீதிமன்றம் கடந்த 2ஆம் திகதி உத்தரவு பிறப்பித்தது.

திலினி பிரியமாலி அவரது முறையற்ற கணவரான இசுரு பண்டார மற்றும் திலினி பிரியமாலியின் நிறுவனத்தின் பணிப்பாளர்

ககுன் பெரேரா ஆகியோரே நீதிமன்ற உத்தரவுக்கமைய எதிர்வரும் 16ம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த விவகாரம் தொடர்பிலேயே நேற்று ஜானகி சிறிவர்தன குற்றத் தடுப்பு விசாரணை திணைக்கள அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

### குளவி கொட்டி... 03ஆம் பக்கத் தொடர்

ஏனைய தொழிலாளர்கள் புகையினை எழுப்பி, குளவிகளை பறக்கச்செய்து செய்து, ஆறு பெண் தொழிலாளர்களை மருத்துவமனைக்கு கொண்டு சென்று அனுமதித்தனர். ஏனையவர்கள் வீடு திரும்பினர்.

### ஜனாதிபதி நாளை... 03ஆம் பக்கத் தொடர்

விஜயத்தின் போது, எகிப்திய ஜனாதிபதி எப்டெல் பெட்டா சிஸி மற்றும் அந்நாட்டு பிரதமர் மொட்டாபா மெட்பௌலி ஆகியோரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். நான்கு தினங்களுக்கான விஜயத்தை மேற்கொள்ளும் ஜனாதிபதி எதிர்வரும் 10 ஆம் திகதி மீள நாடு திரும்பவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### ஈரானில் இடம்பெறும்... 03ஆம் பக்கத் தொடர்

இடம்பெற்று வரும் ஹிஜாப் எதிர்ப்பு போராட்டத்தில் சமூக செயற்பாட்டாளர்கள், பத்திரிகையாளர்கள், சட்ட மாணவர்கள் என இதுவரை 14,000 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்தோடு ஈரானின் பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதலில் 277 பேர் உயிரிழந்ததோடு ஆயிரக்கணக்கானோர் படுகாயமடைந்துள்ளதாக தெரிவித்தார்.

### வடக்கில் களமிறக்கப்பட்டுள்ள...

பரிமாற்றம் என்பன அதிகரித்துள்ளதுடன், வவுனியாவிலும் போதைப் பாவனை அதிகரித்துள்ளது.

இதை கட்டுப்படுத்தும் வகையில் நெளுக்குளம் பொலிசார் மோப்ப நாயின் துணையுடன் வீதியில் சென்ற பேரூந்துகள், சொகுசு வாகனங்கள்ட என்பவற்றை மறித்து சோதனையிட்டதுடன், சந்தேகத்திற்கிடமான இடங்கள் மற்றும் நபர்களையும் சோதனையிட்டனர்.

### யாழ்ப்பாணத்தில்...

கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தியாவின் தொண்டிப் பகுதியில் இருந்து சந்தேகத்துக்கு இடமான வகையில் படகொன்று வருவதாக கிடைத்த இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில் இராணுவத்தினர் இந்த சோதனையை மேற்கொண்டனர். கைப்பற்றப்பட்ட 60 கிலோ கிராம் கஞ்சா இளவாலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதையடுத்து பொலிஸாரால் மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன.

### சிகிச்சையின் பின்...

காணப்பட்டதையடுத்து அவர் ஐடிஎச் மருத்துவமனைக்கு வருகை தந்து, மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐ டி எச் மருத்துவமனையில் சிகிச்சைகளை பெற்றுக் கொண்ட பின்னர் அவர் மீண்டும் வீடு திரும்பியுள்ளதாகவும் அங்கு அவர் முறையான தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளார் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

### O/L பரீட்சை முடிவுகள்...

கடந்த பெப்ரவரி 21ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 3ஆம் திகதி வரை இடம்பெற்ற 2021 க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு மொத்தம் 517,496 மாணவர்கள் தோற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### லிற்றோ Gas போதியளவு...

கொள்வனவு செய்வதற்கான ஓடர்கள் செய்யப்பட்டுள்ளதாகவும் அதற்கிணங்க இந்த மாதத்தில் எந்தவித சமையல் எரிவாயு தட்டுப்பாட்டுக்கும் இடமில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சமையல் எரிவாயு விலை தொடர்பில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமென்றும் திங்கட்கிழமை முதல் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் போதியளவில் சமையல் எரிவாயுவை நுகர்வோர் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் சமையல் எரிவாயு தட்டுப்பாட்டுக்கு இடம்கிடையாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### களனி பல்கலைக்கழக ...

காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களனி பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட மாணவர்கள் குழுவொன்று அங்குள்ள கன்னங்கர மாணவர் விடுதிக்குள் மேற்படி மாணவர்களை தடுத்து வைத்து பல மணித்தியாலங்கள் அவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் ஹோமாகம பொலிஸார் தெரிவித்துள்ளனர். அதுதொடர்பில் காயமடைந்த மாணவர்கள் தெரிவித்த போது கடந்த 02ம் திகதி அதிகாலை மேற்படி விடுதிக்கு வருகை தந்த சிரேஷ்ட மாணவர் குழு தங்களை அங்கு தடுத்துவைத்து கடுமையாக தாக்கியதாகவும் இதற்கு முன்னர் மாணவர்கள் தாக்கப்பட்ட போது அது தொடர்பில் கிரிபத்கொட பொலிஸில் முறைப்பாடு செய்ததை ஞாகப்படுத்தியே தம்மீது கடுமையாக தாக்குதல் மேற்கொண்டதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான அனைத்து மாணவர்களையும் நீதிமன்ற மருத்துவ அதிகாரி முன்னிலையில் ஆஜர் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். களவானை, வரகடுவ, அரநாயக்க, வத்தேகம, கஹாவத்த பகுதியைச் சேர்ந்த மாணவர்களே இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

### ஆசிரியர்கள், மாணவர்களது...

செயலாளர் ஜோசப் ஸ்டாலின் முன்வைத்த கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் நேற்று இவ்வாறு தெரிவித்தார்.

எளிதான உடைகளுக்கு அனுமதி வழங்குவது கலாசார சீர்கேட்டுக்கே வழிவகுக்கும் என மதத்தலைவர்கள் தெரிவித்துள்ள அதேவேளை பெரும்பாலான ஆசிரியர்களும் உடைகளில் மாற்றம் ஏற்படுத்துவதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ள கல்வியமைச்சர்,

அதற்கிணங்க எந்த மாற்றமும் ஏற்படுத்தப்பட மாட்டாது என்றும் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் நேற்று கருத்து தெரிவித்துள்ள இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின், பாடசாலை ஆசிரியர்கள் அவர்களுக்கு வசதியான உடைகளை அணிந்து வருவதற்கு அனுமதிப்பது நாட்டின் கலாசார சீர்கேடாகாது என்றும் எந்த ஒரு நபருக்கும் தமக்கு ஏற்ற உடையை தெரிவு செய்யும் ஜனநாயக சுதந்திரம் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

கல்வித்துறையில் இரண்டு இலட்சத்து 47 ஆயிரம் ஆசிரியர்களில் 74 வீதமானோர் பெண்களாவர்.

அந்த வகையில் சேலை மற்றும் ஒசரி அணிய சிரமப்படும் ஆசிரியைகளின் நன்மை கருதியே நாம் இலகுவான உடைகளை அனுமதிக்க கோருகின்றோம். இது அனைத்து ஆசிரியர்களின் உடைகளை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை அல்ல என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### இம்ரான் கானுக்கு...

துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டதில் வலது காலில் காயம் ஏற்பட்டு அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் ஐவர் காயமடைந்துள்ளனர். துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட நபர் கைது செய்யப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பொதுமக்களை தவறான வழியில் இட்டுச் செல்லும் கருத்துகளை வெளியிடுவதன் காரணமாகவே முன்னாள் பிரதமரான இம்ரான் கான் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாக சந்தேகநபர் பொலிஸாரிடம் வாக்கு மூலம் அளித்துள்ளதாக சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆட்சியிலுள்ள ஷெபாஷ் ஷெரீப்பின் அரசாங்கத்துக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட நீண்ட பேரணியின் போது இந்த சம்பவம் இடம்பெற்றது.

பேரணியில் உரையாற்றுவதற்காக வாகனமொன்றில் நின்றுகொண்டிருந்த போதே இம்ரான் கான் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை, இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்திற்கு பலரும் கண்டனம் வெளியிட்டுள்ளனர்.

இந்த தாக்குதலை வன்மையாக கண்டிப்பதாக பாகிஸ்தான் பிரதமர் ஷெஹ்பாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு அரசாங்கம் முழுமையாக ஒத்துழைப்பு அளிக்கும் எனவும் அவர் கூறியுள்ளார். பாகிஸ்தானில் வன்முறைகளுக்கு இடமில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, முன்னாள் பிரதமர் மீதான தாக்குதலை தாமும் வன்மையாக கண்டிப்பதாக பாகிஸ்தான் ஜனாதிபதி ஆரிப் அல்வி தெரிவித்துள்ளார்.

இதனிடையே பாகிஸ்தானில் இடம்பெறும் விடயங்களை உன்னிப்பாக அவதானித்துவருவதாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சின் பேச்சாளர் அரிந்தம் பக்ச்சி கூறியுள்ளார்.

நாட்டை ஒன்றிணைக்கும் முயற்சியில் முன்னெடுக்கப்பட்ட பேரணில் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றுள்ளமை வருத்தமளிப்பதாக பாகிஸ்தான் கிரிக்கட் அணியின் முன்னாள் தலைவர் வசீம் அக்ரம் தெரிவித்துள்ளார். \வன்முறைகளை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாதென அமைதிக்கான நோபல் பரிசை வென்ற மலாலா யூசுப்சாய் கூறியுள்ளார்.

இதேவேளை, பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மற்றும் அவரது ஆதரவாளர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை ஏற்றுக் கொள்ள முடியாதென கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

### நிதி சேகரிப்பு தளத்தை...

மோசமான நெருக்கடி இதுவாகும். இதில் மில்லியன் கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

5.7 மில்லியன் மக்கள் மனிதாபிமான உதவியின் அவசியத்தில் உள்ளனர். அத்துடன், ஏறக்குறைய 6.3 மில்லியன் இலங்கையர்கள் தங்களின் அடுத்த உணவுக்கு வழி தெரியாமல் உள்ளனர்.

நிலைமைகள் தொடர்ந்து மோசமடைவதால், ஏனைய முயற்சிகளுக்கு மத்தியில் இலங்கை மக்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் இந்த நிதியளிப்பு பிரசாரத்தை உருவாக்கியுள்ளதாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்றிட்டம் தெரிவித்துள்ளது.

இந்த நெருக்கடியால் சுகாதாரம் மற்றும் உணவு ஆகிய இரண்டு துறைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

உணவு விநியோகச் சங்கிலிகள் சீர்குலைந்துள்ளன. சில அத்தியாவசிய மற்றும் அத்தியாவசியமற்ற மருந்துகள் அரிதாகி, கொள்வனவு செய்வதற்கும் கடினமாகியுள்ளன. இதன் விளைவாக, சில சந்தர்ப்பங்களில், சில அறுவை சிகிச்சைகள் தாமதமாகின்றன.

எனவே, நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு உலகளாவிய ஆதரவு தேவை. இதற்கான ஒரு முயற்சியாக *Rebuild Sri Lanka* என்ற நிதி சேகரிப்பு தளத்தை ஐநா அபிவிருத்தி செயற்றிட்டம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இதனூடாக இலங்கையில் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு நன்கொடை மற்றும் நிவாரணங்களை வழங்க உலக வாழ் மக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

*Rebuild Sri Lanka* தளத்தின் மூலம் 5 – 15 அமெரிக்க டொலர் அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை சுகாதார மற்றும் உணவுத் துறைகளுக்கு உதவலாம்.

இந்த பங்களிப்புகள் அத்தியாவசிய மருத்துவப் பொருட்களின் தற்போதைய பற்றாக்குறையை போக்கவும், உணவுத் தேவையை பூர்த்திசெய்யவும் உதவும்.

ஐக்கிய நாடுகள் சபையின் உதவிச் செயலாளர் நாயகமும், ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான ஐநா அபிவிருத்தி செயற்திட்டத்தின் பிராந்தியப் பணிப்பாளருமான கன்னி விக்னராஜா கூறுகையில், "'ரீபில்ட் ஸ்ரீலங்கா' தளம், இலங்கையில் உள்ள பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களுக்கு நேரடியாக ஆதரவளிக்க உதவும். முக்கியமான மருத்துவப் பொருட்கள் மற்றும் உணவுப் பாதுகாப்பு முயற்சிகளை வலுப்படுத்துதல்.

இந்தத் தளம் நிதியைப் பயன்படுத்துவதில் முழு வெளிப்படைத்தன்மையை வழங்கும், இந்தப் பங்களிப்புகள் அவை தேவைப்படும் இடத்திற்குச் செல்லும். அவசியமான இந்த நேரத்தில் இலங்கை மக்களுடன் நிற்க ஐநா அபிவிருத்தி செயற்றிட்டம் உறுதிபூண்டுள்ளது என்றார். எந்தவொரு நாட்டில் இருந்தும் www.undp.org/srilanka/donate என்ற இணையத்தளத்துக்கு பிரவேசிப்பதன் ஊடாக இலங்கைக்கு நிதி உதவியளிக்க முடியும் என ஐநா அபிவிருத்தி செயற்றிட்டம் தெரிவித்துள்ளது.

# கிழக்கின் குரல்



## கிழக்கில் மாடுகளுக்கு தொற்றுநோய்

# மாட்டிறைச்சி நுகர்வு தொடர்பில் தெளிவுபடுத்துமாறு கோரிக்கை

*அட்டாளைச்சேனை மத்திய நிருபர்*



கிழக்கு மாகாணத்தில் கால்நடைகளுக்கு தொற்றுநோய் வேகமாகப் பரவுவதாகவும், அதனால் மாடுகள் திடீரென இறந்து வருவதாகவும் வெளிவந்த செய்தியை அடுத்து பொதுமக்கள் பலரும் அச்சத்துக்குள்ளாகியுள்ளனர்.

இந்நிலையில், தற்போது மாட்டிறைச்சி நுகர்வு தொடர்பில் பொதுமக்களை சுகாதார வைத்திய அதிகாரிகள் தெளிவுபடுத்த வேண்டுமென, அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இம்மாகணத்திலுள்ள இறைச்சிக் கடைகள் வழமை போன்று இயங்கி வந்த போதிலும், மாடுகளுக்கான தொற்றுநோய் அச்சம் காரணமாக பொதுமக்களில் பலர் மாட்டிறைச்சிக் கொள்வனவை, அதனை உட்கொள்வதை தவிர்த்து வருகின்றனர்.

இதன் காரணமாக மாட்டிறைச்சி விற்பனை பெருமளவில் வீழ்ச்சி கண்டுள்ளது.

எனினும், இது தொடர்பில் பொதுமக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டியது சுகாதாரத் துறையினரின் கடமையெனவும், அம்மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அம்பாறையின் அனைத்துப் பிரதேசங்களிலும் மாடு வளர்ப்பை அதிகமானவர்கள் தமது ஜீவனோபாயத் தொழிலாக மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில், அவற்றிலிருந்து கிடைக்கும் பால் விற்பனை செய்வதுடன், உரிய தருணத்தில் இறைச்சிக்காக மாடுகளையும் விற்பனை செய்து, அவர்கள் வருமானம் ஈட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# போதைப் பாவனையை ஒழிக்க அனைவரும் ஒன்றுபட வேண்டும்

## திருகோணமலை ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்

*றொட்டவெவ குறூப் நிருபர் அப்துல்சலாம் யாசீம், தம்பலகாமம் குறூப் நிருபர்*



இளம் தலைமுறையினர் மற்றும் பாடசாலை மாணவர்கள் மத்தியில் அதிகரித்து வரும் போதைப்பொருள் பாவனையை ஒழிக்க அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்படுவது காலத்தின் கட்டாயமாக உள்ளதாக, திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கபில நுவன் அத்துகோரல தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், நேற்று முன்தினம் (03) மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றபோதே , அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நகரப் பகுதிகளை மையமாகக் கொண்டு போதைப்பொருள் வர்த்தகம் நடைபெற்று வரும் போதிலும், அது தற்போது கிராமங்களுக்கும் சென்றுள்ளது. இதனால், இளம் தலைமுறையினரும் மாணவர்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். போதைப்பொருள் வர்த்தகர்கள் சூட்சுமாக தமது வியாபாரத்தை முன்னெடுக்கின்றனர். ஆகவே, இச்செயற்பாட்டை உடனடியாக தடுத்து நிறுத்த நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டும்" என்றார்.

# அல்ஜெசிறா வித்தியாலயத்தில் காட்டு யானை அட்டகாசம்

*ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்*



அட்டாளைச்சேனை மீலாத்நகர் கிராமத்தினுள் நேற்று அதிகாலை (04) உட்புகுந்த காட்டு யானைகள், கிராமத்தில் சேதங்களை விளைவித்துள்ளன.

அக்கிராமத்திலுள்ள முல்லைத்தீவு அல் ஜெஸீறா வித்தியாலயத்தின் பிரதான கதவு மற்றும் முன் மதிலை உடைத்து சேதப்படுத்தியதுடன், பயன்தரு மரங்களையும் நாசமாக்கியுள்ளன.

இக்கிராமத்தில் தொடர்ச்சியாக காட்டு யானைகளின் தொல்லை காணப்படுவதாகவும், இதற்கு உரிய தீர்வை பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் பெற்றுத்தர வேண்டுமெனவும், இக்கிராம மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# சாய்ந்தமருதில் 'கிராம சக்தி' வேலைத்திட்டம்

*மாளிகைக்காடு குறூப் நிருபர்*



'கிராம சக்தி' வேலைத் திட்டத்தின் கீழ், சாய்ந்தமருது 10ஆம் பிரிவிலுள்ள கிராம சக்தி சங்கப் பயனாளிகள் ஐவருக்கு தலா 30,000 ரூபாய் பெறுமதியான காசோலைகள் கடந்த 02ஆம் திகதி வழங்கப்பட்டன. சாய்ந்தமருதுப் பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக்கின் வழிகாட்டலுக்கமைய இந்நிகழ்வு இடம்பெற்றது. இப்பயனாளிகளின் சுயதொழில் முயற்சிக்கு ஊக்கமளிக்கும் வகையிலேயே இக்காசோலைகள் வழங்கப்பட்டன.

# அனர்த்த முன்னாயத்தக் கூட்டம்

*சவளக்கடை குறூப் நிருபர்*



தற்போது பருவப் பெயர்ச்சி மழை ஆரம்பித்துள்ளதை தொடர்ந்து, இயற்கை அனர்த்தங்களிலிருந்து பொதுமக்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதனடிப்படையில், அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஏற்பாடு செய்த அனர்த்த முன்னாயத்த விழிப்புணர்வுக் கூட்டம், நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவில் நேற்று (04) நடைபெற்றது. இதன்போது, கிட்டங்கி வீதியில் ஏற்படும் வெள்ள நிலைமையை சீர்செய்தல், அவ்வீதியூடான போக்குவரத்துக்கு மாற்று வீதிகளை பாவித்தல் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

# இளைஞர்களை வலுவூட்டும் நல்லிணக்க திட்டம்

*கல்முனை நிருபர்*



அம்பாறையில் 20 செயலகப் பிரிவுகளிலும் இளைஞர்களை நல்லிணக்கத்துக்காக வலுவூட்டும் வகையில் ychange எனும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

ஹெல்விடாஸ் நிறுவனத்தின் அனுசரணையில் சமாதானமும் சமூகப் பணி (PCA) நிறுவனத்தால் இத்திட்டம் முன்னெடுக்கப்படுவதுடன்,

இளைஞர்கள் நல்லிணக்கக் குழுவுக்கான திட்ட அறிமுக நிகழ்வும் அம்பாறையில் அண்மையில் நடைபெற்றது .

இதன்போது, எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள நல்லிணக்கச் செயற்பாடுகள் ஆராயப்பட்டன.

# புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் விநியோகம்

*கல்முனை மத்திய தினகரன் நிருபர்*



இவ்வாண்டு கல்முனை கல்வி வலயத்திலிருந்து தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில், Edu Free Academy யினால் இலவசமாக மாதிரி புலமைப்பரிசில் வினாத்தாள்கள் பாடசாலைகளுக்கு நேற்று (03) வழங்கப்பட்டன.

முதற்கட்டமாக கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு வினாத்தாள்கள் வழங்கப்பட்டன. அத்துடன், புலமைப்பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கு மாதிரி முன்னோடிப் பரீட்சையும் நடத்தப்பட்டது.

இச்சேவையை எதிர்காலத்திலும் தொடரவுள்ளதாகவும் ஏனைய பாடசாலைகளுக்கும் இலவச வினாத்தாள்களை வழங்கவுள்ளதாக, Edu Free Academyயின் கல்முனைப் பிரதேச இணைப்பாளர் எம்.என்.எம்.அப்ராஸ் தெரிவித்தார்.

# பஸ் தரிப்பு நிலையத்தை சீர்செய்து தருமாறு பிரயாணிகள் வேண்டுகோள்

*நிந்தவூர் குறூப் நிருபர்*



நிந்தவூர் பிரதான வீதி அல்மஸ்லம் பாடசாலைக்கு முன்பாகவுள்ள பஸ் தரிப்பு நிலையமானது, நீண்டகாலமாக சேதமடைந்து காணப்படுவதால், பிரயாணிகள் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

மழை மற்றும் வெய்யிலுடனான காலநிலை நிலவும் வேளையில், பஸ்ஸுக்காக பொதுமக்கள் காத்திருக்கும்போது சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

எனவே, இப்பஸ் தரிப்பு நிலையத்தைச் சீர்செய்வதற்கு கிழக்கு மாகாண வீதிப் போக்குவரத்து அதிகார சபையோ அல்லது பிரதேச சபையோ விரைவான நடவடிக்கை எடுத்து, பாவனைக்கு உகந்த பஸ் தரிப்பு நிலையமாக சீரமைத்து தருமாறு , பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# கல்முனையில் பல் சுகாதார விழிப்புணர்வு

*ஒலுவில் விசேட நிருபர்*



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவிலுள்ள 13 சுகாதார வைத்தியதிகாரி அலுவலகங்கள் ஊடாக பல் நோய், வாய்ச் சுகாதாரம், வாய்ப் புற்றுநோய் தொடர்பாக மக்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளதுடன், இதற்குரிய விழிப்புணர்வு வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்படவுள்ளதாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் பற்சிகிச்சை நிலையங்களை விரிவுபடுத்தி சமுதாய மட்டத்துக்கு கொண்டு செல்வதற்கான செயற்றிட்டத்தின் அங்குரார்ப்பண வைபவம், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது, வைத்தியசாலைகளில் மாத்திரம் செறிவாக்கப்பட்டு இயங்கி வருகின்ற பற்சிகிச்சை நிலையங்களை பரவலாக்கி, பல் வைத்திய நிபுணர்களின் சேவையை சமூக மட்டத்துக்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், தரமான சேவைகளை மக்களுக்கு வழங்குவது தொடர்பில் பல் வைத்திய நிபுணர்களினால் முன்மொழிவுகள் வைக்கப்பட்டன.

# அகில இலங்கை சித்திரப் போட்டிக்கு சம்மாந்துறையில் 3 மாணவர்கள் தெரிவு

*காரைதீவு குறூப் நிருபர்*

அகில இலங்கை தேசிய மட்ட சித்திரப் போட்டிக்கு சம்மாந்துறை வலயத்திலிருந்து 3 சித்திரங்கள் தெரிவு செய்யப்பட்டதுடன், அச்சித்திரங்களை வரைந்த மாணவர்கள் எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறும் தேசிய மட்டப் போட்டிக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இம்மாணவர்களை சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம்.அமீர் நேரில் சென்று வாழ்த்தினார். சம்மாந்துறை மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எம்.எம்.மொகமட் அஸ்மல், எம்.ஆர்.எவ். சதீஹா சஹானியும் தாருஸ்ஸலாம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஏ.ஆர்.நகீஷும் தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளனர்.

# காரைதீவில் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி

*காரைதீவு குறூப் நிருபர்*



அம்பாறை, காரைதீவு பிரதேசத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கு உதவும் செயற்றிட்டத்தை காரைதீவு பிரதேச சபை முன்னெடுத்து வருகின்றது.

இது தொடர்பான உயர் மட்டக் கலந்துரையாடலொன்று ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் அனுசரணையுடன் அண்மையில் இடம்பெற்றது.

ஏற்கனவே, மாற்றுத்திறனாளிகளுக்கு ஊன்றுகோல், சக்கரநாற்காலி என்பவற்றை பெற்றுக்கொடுத்திருக்கும் நிலையில், எதிர்காலத்தில் அவர்களுக்கான வாழ்வாதார உதவிகள், சுயதொழில் செய்வதற்கான உதவிகள் மற்றும் அவர்களின் இன்ப, துன்ப நிகழ்வுகளுக்கு உதவி வழங்குதலில் கவனம் செலுத்தவுள்ளதாகவும், இக்கலந்துரையாடலின்போது தெரிவிக்கப்பட்டது.

# கொட்டியாரக்குடாக் கடல் பெருக்கெடுப்பு; தொழில் பாதிக்கப்படுவதாக மீனவர் கவலை

*மூதூர் தினகரன் நிருபர்*

மூதூர் கொட்டியாரக்குடாக் கடல் கரையோரப் பகுதிகளான தக்வா நகர், ஹபீப் நகர் ஆகிய கரையோரப் பகுதிகளில் அமைந்துள்ள மீன்வாடிகள், மீனவர் குடியிருப்புகள், கரையோர வீதிகள் என்பன கடல் பெருக்கெடுப்பினால் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாக, மீனவக் குடும்பங்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அண்மைக்காலமாக இருந்து அடிக்கடி கொட்டியாரக்குடாவில் கடல் பெருக்கெடுப்பு ஏற்பட்டு வருகின்றது.

எனவே, இப்பகுதிகளில் அன்றாடம் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவ மக்களின் தொழில் பாதிக்கப்படாத வகையிலும் அவர்களின் உடைமைகளுக்கு சேதம் ஏற்படாத வகையிலும் கல் வேலிகளை அமைத்து தருவதுடன், கடல் அலையின் பாதிப்பை தடுப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம், அம்மக்கள் கோருகின்றனர்.

# காத்தான்குடியில் ஊடகச் செயலமர்வு

*புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்*



மட்டக்களப்பு மாவட்ட ஊடகப் பிரிவின் ஏற்பாட்டில், தகவல் திணைக்களத்தின் அனுசரணையுடன் மட்டக்களப்பு மத்தி வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் உயர்தர மாணவர்களுக்கான ஊடகக் கற்கை செயலமர்வொன்று அண்மையில் காத்தான்குடியில் நடத்தப்பட்டுள்ளது.

க.பொ.த. உயர்தரத்தில் ஊடகக் கற்கைநெறியை ஒரு பாடமாகக் கற்கும் மற்றும் ஆர்வமுள்ள மாணவர்களுக்கான ஊடகச் செயலமர்வு, மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் கே.கருணாகரனின் ஆலோசனைக்கு அமைய, காத்தான்குடி மீரா பாலிகா தேசிய பாடசாலையில் நடத்தப்பட்டது.

சமூக வலைத்தளங்களை கையாளுதல், அதிலிருந்து பாதுகாப்பு பெறுதல், ஊடகத்துறையும் அனுபவப் பகிர்வும் மற்றும் நவீன டிஜிட்டல் ஊடகத்துறையும் சவால்களும், வளர்ச்சியும் எனும் தலைப்புகளில் வளவாண்மை இடம்பெற்றிருந்ததுடன், குறித்த செயலமர்வில் 130க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். மீரா பாலிகா தேசிய பாடசாலை, காத்தான்குடி மத்திய கல்லூரி, மில்லத் பெண்கள் உயர்தரப் பாடசாலை, அல் அமீன் மகா வித்தியாலயம், அல் ஹிறா மகா வித்தியாலயம், பாலமுனை அலிகார் மகா வித்தியாலயம் மற்றும் காங்கேயனோடை அல் அக்ஷா மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இருந்து ஆர்வத்துடன் மாணவர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

இச்செயலமர்வில் பங்குபற்றிய அனைத்து மாணவர்களுக்கும் அரசாங்க தகவல் திணைக்களத்தின் பெறுமதிவாய்ந்த சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டது.

# கிழக்கின் குரல்



## திருமலையில் கைவிடப்பட்ட வீடமைப்பு திட்டங்களை மீள ஆரம்பிக்க நடவடிக்கை

தம்பலகாமம் குறூப் நிருபர்



கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சின் மூலம் தேசிய வீடமைப்பு அதிகார சபையூடாக திருகோணமலை மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு இடைநடுவில் கைவிடப்பட்டுள்ள வீடமைப்புத் திட்டங்களை மீள ஆரம்பிப்பது தொடர்பான கலந்துரையாடல், அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

இதற்கமைய, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் ஒத்துழைப்புக்கமைய, தேசிய வீடமைப்பு அதிகார சபைத் தலைவருடன் இக்கலந்துரையாடல் நடைபெற்றது.

இம்முயற்சிக்கு பூரண ஆதரவு வழங்குவதாக தெரிவித்து வீடமைப்புத் திட்டங்களை ஆரம்பிப்பதற்கான எழுத்து மூலமான அனுமதியையும் தேசிய வீடமைப்பு அதிகார சபைத் தலைவர் வழங்கினார்.

திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலின் போது, இடைநிறுத்தப்பட்டுள்ள வீடமைப்புத் திட்டங்களை, அல் ஹித்மத்துல் உம்மா பவுண்டேஷனின் உதவியுடன் மீள ஆரம்பிப்பதற்கு இணக்கம் காணப்பட்டது.

இந்நிலையில், முதற்கட்டமாக கிண்ணியாவில் கைவிடப்பட்டுள்ள துவரங்குளம் 1, துவரங்குளம் 2 வீடமைப்புத் திட்டங்களில், 54 வீடுகளை கட்டுவதற்கு முதலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், திருகோணமலையில் கைவிடப்பட்டுள்ள ஏனைய வீடமைப்புத் திட்டங்களும் படிப்படியாக முன்னெடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரசியலை ஆபத்தான தொழிலாக கருதுகின்றேன்

### முன்னாள் சுகாதார அமைச்சர் சுபைர்



அரசியல் தொழிலை மிகவும் ஆபத்தானதாகவே தான் பார்ப்பதாக, கிழக்கு மாகாணத்தின் முன்னாள் பிரதித் தவிசாளரும் முன்னாள் சுகாதார அமைச்சரும் ஏறாவூர் நகர சபையின் உறுப்பினருமான எம்.எஸ். சுபைர் தெரிவித்தார்.

திடீர் மரணமடைந்த ஏறாவூர் நகர சபையின் உப தவிசாளரான அப்துல்சாலி முஹம்மத் றியாழுக்கான அனுதாபப் பிரேரணை நிறைவேற்றல், ஏறாவூர் நகர சபையின் மாதாந்த அமர்வின்போது அண்மையில் நடைபெற்றது. இங்கு உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றிய போது,

"மக்கள் மத்தியில் அரசியல்வாதிகள் அரசியல் கடமைகளில் ஈடுபடுகின்றபோது, பல மக்கள் தமது பல்வேறுபட்ட குறைபாடுகளையும் தேவைகளையும் பிரச்சினைகளையும் முன்வைக்கின்றார்கள். இவற்றை அரசியல்வாதிகள் நிவர்த்தி செய்து தர வேண்டுமென்று மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

அவ்வாறு மக்களின் குறைகள் தீர்க்கப்படாத பட்சத்தில், அரசியல்வாதிகளை மக்கள் கடிந்து கொள்கின்றார்கள். மேலும், நாம் அரசியல் செய்கின்றபோது சிலர் எங்களை ஊழல்வாதிகளாகப் பார்க்கின்றார்கள். அதேவேளை,

அரசியல்வாதிகளை சிலர் ஊழல்வாதிகளாக மாற்றுவதற்கும் முயற்சிக்கின்றார்கள். இப்படிப்பட்ட பல சவால்களை மக்கள் மத்தியில் இருக்கின்ற அரசியல்வாதிகள் எதிர்கொள்ளும் சூழ்நிலை காணப்படுகின்றது. அதனால்தான் அரசியலை ஒரு ஆபத்தான தொழிலென்று நான் குறிப்பிடுகின்றேன்." என்றார்.

## எதிர்வரும் 9ஆம் திகதி சமயபாட கற்பித்தல் வாண்மை செயலமர்வு

நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்

கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரணதர உயர்தர வகுப்புகளின் சமய பாடக் கற்பித்தல் வாண்மையை அதிகரிக்க பாட மேற்பார்வை செய்யும் கல்விசார் உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வொன்று எதிர்வரும் 9ஆம் திகதி கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்கள கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

வலயத்தில் கடமையாற்றும் மூவின சமய பாட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,

ஆசிரிய ஆலோசகர்கள், சிரேஷ்ட ஆசிரியர் இதற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

செயலமர்வுக்கு சமுகமளிக்கும்போது ஐந்து வருட பெறுபேற்று பகுப்பாய்வு புள்ளிகள் செயற்றிட்டங்களை செயலமர்வுக்கு கொண்டு வருமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி புள்ளநாயகம் கேட்டுள்ளார்.

## பொத்துவிலில் காட்டு யானைகள் அட்டகாசம்



பாலமுனை விசேட நிருபர்

அம்பாறை, பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஆர்.எம். நகர், இன்ஸ்பெக்டர் ஏத்தம், குண்டுமடு, றொட்டை பகுதிகளில் காட்டு யானைகளின் தொல்லை தினமும் காணப்படுவதாக, அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இரவில் வரும் காட்டு யானைகள், குடிசைகளையும் பாதுகாப்பு வேலிகளையும் பயன்தரும் மரம், செடிகளையும் நாசமாக்கிவிட்டுச் செல்கின்றன.

இக்காட்டு யானைகளின் தொல்லைக்கு மத்தியில் அச்சத்துடன் இருக்கும் தாம் உயிர், உடைமைகளை பாதுகாப்பதற்காக மிகுந்த பிரயத்தனம் செய்வதாகவும், அம்மக்கள் தெரிவித்தனர். எனவே, காட்டு யானைகளின் தொல்லையிலிருந்து தாம் விடுபட தீர்வை பெற்றுத் தருமாறு உரிய அதிகாரிகளிடம், அம்மக்கள் கோருகின்றனர்.

## மனிதனின் உள வளர்ச்சிக்கு வாசிப்பு முக்கியம்

### நாவிதன்வெளி பிரதேச செயலாளர்



துறைநீலாவணை நிருபர்

மனிதனின் உடல் வளர்ச்சிக்கு ஊட்டச் சத்துள்ள உணவு எவ்வளவு முக்கியத்துவம் பெறுகின்றதோ அதேபோன்று உள வளர்ச்சிக்கு வாசிப்பு முக்கியமானதாகும். ஆகவே வாசிப்பு பழக்கமுடைய ஒருவரால் மட்டுமே உடல், உள ஆரோக்கியத்துடன் மகிழ்ச்சிகரமாக வாழ முடியுமென, நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதன் தெரிவித்தார்.

நாவிதன்வெளி பிரதேச சபையானது, தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்திய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் அண்மையில் அப்பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பத்திரிகைகள், சஞ்சிகைகள், புத்ததகங்களை வாசிப்பவர்களின் எண்ணிக்கை இன்று வெகுவாக குறைவடைந்து காணப்படுகின்றது. இது கவலைக்குரிய விடயமாகும். மாறாக, சமூகத்தில் கையடக்கத் தொலைபேசிப் பாவனை அதிகரித்துள்ளது.

இது தொற்றா நோய்களை ஏற்படுத்துவதுடன், விரும்பத்தகாத செயற்பாடுகள் இடம்பெறவும் காரணமாய் உள்ளது.

நீண்ட வாசிப்பு பழக்கம் உடையவர்களால் மட்டுமே நன்கு கிரகிக்க முடியும். போட்டிப் பரீட்சைகளை இலகுவாக வெற்றி கொள்ள முடியும். நன்கு பேச முடியும். அதனை எழுதவும் முடியும். மேலாக மகிழ்சிகரமாக வாழவும் முடியும்.

ஒரு நூலகம் திறக்கப்படுமானால் சிறைக்கூடங்கள் மூடப்படும். குற்றச்செயல்கள் குறையும் என்பார்கள். வாசிக்காதவர்களே, அதிக குற்றம் புரிபவர்களாகவும் சிறை செல்பவர்களாகவும் உள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இவ்வாறு சிறை சென்ற பலர் சிறையில் இருந்து வாசித்து அரிய பல நூல்களை எழுதிய வரலாறுகளும் உள்ளன" என்றார்.

## தாருஸ்ஸலாம் பாலர் பாடசாலையின் 22ஆவது கலை விழா

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

காத்தான்குடி தாருஸ்ஸலாம் பாலர் பாடசாலையின் 22ஆவது பாலர் கலை விழா அண்மையில் காத்தான்குடி மெரைன் டிரைவ், தாருல் அர்க்கம் மண்டபத்தில் மிக விமர்சையாக நடைபெற்றது.

பாடசாலையின் அதிபரும் காத்தான்குடி நகர சபையின் உறுப்பினருமான திருமதி பஹ்மியா ஷரீப் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.முஹம்மட் ரிபாஸ் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்துள்ளார்.

மேற்படி பாலர் கலை விழாவில் தாருஸ்ஸலாம் முன்பள்ளியின் மாணவர்களால் பல்வேறுபட்ட சிறப்பான, முன்மாதிரியான நிகழ்வுகளும் மேடையேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும்.

## யானைகளின் தொல்லைக்கு முடிவு கட்ட குடியிருப்பாளர்கள் வேண்டுகோள்



அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை, சாய்ந்தமருதுப் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட கிராமங்களில்

காட்டு யானைகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக, குடியிருப்பாளர்கள் தெரிவித்தனர்.

கடந்த சில நாட்களாக நள்ளிரவு வேளைகளில் மேற்படி பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட கிராமங்களுக்குள் காட்டு யானைகள் உட்புகுந்து, பயன் தரும் பல மரங்களை நாசம் செய்து விட்டுச் சென்றுள்ளன சுனாமி குடியிருப்புப் பிரதேசமான சாய்ந்தமருது வொலிவேரியன் கிராமத்தில் தென்னை, வாழை, பப்பாசி, தோடம் மரங்களை காட்டு யானைகள் நாசம் செய்து விட்டுச் சென்றுள்ளன.

இவ்வாறு காட்டு யானைகள் ஊருக்குள் புகுந்து வீட்டு உடைமைகளை நாசம் செய்வதை தடுக்கும் வகையில், சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டுமென, குடியிருப்பாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## அக்கரைப்பற்று வைத்தியசாலையில் இருதய நோய் சிகிச்சை பிரிவு



அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச மக்களின் நீண்டகாலத் தேவையாக இருந்த இருதய நோய் சிகிச்சை பிரிவு, அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

திகாமடுல்ல மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் தேசிய காங்கிரஸின் தேசியத் தலைவரும் இவ் வைத்தியசாலைத் ஸ்தாபகருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு இதனைத் திறந்து வைத்தார்.

அத்துடன், அவர் வைத்தியசாலைக்கு ஒரு புதிய அம்பியூலன்ஸ் வண்டியையும் வழங்கி வைத்தார். இதேவேளை, பெறுமதியான வைத்திய உபகரணங்களை தனவந்தர் ஒருவர் வழங்கி வைத்தார்.

இருதய நோய், மாரடைப்பு, உயர் குருதியமுக்கம் மக்களிடையே காணப்படுவதுடன், இதன் காரணமாக இளவயது மரணங்கள் தினமும் இடம்பெறும் இச்சந்தர்ப்பத்தில், இருதய நோய் சிகிச்சைப் பிரிவு திறந்து வைத்தமை கிழக்கு கரையோரப் பிராந்திய மக்களுக்கு கிடைத்தமை மிகப் பெரிய உபகாரமாகுமென, வைத்திய அத்தியட்சகர், டாக்டர். ஜி. போல் றொஷான் தெரிவித்தார்.

## அக்கரைப்பற்றில் 'தொழில் முனைவோர்' கருத்தரங்கு



அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்

அக்கரைப்பற்றில் இளைஞர், யுவதிகளுக்கான 'தொழில் முனைவோர்' கருத்தரங்கு அண்மையில் நடத்தப்பட்டதுடன், அது தொடர்பில் பல்வேறு விளக்கங்களும் அளிக்கப்பட்டன.

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழுள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின், அக்கரைப்பற்றுப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இக்கருத்தரங்கு நடத்தப்பட்டது.

முயற்சியாண்மையின் தேவைப்பாடு, வெற்றிகரமான வணிகத்தை நடத்தும் வழிமுறைகள், சிறிய சுயதொழில் ஆலோசனைகள், சந்தைப்படுத்தல் மற்றும் தந்திரோபாயம், அரச மற்றும் தனியார் துறையினரின் இலவச நிதி வசதிகளை பெறும் வழிமுறைகள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டன.

சுயதொழிலில் ஆர்வமுள்ள 30க்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் இக்கருத்தரங்கில் பங்குபற்றியிருந்ததுடன், இதில் கலந்து கொண்டு தனது திறமையை வெளிக்காட்டிய ஒரு பங்குபற்றுனருக்கு பிரதேச செயலாளரினால் பரிசும் வழங்கி வைக்கப்பட்டது.



## காரைதீவில் நவீனமயப்படுத்தப்பட்ட இலங்கை வங்கிக் கிளை திறந்துவைப்பு

காரைதீவு குறூப் நிருபர்

காரைதீவில் நவீனமயப்படுத்தப்பட்ட இலங்கை வங்கிக் கிளை புதிய கட்டிடத்தில் நேற்று (04) திறந்து வைக்கப்பட்டது.


மேற்படி வங்கி முகாமையாளர் யாழினி மோகனகாந்த் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், பிரதம அதிதியாக இலங்கை வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் பியல் சில்வா கலந்து சிறப்பித்தார்.

இங்கு புதிய கொடுக்கல், வாங்கல்கள்

சம்பிரதாயபூர்வமாக இடம்பெற்றதுடன், 18 பிளஸ் அதிஷ்டசாலிக்கு தங்கநாணயம் பரிசாக வழங்கப்பட்டது. கட்டிட உரிமையாளருக்கு கெளரவப் பரிசு வழங்கி வைக்கப்பட்டது.

## விநாயகபுரத்தில் புதிய நூலகம்

திருக்கோவில் தினகரன் நிருபர்எஸ். கார்த்திகேசு




அம்பாறை, விநாயகபுரத்தில் புதிய நூலகமொன்று திருக்கோவில் பிரதேச சபையால் அண்மையில் (02) திறந்து வைக்கப்பட்டுள்ளது.

விநாயகபுரத்திலுள்ள பாடசாலை மாணவர்களினதும் வாசகர்களினதும் நன்மை கருதி, திருக்கோவில் பிரதேச சபைத் தவிசாளர் இ.வி. கமலராஜன் தலைமையில் இந்நூலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதன்போது, பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன், நூலகத்துக்கு புத்தகங்களும் அன்பளிப்புச் செய்யப்பட்டன.




# மூடப்பட்டுள்ள பொருளாதார மத்திய நிலையங்களை திறப்பதற்கு நடவடிக்கை

## இராஜாங்க அமைச்சர் மஸ்தான்



*வவுனியா விசேட நிருபர்*

மூடப்பட்டுள்ள பொருளாதார மத்திய நிலையங்களை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிராமிய பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் கே.காதர் மஸ்தான் தெரிவித்தார்.

வவுனியா, மதவுவைத்தகுளம் பகுதியிலுள்ள பொருளாதார மத்திய நிலையத்தை பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தால் பல மில்லியன் ரூபாய்கள் செலவு செய்து பொருளாதார மத்திய நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அதனை அந்த மாவட்ட மக்களோ அல்லது ஏனைய மக்களோ பயன்படுத்தாது சேதமடைந்து வருகிறது. எமது அமைச்சுக்குட்பட்ட பொருளாதார மத்திய நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. மக்கள் பாவனைக்கு விடுவதற்காக நேரடியாக சென்று பொருளாதார மத்திய நிலையங்களில் என்ன பிரச்சினை என ஆய்வு செய்து வருகின்றேன்.

இதன்பின்னர் அரச அதிபர் மற்றும் ஏனைய அரச அதிகாரிகள், வியாபாரம் செய்பவர்கள் ஆகியோருடன் கதைத்து விரைவாக திறப்பதற்கு ஏற்பாடுகளை செய்து வருகின்றோம்.

ஏனைய மாவட்ட பிரச்சினை வேறு. இங்கு வேறு பிரச்சினை. பொருளாதார மத்திய நிலையத்திற்குரிய கடைகளை இன்னும் வழங்கவில்லை. விவசாயிகள், மரக்கறி வியாபாரிகள் ஆகியோருக்கு இதனை வழங்குவது குறித்து கவனம் செலுத்தப்படும் எனத் தெரிவித்தார்.

# கிளிநொச்சி பொருளாதார மத்திய நிலையம் தொடர்பில் ஆராய அமைச்சர்கள் குழு கள விஜயம்



*கிளிநொச்சி குறூப் நிருபர்*

கிளிநொச்சி பொருளாதார மத்திய நிலையம் தொடர்பில் ஆராய அமைச்சர்கள் குழுவொன்று கள விஜயமொன்றை நேற்று மேற்கொண்டனர்.

கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிராமிய பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், கரைச்சி பிரதேச செயலாளர் ஜெயகரன், பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் மற்றும் அமைச்சர்களின் இணைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கள விஜயத்தில் கலந்துகொண்டனர்.

இதன் போது, கனகபுரம் பகுதியில் அமைந்துள்ள பொருளாதார மத்திய நிலையத்தை பார்வையிட்டதுடன், வர்த்தகர்களுடனும் கலந்துரையாடினர்.

தொடர்ந்து மாவட்ட செயலகத்தில் வர்த்தகர்களுடன் கலந்துரையாடலொன்றும் இடம்பெற்றது.

# யாழ்.போதனா வைத்தியசாலையில் குருதி தட்டுப்பாடு

*யாழ்.விசேட நிருபர்*

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் இரத்த வகைகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக இரத்த வங்கி பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக B+ மற்றும் O+ ஆகிய இரத்தங்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவித்தனர்.

இரத்த தானம் செய்ய விரும்பும் குருதி கொடையாளர்கள் யாழ். போதனா வைத்தியசாலையின் பின்புறமாக அமைந்துள்ள 12ஆம் இலக்க நுழைவாயில் ஊடாக இரத்தவங்கிக்கு தினமும் காலை 08 மணி முதல் மாலை 05 மணி வரையில் நேரில் சமூகமளித்து குருதி கொடை வழங்கலாம்.

அதேவேளை மேலதிக விபரங்கள் தேவைப்படினும், இரத்ததான முகாம்களை ஒழுங்கமைப்பு செய்ய விரும்புவோரும் 0772105375 மற்றும் 0212223063 எனும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாக தொடர்பு கொள்ள முடியுமென அவர் தெரிவித்தார்.

# கௌரவமான உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வு கோரி நெடுங்கேணியில் போராட்டம்




*ஓமந்தை விஷேட நிருபர்*

கௌரவமான உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் என்னும் தொனிப்பொருளில் வடகிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் அனுசரணையோடு நீதிக்கான மக்கள் அமைப்பினால் நெடுங்கேணி சேனைப்புலவு பகுதியில் கவனயீர்ப்பு போராட்டமொன்று (04.11) முன்னெடுக்கப்பட்டது.

நிரந்தரமான அரசியல் தீர்வை வலியுறுத்தி இடம்பெற்று வரும் 100 நாட்கள் செயற்திட்டத்தில் 96 நாளான நேற்றைய போராட்டத்தில் தமது கோரிக்கைகளை ஊடகங்கள் வாயிலாக தெரிவித்திருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பயங்கரவாத தடை சட்டத்தினை உடன் நிறுத்து, கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்விற்கான மக்கள் குரல், வடக்கு கிழக்கு மக்களுக்கு அதிகார பரவலாக்கம் என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும், ஜனநாயக பாதையில் மக்களே மக்களுக்காய் போன்ற வாசகங்கள் தாங்கிய பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

# வடக்கில் நீரிழிவு நோயின் தாக்கம் அதிகரிப்பு

*பருத்தித்துறை விசேட நிருபர்*

யாழ் .போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை பிரிவில் கடந்த வருடத்தோடு ஒப்பிடும்போது இந்த வருடம் சுமார் 3000ற்கும் மேற்பட்ட நீரிழிவு நோயாளர்கள் இனம்காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

யாழ் .போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை பிரிவில் கடந்த வருடத்தோடு ஒப்பிடும்போது இந்த வருடம் சுமார் 3000ற்கும் மேற்பட்ட நீரிழிவு நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கப்படுவதாக யாழ் போதனா வைத்தியசாலை நீரிழிவு அகஞ்சுரக்கும் தொகுதி விசேட வைத்திய நிபுணர் அரவிந்தன் தெரிவித்துள்ளார், வடபகுதியில் நீரிழிவு நோயின் தாக்கம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நீரிழிவு நோயின் தாக்கம் தொடர்பில் மிக அண்மைக்கால தரவுகளின் படி கொழும்பு மாகாணத்தில் குறிப்பாக மேல் மாகாணத்தில் 30% சதவீதமானவர்களுக்கு நீரிழிவு நோயின் தாக்கம் காணப்படுகின்றது யாழ்ப்பாண மாவட்டத்தில் 15% சதவீத மானவர்களுக்கு நீரிழிவுநோயின் தாக்கம் காணப்படுகின்றது

நீரழிவு நோய் தொடர்பிலான ஆய்வுகளை நாங்கள் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றோம்

குறிப்பாக கடந்த இரண்டு மூன்று வருடங்களாக கொவிட் காலப்பகுதியில் இளைஞர் யுவதிகள் அதாவது 20 – 40 வயதுக்குட்பட்டவர்கள் மத்தியில் நீரிழிவு நோயின் தாக்கம் அதிகரித்து செல்வதை காணக்கூடியதாகவுள்ளது. யாழ்.போதனா வைத்தியசாலையில் நீரிழிவு சிகிச்சை பிரிவை எடுத்துக் கொண்டால் கடந்த வருடத்தோடு ஒப்பிடும்போது இந்த வருடம் சுமார் 3000ற்கும் மேற்பட்ட நோயாளர்கள் புதிதாக இனம்காணப்பட்டுள்ளனர். அதாவது நீரிழிவு நோயின் தாக்கமானது சிறிது சிறிதாக அதிகரித்துச் செல்வதனை காணக்கூடியதாகவுள்ளது. உலகளாவியரீதியில் அதிகரிப்பது போல வளர்முக நாடுகளில் குறிப்பாக இலங்கை போன்ற நாடுகளில் எமது வடபகுதியில் இந்த நீரழிவு நோயின் தாக்கமானது அதிகரித்து காணப்படுகின்றது என அவர் தெரிவித்தார்.

# 60 கிலோ கஞ்சா மீட்பு



*பருத்தித்துறை விசேட நிருபர்*

யாழ்ப்பாணம் சேந்தாங்குளம் கடற்கரையிலிருந்து 60 கிலோ கஞ்சா போதைப்பொருள் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. கடற்கரையில் நேற்று காலை ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தினர் இதனை மீட்டுள்ளனர். இந்தியாவின் தொண்டிப் பகுதியிலிருந்து ஓர் இரகசிய படகு வருவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் இராணுவத்தினர் சோதனையில் ஈடுபட்டனர். இதன் போது 60 கிலோ கஞ்சா போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது,

# 45 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாத வேரவில், கிராஞ்சி கிராமங்களுக்கான பிரதான வீதி

*(பரந்தன் குறூப் நிருபர்)*



கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு ஆகிய கிராமங்களுக்கான பிரதான வீதி இதுவரை புனரமைக்கப்படவில்லையென பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். இதனால் மக்கள் போக்குவரத்தில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர். குறிப்பாக தற்போது பருவ மழை பெய்ய ஆரம்பித்துள்ளமையால் தாம் பெரும் அசௌகரியங்களை அனுபவிப்பதாக தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வலைப்பாடு, வேரவில், பொன்னாவெளி, கிராஞ்சி, சிவபுரம் ஆகிய கிராமங்களுக்கான ஒரே ஒரு பாதையாக இது காணப்படுகின்றது. பல்லவராயன் கட்டு – வேரவில் வீதி சுமார் 45 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாமல் காணப்பட்டது. கடந்த 2020ம் ஆண்டில் ஐ றோட்த் திட்டத்தின் கீழ் இவ்வீதி புனரமைப்புக்காக தெரிவு செய்யப்பட்டு புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் அவை இடை நடுவில் கைவிடப்பட்டன. வீதியின் மூன்று இடங்களில் வெள்ள நீர் நிரம்பியுள்ளது.

இதனால் மக்கள் உழவு இயந்திரங்களிலேயே பயணிக்கின்றனர். வீதி நிரந்தரமாக புனரமைக்கப்படாமையால் இங்குள்ள மக்கள் அன்றாடம் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். வேரவில் வைத்தியசாலைக்கு வைத்தியர்கள் சென்று வருவதற்கும் அங்கிருந்து அவசர நோயாளிகளை முழங்காவில் வைத்தியசாலைகோ அல்லது கிளிநொச்சி வைத்தியசாலைக்கோ அல்லது பிற வைத்தியசாலைகளுக்கோ கொண்டு செல்வதற்கும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வீதியானது நீண்ட காலமாக புனரமைக்கப்படாமையால் சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்ட நோயாளிகள் பலர் இடைநடுவில் உயிரிழந்ததாகவும் கிராமவாசிகள் தெரிவித்துள்ளனர்.

# நெடுங்கேணியில் கைக்குண்டு மீட்பு

*வவுனியா விசேட நிருபர்*



வவுனியா வடக்கு, நெடுங்கேணிப்பகுதியில் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் நேற்று தெரிவித்தனர். வவுனியா வடக்கு, நெடுங்கேணி, ஒலுமடுப்பகுதியில் வீதியோரமாகவுள்ள காட்டுப்பகுதிக்கு சென்ற நபரொருவர் வீதியோரத்தில் கைக்குண்டு ஒன்று இருப்பதை அவதானித்து பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார். இதனையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற நெடுங்கேணி பொலிஸார், விசேட அதிரடிப் படையினரின் உதவியுடன் கைக்குண்டை மீட்டெடுத்ததுடன், அதனை செயலிழக்கச் செய்துள்ளனர். கைக்குண்டானது யுத்த காலத்தில் பயன்படுத்தப்பட்ட ஜே.ஆர் வகைக் குண்டு என தெரியவந்துள்ளது.

# காடழிப்பு, சட்டவிரோத மணல் அகழ்வுகள்: செய்திக்கு நத்தான்கண்டு பொலிஸார், பிரதேச செயலகம் மறுப்பு தெரிவிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு பிரதேசத்தில் காடழிப்பு மற்றும் சட்டவிரோத மணல் அகழ்வுகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாகவும் அதனை கட்டுப்படுத்த பிரதேச செயலகம் மற்றும் பொலிஸார் தவறியுள்ளதாக மக்கள் தெரிவித்த கருத்து என்ற செய்தியில் எந்த உண்மைத் தன்மையும் இல்லையென பாண்டியன் குளம் பிரதேச செயலாளர் மற்றும் நத்தான்கண்டு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் மறுப்பு தெரிவித்துள்ளனர்.

இச்செய்தி எமது பிராந்திய புதுக்குடியிருப்பு விசேட நிருபரால் அனுப்பப்பட்டு 07.10.2022 பிரசுரிக்கப்பட்டது. இந்த செய்தி தொடர்பில் பாண்டியன் குளம் பிரதேச செயலாளர், நத்தான்கண்டு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.நாம் எமது பிராந்திய செய்தியாளரை இது தொடர்பில் தொடர்பு கொண்டு அறிவுறுத்தியுள்ளோம்.

இரு பக்க கலந்துரையாடல் அற்ற நிலையில் இச்செய்தியை எமது பிராந்திய நிருபர் அனுப்பியுள்ளதாக நாம் கருதுகிறோம். ஆகவே இச்சம்பவம் தொடர்பில் பிரதேச செயலகத்தின் ஊடாக முழுமையான விளக்கமொன்றை தந்தால் அதை பிரசுரிக்க தயாராகவிருக்கின்றோம்.

# கணக்காய்வு கூட்டம்

யாழ்.மாவட்ட செயலக நான்காம் காலாண்டுக்குரிய கணக்காய்வு முகாமைத்துவக் குழுக்கூட்டம் மாவட்ட செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தலைமையில் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர்(காணி), பிரதம கணக்காளர், இணைய நிகழ்நிலை வழியாக அமைச்சின் உள்ளகக் கணக்காய்வாளர் (Department of Management Audit), மாவட்ட செயலக கணக்காய்வு உத்தியோகத்தர், மாவட்டச் செயலக திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட செயலக உள்ளக கணக்காய்வாளர், பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், பிரதேச செயலக கணக்காளர்கள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# டெங்கு காய்ச்சலினால் பெண்ணொருவர் உயிரிழப்பு

*யாழ்.விசேட நிருபர்*

டெங்கு காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறை அல்வாயைச் சேர்ந்த அன்னலிங்கம் திருச்செல்வி (வயது63) எனும் 5 பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கடந்த திங்கட்கிழமை மாலை காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை அவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி நேற்று முன்தினம் வியாழக்கிழமை உயிரிழந்துள்ளார். அவரது உயிரிழப்புக்கு டெங்கு காய்ச்சலே காரணம் என மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நகர்வலம்



# கலாநிதி நஜீப் ஹாஜியாருக்கு தர்கா நகரில் பெரு வரவேற்பு

### அமெரிக்கப் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம்

பேருவளை விசேட நிருபர்



தர்காநகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகரும் முன்னணி பிரபல சமூக சேவையாளருமான நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிமுக்கு அமெரிக்கா தேசிய வணிக பல்கலைக்கழகத்தினால் (AMERICAN NATIONAL BUSINESS UNIVERSITY) கலாநிதி பட்டம் (DOCTOR DEGREE FOR SOCIAL SERVICES) வழங்கி கௌரவிக்கப் பட்டதை முன்னிட்டு அவருக்கு வரவேற்பளிக்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு தர்கா நகர் லோடஸ் வீதியில் உள்ள மர்ஹபா வரவேற்பு மண்டபத்தில் நடைபெறும். தர்கா நகர் ஸூன்னத் வல் ஜமாஅத் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறும். இவ்விழாவுக்கு மேற்படி அமைப்பின் முக்கியஸ்தர் ஏ.ஆர்.எம் ஹில்மி தலைமை வகிப்பார். சீனன் கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தகர் சங்க முன்னாள் தலைவரும் ஆலோசகரும் மனித உரிமை அமைப்பின் முக்கியஸ்தருமான கலாநிதி எம்.இஸட்.எம். நிஸார் ஹாஜியார் பிரதம அதிதியாக கலந்து கொள்வார். தர்கா நகர் தேசிய கல்வியற்கல்லூரி முன்னாள் உப பீடாதிபதி மௌலவி ஏ.ஆர்.எம் ஸில்மி (னூரி அல் அஸ்கரி) 'கல்வியும் பட்டம் பதவிகளும்' எனும் தலைப்பில் விஷேட சொற்பொழிவாற்றுவார். அத்தோடு மக்கொனை அல் ஹஸனிய்யா முஸ்லிம் மகா வித்தியாலய முன்னாள் அதிபரும் எழுத்தாளருமான எம்.எஸ்.எம் இர்பான் நஜீப் ஹாஜியார் பற்றி உரையாற்றுவார். கலாநிதி நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிம் விழாவில் கௌரவிக்கப்படவுள்ளதோடு விஷேட துஆப்பிரார்த்தனையும் இடம்பெறும். விழாவில் புத்திஜீவிகள் மற்றும் உலமாக்கள், அரசியல்வாதிகள், பள்ளிவாசல்களின் நிர்வாகிகள், பிரமுகர்கள் பலரும் கலந்து கொள்வர்.

# தர்கா நகர் இஸ்லாமிய நலன்புரிச் சங்கத்தினால் தரம் ஐந்து மாணவர்களுக்கு பாராட்டு விழா

பேருவளை விசேட நிருபர்



தர்கா நகர் இஸ்லாமிய நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் தர்கா நகரில் உள்ள மூன்று பாடசாலைகளிலும் 2020ம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் நூற்றுக்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் அல் ஹம்ரா மகா வித்தியாலய மண்டபத்தில் தலைவர் ஏ.பி. எம்.ஸுஹைர் ஹாஜியார் தலைமையில் நடைபெற்றது.

அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபன முன்னாள் தலைவர் டொக்டர் ரூமி ஹாசிம் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம்.அஸ்லம் ஹாஜியார், களுத்துறை நகர பிதா ஆமிர் நஸீர், அல்ஹம்ரா மகா வித்தியாலய முன்னாள் அதிபர் எம்.இஸட்.எம். நயீம், இலங்கை வங்கி முன்னாள் பிரதிப் பொது முகாமையாளரும் கவிஞருமான ரீ.எம்.ஸபா, மௌலவி பஸ்ஹான் புர்க்கான் ஆகியோர் தர்கா நகர் இஸ்லாமிய நலன்புரிச் சங்கத்தின் கல்வி, ஆன்மீக, பொதுப் பணிகளை பெரிதும் பாராட்டிப் பேசினர். மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் இப்திகார் ஜெமீல், கல்விமான்கள், ஊர் பிரமுகர்கள், பெற்றோர்கள் என பலரும் விழாவில் பங்குபற்றினர். தர்கா நகர் அல் ஹம்ரா மகா வித்தியாலயம், ஸாஹிரா ஆரம்பப் பாடசாலை, அளுத்கம வீதிய முஸ்லிம் மகளிர் தேசிய பாடசாலை ஆகிய மூன்று பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு விழாவில் பரிசளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### பயங்கரவாதத்துக்கு ஆதரவு அளிக்கும் பாகிஸ்தான்

# சாம்பல் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டதற்கு இந்தியா எதிர்ப்பு



சர்வதேச நிதி நடவடிக்கைகள் அதிரடிக் குழுவினால் சந்தேகத்துக்குரிய நாடாகக் கருதப்பட்டு சாம்பல் நிறப் பட்டியலில் 2018 முதல் வைக்கப்பட்டிருந்த பாகிஸ்தானை அதில் இருந்து நீக்கியுள்ளமையை இந்தியா கண்டித்துள்ளது.

சாம்பல் நிறப் பட்டியலில் இருந்து பாகிஸ்தான் நீக்கப்பட்டது துரதிர்ஷ்டவசமானது. உண்மையில் அந்நாடு கறுப்புப் பட்டியலில் வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று இந்தியாவின் விசேட வழக்குத் தொடுநரான உஸ்வால் நிக்காம் ஏ. என். ஐ செய்திச் சேவைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

'26/11 இரட்டைக் கோபுர தாக்குதலில் இருந்து பாகிஸ்தானுக்கும் பயங்கரவாதத்துக்கும் இடையில் காணப்படும் தொடர்புகளை இந்தியா ஆதாரபூர்வமாக தெரிவித்து வந்துள்ளது. தாவூத் இப்ராஹீம், இஸாப், ஸாகீர் ரெஹ்மான் ஆகியோர் ஏவிவிடப்பட்டு இந்தியாவில் தாக்குதல்களை நிகழ்த்தியவர்கள்.

எனினும் எத்தகைய ஒரு நிலையையும் சமாளிக்கும் திறன் கொண்ட நாடாக இந்தியா விளங்குவதால் சாம்பல் பட்டியலில் இருந்து பாக். நீக்கப்பட்டமையால் இந்தியாவுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. பாகிஸ்தான் ஒரு பயங்கரவாத நாடல்ல என சீனா குறிப்பிடுவது இங்கே கவனிக்கத்தக்கது' என்று தன் செவ்வியில் உஜ்வால் மேலும் தெரிவித்திருந்தார்.

### கெப்பித்திகொல்லாவ சார்ஜன்ட் கொலை

# சந்தேக நபர்கள் 14 பேரில் ஒருவருக்கு பிணை

அநுராதபுரம் தினகரன் நிருபர்

கெப்பித்திகொல்லாவ பொலிஸ் நிலைய பொலிஸ் சார்ஜன்ட் அடித்துக் கொலை செய்த சம்பவத்தில் கைது செய்யப்பட்ட பிக்கு ஒருவர் உள்ளிட்ட சந்தேக நபர்கள் 14 பேரை நீதிமன்றில் ஆஜர்படுத்தியதன் பின்னர் அவர்களில் 13 பேரை இம்மாதம் 10 ஆம் திகதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்குமாறு கெப்பித்திகொல்லாவ நீதிமன்ற நீதவான் கசுன் திசாநாயக்கவினால் உத்தரவிடப்பட்டுள்ளது.

கொலைக் குற்றச்சாட்டு மற்றும் கடமைக்கு இடையூறு விளைவித்தல், அமைதியின்மையை ஏற்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டின் கீழ் பொலிஸாரால் நீதிமன்றத்தில் பெறப்பட்ட 48 மணித்தியால தடுப்புக்காவல் விசாரணைகளின் பின்னர் 02 ஆம் திகதி சந்தேக நபர்களை கெப்பித்திகொல்லாவ நீதிமன்றில் ஆஜர்படுத்திய போதே நீதவான் இவ் விளக்க மறியல் உத்தரவினை பிறப்பித்துள்ளார். 14 வது சந்தேக நபரை 48 மணித்தியாலம் தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்வதற்காக வேண்டி பொலிஸாருக்கு நீதவான் அனுமதி வழங்கியுள்ளார்.

இன்னுமொரு சந்தேக நபர் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்காகவேண்டி பொலிஸாரது கட்டுப்பாட்டில் உள்ளார். இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களில் பிக்கு ஒருவரும் பெண் ஒருவரும் உள்ளடங்குகின்றனர். இவர்கள் அனைவரும் ரம்பகெப்புவெவ தித்தகோனேவ கெப்பித்திகொல்லாவ பகுதிகளை வசிப்பிடமாக கொண்ட 19 வயதிற்கும் 54 வயதிற்கும் இடைப்பட்டவர்களாவர் என்பது தெரியவந்துள்ளது.

# ஆப்கானிலுள்ள பாக். தூதரகங்கள் தலிபான்களின் தீவிர கண்காணிப்பில்



பாகிஸ்தானுக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் இடையிலான எல்லையோர மோதல்கள் வலுத்து வரும் நிலையில் தலைநகர் காபூலிலும் ஜலலாபாத் நகரிலும் அமைந்துள்ள பாக். தூதரகங்களுக்கு அண்மித்ததாக சந்தேகத்துக்குரிய நடமாட்டங்களை தலிபான் படையினர் தீவிரமாகக் கண்காணிக்க ஆரம்பித்திருப்பதாக 'ஆப்கான் டயஸ்போரா' தெரிவித்துள்ளது.

தமது எல்லையோர கிராமங்கள் மீது பாக். படையினர் குறிவைத்திருப்பதாகக் கருதும் தலிபான் அரசு, ஆப்கானிஸ்தான் மீது வன்முறைத் தாக்குதல்களை பாகிஸ்தான் இராணுவம் ஏவிவிடலாம் என எதிர்பார்த்துள்ளது. அரசியல் ரீதியாகவே அல்லது இராஜதந்திர ரீதியாகவே பாகிஸ்தானினால் ஏவிவிடப்படக் கூடிய தாக்குதல்களை முறியடிக்கும் வகையில் ஆப்கான் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக காபூல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆப்கான் எல்லைப் பகுதியில் இருந்து ஊடுருவல்கள் நிகழ்வதைத் தடுக்கும் வகையில் எல்லையோரமாக வேலி அமைக்கும் வேலைகளை பாகிஸ்தான் 2016இல் ஆரம்பித்தது. இந்த வேலி அமைப்பு பாரம்பரிய பஸ்துன் மக்கள் வாழும் பகுதிகளை ஊடறுத்துச் செல்கிறது. தமக்கு இடையிலான பாரம்பரிய குடும்ப உறவுகளை இவ்வேலி அமைப்பு பாதிப்பதாக பஸ்தூன் மக்கள் கருதுகின்றனர்.

ஐ.நா.வின் 77வது பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றிய பாக். பிரதி வெளிவிவகார அமைச்சர் மொஹமட் அப்பாஸ் ஸ்டொனிக்ஸாய், தலிபான்களுக்கு எதிரான வார்த்தைப் பிரயோகங்களை ஆப்கான் அரசு கண்டித்திருந்தது. தெஹ்ரீக் ஈ. தலிபான் என்ற பெயரில் இயங்கும் அமைப்பு தனது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக விளங்குவதாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

பாக் ஆப்கான் எல்லையோரத் தாக்குதல்கள் பாகிஸ்தானினால் ஆரம்பிக்கப்பட்டதாகவும் துப்பாக்கிப் பிரயோகங்கள், குண்டுத் தாக்குதல்கள் என அடிக்கடி மோதல்கள் நிகழ்வதாகவும் கந்தஹார் ஸ்பின் பொல்டாக் மாவட்ட பிரதம பொலிஸ் அதிகாரி மௌலவி மஹ்மூத் தெரிவித்துள்ளார்.

### இந்தியாவுடனான ஐரோப்பிய ஒன்றியத்தின்

# வர்த்தக உடன்படிக்கை முக்கியத்துவம் வாய்ந்தது



இந்தியாவுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ஒன்றை செய்து கொள்வது தொடர்பில் தற்போது இடம்பெற்றுவரும் பேச்சுவார்த்தைகள் இம்முறை ஒரு உடன்பாட்டுக்கு வரும் என ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினரான கெத்லீன் வான் பிரெப்ட் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஐரோப்பிய ஆசிய பவுண்டேஷனுக்கு எழுதியுள்ள ஒரு கட்டுரையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ள கெத்லீன், இரு தரப்புக்கும் ஏன் இந்த உடன்படிக்கை முக்கியமானது என்பதற்கான காரணங்களையும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விரு தரப்புகளும் அரசியல் மற்றும் பொருளாதார தொடர்புகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. இந்தியா உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு. இந்தோ – பசுபிக் பிராந்தியத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இந்தியா அமைந்துள்ளது. சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் அண்மித்ததாக இந்தியா உள்ளது.

இந்தியாவின் இந்த புவியியல் சார்ந்த அரசியல் முக்கியத்துவத்தை ஐரோப்பா புறந்தள்ளிவிட முடியாது. இந்திய பொருளாதாரம் வேகமாக வளர்ந்து வருகிறது. விசாலமான சந்தையைக் கொண்டுள்ளது. சர்வதேச நாணய நிதியம் அதன் வருடாந்த உள்ளூர் உற்பத்தி வளர்ச்சியை எட்டு வீதமாக மதிப்பிட்டுள்ளது. மேலும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பத்தாவது பெரிய வர்த்தக பங்காளியாக இந்தியா விளங்கி வருகிறது. இந்தியாவில் ஆறாயிரம் ஐரோப்பிய நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் 17 இலட்சம் பேர் தொழில் புரிகின்றனர். இது தவிர இன்னும் பயன்படுத்தப்படாத வளங்கள் இந்தியாவில் உள்ளன என தன் கட்டுரையில் இவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து இறக்குமதியாகும் வைன், கார் உட்பட முக்கியமான பொருட்களின் மீது 60 முதல் நூறு சதவீத வரியை இந்தியா அறவிட்டு வருகிறது. ஐரோப்பிய ஒன்றியம் வரி குறைப்பை எதிர்பார்த்துள்ளது. இதே சமயம் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் ஊடாக இந்தியாவை உலகளாவிய உற்பத்தி கேந்திரமாகவும் பிராந்திய வர்த்தக முதன்மையாளராகவும் மாற்றி அமைத்துக் கொள்ள இந்தியா விரும்புகிறது.

### இந்தோ – பசுபிக்

# பிராந்திய சுதந்திரத்தை பாதுகாக்கும் உடன்படிக்கை

### அவுஸ்திரேலிய ஜப்பானிய தலைவர்கள் உடன்பாடு



ஜப்பானும் அவுஸ்திரேலியாவும் நடைமுறை சாத்தியமான பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொண்டுள்ளன. கடந்த மாதம் 21ம் திகதி மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு அவுஸ்திரேலியா சென்றிருந்த ஜப்பானி பிரதமர் ஃபியூமியோ கிஷிடா, அவுஸ்திரேலிய பிரதமர் அந்தனி அல்பனீசை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய போது இதற்கான உடன்பாடு ஏற்பட்டது.

ஆசிய – பசுபிக் பிராந்தியத்தில் சர்வதேச சட்டங்களையும் நடைமுறைகளையும் மீறும் நாடுகள் மீது நடவடிக்கை எடுக்க இந்த உடன்படிக்கை அதிகாரமளிக்கும். இப்பிராந்தியத்தில் சீனாவின் நடவடிக்கைகள் அதிகரித்துவரும் நிலையிலேயே இந்த உடன்பாடு ஏற்பட்டுள்ளதாக கியோடோ செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

இந்தோ – பசுபிக் சுதந்திரமான, வெளியரங்கமான பிராந்தியமாகத் திகழ வேண்டும் என இவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சீனா ஜனாதிபதியாக மூன்றாவது தடவையாகவும் ஜீன்பிங் தெரிவானதையடுத்து பீஜிங்கின் கொள்கையில் மாற்றம் ஏற்படலாம் என்றும் அவர் தெரிவு செய்யப்பட்ட பின்னர் தாய்வான் மீதான சீனாவின் மிரட்டல்கள் அதிகரித்திருப்பதாகவும் குறிப்பிடும் சர்வதேச அவதானிகள், இப்பதற்ற சூழ்நிலையிலேயே அவுஸ்திரேலிய மற்றும் ஜப்பானிய பிரதமர்களின் சந்திப்பு நிகழ்ந்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளனர். பிராந்தியத்தில் சீனாவின் தலையீடு அதிகரித்திருப்பதையடுத்து ஜப்பான், தென் கொரியா, அவுஸ்திரேலியா மற்றும் சிங்கப்பூர் தனது இராணுவ செலவீனங்களை அதிகரித்திருப்பதாக சிங்கப்பூர் போஸ்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.



கொழும்பு 04 முஸ்லிம் மகளிர் கல்லூரியின் 76 ஆவது வருட நிறைவை முன்னிட்டு 6, 7 மற்றும் 8ம் தர வகுப்பு மாணவிகளின் கைப்பணிக் கண்காட்சி பாடசாலையின் ஹிஜ்ரா மண்டபத்தில் அதிபர் நஸ்ரியா முனாஸ் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலையின் மகளிர் சங்கத்தின் உப தலைவர் பெரோஸா முஸம்மில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு கண்காட்சியைத் திறந்து வைத்தார். இந் நிகழ்வில் பிரதி அதிபர் ரஸ்மியா அபூபக்கர், உப அதிபர் சி. பொதேஜு ஆகியோர்கள் கலந்து கொண்டனர். (படங்கள்: இக்பால் அலி)

# வெலிகம பிரதேசத்தில் கல்விப்பணியாற்றிய மர்ஹூம் ஏ.ஆர்.எம். அபூபக்கர் ஆசிரியர்

தென்னிலங்கையின் வெலிகம நகரில் 1924 ஆம் ஆண்டு அப்துர் ரஹீம் மற்றும் மைமூன் நாச்சியா தம்பதிகளுக்கு மகனாக பிறந்தார் மர்ஹூம் அல்ஹாஜ் ஏ.ஆர்.எம். அபூபக்கர் ஆசிரியர். இவர் சிறுவயது முதல் மார்க்கத்திலும் கல்வித்துறையிலும் அதிகம் ஆர்வம் கொண்டவராக காணப்பட்டார். கல்வி கற்கும் காலத்திலே சமூக அக்கறை அதிகம் கொண்டவராக விளங்கினார். சங்கங்களும் சமூக சேவை நிறுவனங்களும் இல்லாத அக்காலத்தில் தனது கல்வியின் மூலம் சமூகத்திற்கு தன்னால் முடிந்த சேவைகள் செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்டார்.

அவர் தனது பாடசாலைக் கல்வியை தற்போதைய வெலிகம அறபா தேசிய பாடசாலையிலும் பின்னர் அளுத்கம அல் ஹம்ரா வித்தியாலயத்திலும் பூர்த்தி செய்தார். அதன் பின்னர் ஆசிரியர் பயிற்சியை அளுத்கம ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நிறைவு செய்தார்.

தான் கல்வி கற்ற வெலிகம அறபா தேசியப் பாடசாலையிலேயே ஆசிரியராக கடமையாற்றியதுடன் தனது சொந்த ஊரில் மாத்திரமல்லாது காலி நாவின்ன முஸ்லிம் வித்தியாலயம், ஹம்பாந்தோட்டை அரசினர் தமிழ்ப் பாடசாலை ஆகியவற்றிலும் அதன் பின்னர் வெலிப்பிட்டிய அரசினர் முஸ்லிம் வித்தியாலயம் போன்ற பாடசாலைகளிலும் ஆசிரியராகவும் உபஅதிபராகவும் கடமையாற்றியுள்ளார்.

இவ்வாறு ஆசிரியர் துறையில் பல வருடங்கள் பணியாற்றிய ஏ.ஆர்.எம். அபூபக்கர் ஆசிரியர், தனது மாணவர்களுக்குப் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியருள் ஒருவராக மாத்திரமல்லாமல், தனது அனுபவங்களைக் கொண்டு நல்லொழுக்கமுள்ள நற்பிரஜைகளை உருவாக்க அரும்பாடுபட்ட உத்தம ஆசிரியர் ஒருவராகவும் திகழ்ந்தார். இதனால் பாடசாலை மாணவர் மத்தியிலும் சமூகத்திலும் நல்லாசிரியர் எனப் புகழப்பட்டார்.

பின்னர் 1984 ஆம் ஆண்டு தனது 32 வருட ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெற்றாலும் சமூகப் பணிகளில் தொடர்ந்தும் ஈடுபாடுள்ளவராகத் திகழ்ந்தார். மர்ஹூம் இஸட். எல்.எம். முஹம்மத் வானொலி நிலையத்தில் கடமையாற்றிய காலத்தில் அடிக்கடி இவரது இஸ்லாமிய நற்சிந்தனைகளை ஒலிபரப்புச் செய்ததோடு மாத்திரமல்லாமல் வானொலி பத்திரிகைக் கலைஞராகவும் திகழ்ந்தார்.



சிறு வயது முதல் வாசிப்பில் ஆர்வம் கொண்டவராக காணப்பட்டதால் அனைவரையும் வாசிப்புப் பழக்கத்துக்கு ஆர்வமூட்டியது மட்டுமல்லாது தினகரன் பத்திரிகையில் வாராந்தம் பிரசுரிக்கப்பட்ட குறுக்கெழுத்துப் போட்டியில் வெற்றியீட்டியோர் விபரத்தில் இவரது பெயரைஅடிக்கடி காணக்கூடியதாக இருந்தது.

தனது 98 ஆவது வயதைப் பூர்த்தி செய்து இவ்வருடம் ஒகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஏ.ஆர்.எம். அபூபக்கர் ஆசிரியர் இறையடி சேர்ந்தார். அன்னாரின் ஜனாஸாவில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர். அன்னாரின் மறுமை வாழ்வுக்காக பிரார்த்திப்போம்.

**எம்.எச்.சீ. நூருல் ஸம்ரா**
புதியதெரு, வெலிகம

# தென் மாகாண மீன்பிடி துறைமுகங்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்

## கடற்றொழில் அமைச்சர் டக்லஸ் தேவானந்தா

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**



தென் மாகாணத்திலுள்ள பெரும்பாலான மீன்பிடி துறைமுகங்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியது இன்றைய தேவையாகுமென கடற்றொழில்அமைச்சர்அமைச்சர் டக்லஸ் தேவானந்தா தெரிவித்தார்.

தென் மாகாணத்திற்கு விஜயம் செய்த அமைச்சர் தேவானந்தா, ஹம்பாந்தோட்டை மாவட்ட கிரிந்தை, தங்காலை மற்றும் குடாவெல்லை ஆகிய மீன்பிடி துறைமுகங்களுக்கு விஜயம் செய்து பார்வையிட்டார். இதன்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அமைச்சர், தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நிலைமை காரணமாக இருந்தாலும் எதிர்காலத்தில் மீன்பிடி துறைமுகங்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். மின்சாரத்தினை உற்பத்தி செய்வதற்காக சூரிய சக்தி மின்சாரத்தை பெறுவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டு வருகின்றது.

மீனவர்களையும் நுகர்வோரையும் கவரக் கூடியவகையில் மீன்பிடித் துறைமுகங்கள் காட்சிப்படுத்தல் வேண்டும். அதேபோல், துறைமுகங்களின் சுத்தத்தினை பேணி அதனை பாதுகாக்கும் பொறுப்பு மீனவர்களோடு இணைந்து மீன்பிடி துறைமுகங்களை பயன்படுத்தும் பொதுமக்களுக்கும் உள்ளது எனவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

# கடற்றொழில் துறையில் பாரிய பிரச்சினைகள் காணப்படுகின்றன

மண்ணெண்ணெய் விலை தொடர்பான பிரச்சினையை விட கடற்றொழில் துறையில் பாரிய பிரச்சினைகள் காணப்படுவதாக கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

அண்மையில் களுத்துறை மாவட்டத்தில் மீன் பிடித் தொழில் தொடர்பான செயல்பாடுகளை ஊக்குவிக்கும் விசேட நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் விளக்கமளித்த கடற்றொழில் இராஜாங்க அமைச்சர், தற்போது மீனவர்கள் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினையாக மண்ணெண்ணெய் விலையேற்றம் உள்ளது என்பதை தாம் தெளிவாக ஏற்றுக் கொள்வதாக கூறினார். எவ்வாறாயினும் நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமை குறையும் போது பிரச்சினைக்கான தீர்வையும் காண முடியும் என அவர் தெரிவித்தார். ஆனால் அனைத்து கடற்றொழில் துறையிலும் நீண்ட காலமாக தீர்க்கப்படாத பல பாரிய பிரச்சினைகள் உள்ளது. கடற்றொழில் துறையின் ஊடாக நாட்டின் பொருளாதாரத்துக்கு சிறந்த முறையில் பங்களிப்பை அளிக்க வேண்டும் என்றால் அந்தப் பிரச்சினைகளை விரைவாக தீர்க்க வேண்டும் என அமைச்சர் தெரிவித்தார். சில மீன்பிடி துறைமுகங்களில் நிர்வாக குறைபாடுகள் காரணமாக மீனவர்கள் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளனர் என சுட்டிக்காட்டினார். மேலும் தான் மாவட்டங்களுக்கு மாவட்டம் சென்று பிரச்சினைகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.



இந்த விசேட வேலை திட்டம் கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த் டி சில்வா தலைமையில் பேருவளை அமா ஹோட்டல் வளாகத்தில் களுத்துறை மாவட்ட கடற்றொழில் அமைச்சின் அனைத்து அதிகாரிகளின் பங்களிப்புடன் நடைபெற்றது. அங்கு களுத்துறை மாவட்ட மீனவர்கள் முகம் கொடுக்கும் பிரதான பிரச்சினைகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது.

# பொரளை அஹதிய்யா ஏற்பாட்டில் மீலாத் தின சிறப்பு நிகழ்வுகள்





**ஏ.எஸ்.எம்.ஜாவித்**

பொரளை அஹதிய்யா கல்வி நிலையமும் அகில இலங்கை சூபி தரீக்கா உயர்பீடமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த மீலாதுந் நபி நிகழ்வு கொழும்பு பிரதம தபாலக கேட்போர் கூடத்தில் அண்மையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

பொரளை அஹதிய்யா கல்வி நிலையத்தின் பணிப்பாளர் சிப்லி ஹாசிம் வழிகாட்டலில் நடைபெற்ற நிகழ்வு அகில இலங்கை றிபாய் தரீக்கா ஆன்மீகத் தலைவர் ஆசிக் தங்கல் தலைமையில் நடைபெற்றமை விசேட அம்சமாகும்.

இதன்போது அஹதிய்யா போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன. அஹதிய்யா போட்டிகளில் பங்கு பற்றிய மாணவ, மாணவிகளின் பேச்சு, கஸீதா என்பனவும் இடம்பெற்றன.

வரவேற்புரையை சூபி தரீக்கா உயர்பீட செயலாளர் கலாநிதி அஹமட் றிஸி நிகழ்த்தியதுடன் பொரளை அஹதிய்யா கல்வி நிலைய பணிப்பாளர் சிப்லி ஹாசிம் நன்றியுரையை நிகழ்த்தினார்.

மாத்தறை றிஸ்வியா அரபிக் கல்லூரி தலைவரும் சூபி தரீக்காவின் உயர்பீட உறுப்பினர் முப்தி அல் ஆலிம் முஸ்தபா ரசா விசேட உரை நிகழ்த்தினார். இதன்போது முக்கியஸ்தர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

## மத்திய கிழக்கிலிருந்து நாடு திரும்பிய நபர் கடத்தல்

# ரூ. எட்டு இலட்சம் பணம், நகைகள் கொள்ளையிட்ட மூவர் கைது

## வீடொன்றில் சிறைப்படுத்தி வைத்ததாகவும் தகவல்

**(புத்தளம் விசேட நிருபர்)**

மத்திய கிழக்கு நாடொன்றில் தொழில் செய்துவிட்டு அண்மையில் நாடு திரும்பி புத்தளம் தில்லையடி பிரதேசத்தில் வசித்து வந்த நபர் ஒருவரைக் கடத்திச் சென்று கம்பஹா பிரதேசத்தில் அமைந்துள்ள வீடொன்றில் சிறைப்படுத்தி வைத்திருந்துள்ளதோடு, அவரிடமிருந்து எட்டரை இலட்சம் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டுப் பணம் மற்றும் தங்க நகைகளைக் கொள்ளையிட்டதாகச் சொல்லப்படும் மூவரை நேற்று முன்தினம் கைது செய்துள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் தில்லையடி பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடைய நபரே இவ்வாறு கடந்த ஒக்டோபர் 23ம் திகதி கடத்திச் செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கார் ஒன்றில் வந்துள்ள கொழும்பு மற்றும் கம்பஹா பிரதேசங்களைச் சேர்ந்த கடத்தப்பட்ட நபருக்கு அறிமுகமானவர்கள் எனக் கூறப்படும் மூவராலேயே இந்நபர் அவரது வீட்டுக்கு அருகில் வைத்துக் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

இவ்வாறு கடத்திச் செல்லப்பட்ட இந்நபர் கம்பஹா பிரதேச வீடொன்றில் அடைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த சனிக்கிழமை (29) அவ்வீட்டிலிருந்து அந்நபர் தப்பி வந்துள்ளதாகவும், பின்னர் இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். சுமார் ஐந்து இலட்சத்து அறுபதாயிரம் ரூபாய் பெறுமதியான தன்னிடமிருந்த தங்க நகைகளுடன், இரண்டு இலட்சத்தி எண்பதாயிரம் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு நாணயத்தாள்களும் கடத்தப்பட்ட சமயம் தன்னிடமிருந்ததாகவும், தன்னைக் கடத்தியவர்கள் அவை அனைத்தையும் கொள்ளையிட்டதாகவும் அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்த புத்தளம் பொலிஸார் நேற்று முன்தினம் இரவு குறித்த நபரைக் கடத்திய மூவரையும் கைது செய்ததாகவும், கடத்தப்பட்ட நபர் தடுத்து வைக்கப்பட்டிருந்த கம்பஹா வீட்டையும் கண்டுபிடித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். பணக் கொடுக்கல் வாங்கல் ஒன்றினை அடிப்படையாக வைத்தே இந்நபர் இவ்வாறு கடத்தப்பட்டுள்ளமை விசாரணைகளிலிருந்து தெரிய வந்திருப்பதாகத் தெரிவித்த புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



கும்பகோணத்தில் நடந்த தேவர் ஜெயந்தி விழாவில் சிவசேனா மாநில செயல் தலைவர் சசிக்குமார், இந்து மக்கள் கட்சி மாநில செயலாளர் பாலா, சிவசேனா தஞ்சை மாவட்ட அமைப்பாளர் சரவணபாரதி குடந்தை நகர தலைவர் ஆனந்த், PMT சபரிதேவர், கனபதி தேவர், ராமன் தேவர் மற்றும் தேவர் பாசறை அவர்களுடன் கலந்து கொண்ட போது எடுக்கப்பட்ட படம்.

# மாளிகாவத்தை ஜும்ஆ பள்ளிவாசலில் கொடியேற்றம்

**ருஸைக் பாரூக்**



கொழும்பு 10, மாளிகாவத்தை பெரிய ஜும்ஆ மஸ்ஜிதில் சங்கைக்குரிய கௌஸுல் அஹ்லம் , வ மஹ்பூபுஸ் சுப்ஹானி குத்புல் அக்தாப் அஸ் செய்யித் முஹியத்தீன் அப்துல் காதிர் ஜீலானி கத்தஸல்லாஹுல் ஸிர்ரஹுல் அஸீஸ் (ரலி) அவர்களின் ஞாபகார்த்த மஜ்லிஸ் ஹிஜ்ரி 1444 ரபிய்யுல் ஆகிர் தலைப்பிறை, கடந்த மாதம் 27ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தமாமுடன் நிறைவு பெறவுள்ளது.

அப்பள்ளிவாசல் மௌலவிகளான அல்ஹாபிழ் அல்ஹாஜ் மௌலவி ஏ.டப்ளியு.எம். ஆதில் (நூலாரி), முகத்தம் மௌலவி ஏ. எம். அப்துல் முஸவ்விர் (நூலாரி) மற்றும் அல்ஹாபிழ் மௌலவி இம்பாஸ் அஹமத் (ரஷாதி) ஆகியோர்களின் தலைமையில் மேற்படி நிகழ்வு ஆரம்ப வைபவம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# நல்லத்தண்ணி தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆசிரியர்கள் பற்றாக்குறை

ஹற்றன் வலய கல்வி பணிமனைக்குட்பட்ட மஸ்கெலியா நல்லத்தண்ணி தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறையால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக பெற்றோர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சுமார் 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலையில் 17 ஆசிரியர்கள் மாத்திரமே பணியில் இருப்பதாகவும் சிலசமயங்களில் பாடவேளையில் அநேகமான வகுப்புக்கள் ஆசிரியர்களின்றி காணப்படுவதாக பெற்றோர்கள் கூறுகின்றனர்.

இப் பிரச்சினை கடந்த மூன்று மாதங்களாக தொடர்வதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பாடசாலையிலிருந்து இடம் மாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களின் வெற்றிடத்தை நிரப்புவதற்காக எவ்வித செயற்பாட்டு காரணிகளும் நடைபெறவில்லை.மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் ஸ்தம்பிதம் ஏற்பட்டுள்ளது.

ஆகையால் ஹற்றன் வலய கல்வி பணிமனை இதற்கான தீர்வினை பெற்றுத் தருமாறு பெற்றோர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

நீலமேகம் பிரசாந்த்




சீனன்கோட்டை பெருகமலை தாக்கிரீன் குர்ஆன் மத்ரஸா மேற்பார்வை குழு உறுப்பினர்கள், பள்ளிவாசல் நிர்வாக சபை தலைவர் அர்சத் ஸவாஹிர் ஹாஜியார் மற்றும் அதிபர் மௌலவி எஸ்.எச்.எம்.இம்ரான் (ஹுமைதி) ஆகியோர் மத்ரஸாவின் முப்பெரும் விழாவை முன்னிட்டு எடுத்துக் கொண்ட படம்.விழா நாளை நடைபெறவுள்ளது.

படம்.பி.எம்.முக்தார்



முசலி பிரதேச செயலளர் சிவராஜின் வேண்டு கோளுக்கிணங்க மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வு சங்கத்தின் அனுசரணையில் முசலி பிரதேச கிராம அலுவலக பிரிவுக்குட்பட்ட கிராம மட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட 50 பயனாளிகளுக்கு முசலி பிரதேச செயளாலர் மற்றும் மன்னார் துயர் துடைப்பு சங்க அதிகாரிகளினால் உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைத்த போது...

# அதிகார மாற்றங்களை விடுத்து மக்களின் அடிப்படை பிரச்சினையை தீர்க்க முன்வரவும்

## ஸ்ரீலங்கா ஐக்கிய முன்னணி பொதுச் செயலாளர்

நாட்டு மக்கள் பொருளாதார நெருக்கடியில் தவிக்கும் நேரத்தில் பாராளுமன்றத்தில் மக்கள் பிரதிநிதிகள் அதிகாரங்களை கைப்பறும் நுட்பங்களை கைவிட்டு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வுக்கு ஆதரவு வழங்க முன்வர வேண்டுமென ஸ்ரீலங்கா ஐக்கிய முன்னணி கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஐ.சல்மான் வஹாப் கூறினார். நாட்டு மக்கள் இன்று தேர்தல் நடத்த வேண்டுமென்றோ அதிகாரங்கள் கைமாற்றப்படல் வேண்டுமென்றோ கூறவில்லை,

உணவுப் பிரச்சினை, பொருள்விலையேற்றப் பிரச்சினை போன்ற அடிப்படை பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டுமென்றே மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

நாட்டு மக்களின் இந்த எதிர்பார்ப்புக்களை சரியாக புரிந்து கொண்ட ஒரு திட்டமிடலிலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டை வழிநடாத்திச் செல்கின்றார். ஜனாதிபதி செயலகம்,ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகம் என்பன ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் பொதுமக்களின் பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதில் ஆர்வம் காட்டுவதும் பாராட்டத்தக்கது.

இச்சூழ்நிலையில் தமது சொந்த அரசியல் அபிலாசைகள் நிறைவேற்றப்படுவதற்கான சந்தர்ப்பமாக இக்காலப்பகுதியினை பாராளுமன்ற உறுப்பினர்கள் பயன்படுத்தாது மக்கள் மீது அன்பு கொண்ட அரசியல் கட்சிகளாக அரசியல்வாதிகளாக, இருந்தால் இணக்கப்பாட்டு அரசியல் செய்வதற்கு முன்வர வேண்டும் என சல்மான் வஹாப் கேட்டுக் கொண்டார்.




# ஊவா மாகாணத்தில் தொடரும் சீரற்ற காலநிலை நீர்நிலைகளில் இறங்கவோ நீராடவோ வேண்டாம்





**- பொலிஸார் எச்சரிக்கை**

(ஊவா சுழற்சி நிருபர்)

மலையகத்தில் பெய்து வரும் கடும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு வருவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். குறிப்பாக ஊவா மாகாணத்திலுள்ள குளங்கள், ஏரிகள், நீரேந்து பகுதிகள்,நீர்வீழ்ச்சிகள் போன்றவற்றில் நீர் நிரம்பி வழிகின்றன. அப்பிரதேசத்திலுள்ள பொது மக்களை அவதானமாகவும் எச்சரிக்கையாகவும் இருக்குமாறு வானிலை அவதான நிலையம் மற்றும் இடர் முகாமைத்துவ மத்தியநிலையம் பணிப்புரை வழங்கியுள்ளது. நூறு மி.மீற்றருக்கு மேற்பட்ட கன மழை பெய்யுமிடத்து பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அறிவித்தல் வழங்கியுள்ளனர். இது இவ்வாறிருக்க தொடரும் இடியுடன் கூடிய கன மழையினால் பண்டாரவளை ஹம்பராவ பகுதியில் வீடொன்றில் கருங்கல் சுவர் ஒன்று சரிந்து விழுந்ததில் மூவர் பலத்த காயங்களுக்குள்ளாகி தியத்தலாவை தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். எல்லை பிரதேசத்தில் இடி மின்னல் தாக்கத்தின் காரணமாக அங்குள்ள பல குடியிருப்புகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டதோடு வீட்டு உபகரணங்களும் சேதமடைந்துள்ளதாக எல்ல பொலிஸார் மேலும் தெரிவித்தனர். பசறை பிரதேச செயலகத்துக்குட்பட்ட நமுனுகுவ கணவரல்ல தோட்டத்தில் மண்சரிவு ஏற்பட்டதில் நான்கு குடும்பங்களைச் சேர்ந்த சுமார் நாற்பது பேர் அருகிலுள்ள சனசமுக நிலையத்கில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஊவா மாகாணத்திலுள்ள இராவண எல்ல,தியலும,துல்ஹிந்த மற்றும் பம்பரகந்த போன்ற நீர்வீழ்ச்சி நிலைகளின் நீர் மட்டம் அதிகரித்து நீர் பெருக்கெடுத்து ஓடுவதால் அவற்றை கண்டுகளிக்கச் செல்வோர் அவற்றில் இறங்கவோ நீராடவோ வேண்டாம் என பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொலிஸ் உத்தியோகத்தர்களின் வருடாந்த பரிசோதனை



பொலிஸ் உத்தியோகத்தர்களின் கடமை, ஒழுக்க விதிகள் மற்றும் பொலிஸ் நிலைய குறைப்பாடுகள் தொடர்பில் நுவரெலிய இராகலை பொலிஸ் நிலையத்தில் வருடாந்த பரிசோதனையொன்று நேற்று முன்தினம் (03) காலை இடம்பெற்றது.

நுவரெலியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி புத்தி யூ உடுகமசூரிய வருகை தந்து பரிசோதணையை மேற்கொண்டார்.

இதற்கான ஏற்பாடுகளை இராகலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.செல்வகுமார் மேற்கொண்டிருந்தார்.

இதன்போது பொலிஸ் உத்தியோகஸ்தர்களின் அணி வகுப்பு இடம்பெற்ற பின்னர் பொலிஸ் நிலையத்தின் சகல பிரிவுகளுக்கும் விஜயத்தை மேற்கொண்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பொலிஸ் நிலையத்தின் ஒழுக்க விதிகளையும், குறைப்பாடுகளையும் பரிசோதித்ததுடன்,பொலிஸாருக்கு விசேட வகுப்பையும் நடத்தினார்.

**ஆ.ரமேஸ்**

# பொகவந்தலாவை டியன்சின் தமிழ் மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா

நோட்டன் பிரிட்ஜ் நிருபர்

ஹற்றன் கல்வி வலயத்துக்குட்பட்ட பொகவந்தலாவை டியன்சின் தமிழ் மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா அதிபர் பொன்.பிரபாகரன் தலைமையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஹற்றன் கல்வி வலய அபிவிருத்திக்கு பொறுப்பான பணிப்பாளர் வீ. லக் ஷ்மி பிரபா, ஹற்றன் வலயக் கல்விப்பணிமனையின் உதவிக்கல்விப் பணிப்பாளர் சுமதி, கோட்டம் இரண்டிற்கு பொறுப்பான கோட்டக் கல்விப்பணிப்பாளர் செந்துரவேல், கிராம உத்தியோகத்தர் ரமேஸ் கண்ணா, அயல் பாடசாலை அதிபர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



இதன்போது, பிரதம அதிதிகள் பேண்ட் வாத்தியக் கருவிகளோடு பிரதான மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டதோடு ஹற்றன் வலயக் கல்விப் பணிமனையின் உதவி கல்விப்பணிப்பாளர்கள், மற்றும் கோட்டக் கல்விப் பணிப்பாளர் மற்றும் டியன்சின் தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆசிரியர் சேவையில் 30 வருடகால சேவையை கொண்ட ஆசிரியர்களான கதிர்காமன், லோரன்ஸ், ஞானமலர், ஆகியோர் பொன்னாடை போர்த்தி நினைவு பரிசில்கள் வழங்கி வைத்து பாடசாலை நிர்வாகத்தினரினால் கௌரவிக்கப்பட்டனர் .

இதேவேளை, பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றதோடு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள், 2021 ஆம் ஆண்டு உயர் தரத்தில் சித்தி எய்தி பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தலவாக்கலை பஸ் நிலையத்தில் குளவிக் கூடுகளால் ஆபத்து

**பயணிகள் அச்சம்**





தலவாக்கலை குறூப் நிருபர்

தலவாக்கலை பஸ் நிலைய கட்டடத்தில் குளவிக் கூடுகள் கட்டப்பட்டுள்ளதால் பயணிகளும் பிரதேசமக்களும் பெரும் அச்சமடைந்துள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

பஸ் நிலைய கட்டடத்தில் பல இடங்களில் பெரிய பெரிய குளவிக் கூடுகள் கட்டப்பட்டுள்ளன. குளவிக்கூடுகளை சுற்றி காகங்கள் மற்றும் புறாக்கள் சுற்றித்திரிவதால் அந்த பறவைகள் குளவிக் கூடுகளை கிளறி விபத்து ஏற்படுத்தும் வாய்ப்புகள் அதிகமாக காணப்படுவதாக பிரதேசமக்கள் தெரிவிக்கின்றனர். பஸ் நிலையத்துக்கு அண்மையில் காணப்படும் கடைகளுக்கு பாடசாலை மாணவர்கள் உட்பட ஏராளமானோர் தொடர்ந்து வந்து போவதால் குளவிக் கூடுகள் கலைந்தால் அதிகமானோர் பாதிக்கப்படுவார்கள். இதனால் இங்கு பாதுகாப்பற்ற நிலையேற்பட்டுள்ளது.எனவே மக்களின் பாதுகாப்பை கருத்திற் கொண்டு குளவிக்கூடுகளை விரைவில் அகற்றுவதற்கு சம்பந்தப்பட்ட திணைக்களங்களும் அதிகாரிகளும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென தலவாக்கலை பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## பலாங்கொடையில் நவீன தொலைத் தொடர்பு கோபுரம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

பலாங்கொடை மற்றும் சுற்றுப்பிரதேசங்களில் இணைய வழியில் கல்வி கற்க தொழிநுட்ப வசதியற்ற மாணவர்களின் நலன்கருதி தொலைத் தொடர்பு கோபுரம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

தொலை தொடர்புகள் கட்டுப்பாட்டு நிறுவனத்தின் உதவியுடன் மொபிடெல் தொலைத் தொடர்பு நிறுவனம் இதனை அமைத்துள்ளது.

இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அகில சாலிய எல்லாவளவின் வேண்டுகோளுக்கிணங்க இப்பகுதியில் இணைய வழியில் கல்வி கற்க வசதியற்ற மாணவர்களின் நலன் கருதி இவ்வசதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஊருக்கு தொலைத் தொடர்பு திட்டத்தின் கீழ் இலங்கையில் வழங்கப்பட்ட முதலாவது தொலைதொடர்பு கோபுர வசதி இதுவாகும்.

## கண்டி மோபிறே பெண்கள் கல்லூரியின் 100ஆவது ஆண்டு நிறைவு விழா

கண்டி மோபிறே பெண்கள் கல்லூரியின் 100ஆவது ஆண்டு நிறைவையொட்டி முத்திரை வெளியீடும், நடைபவனியும் இன்று இடம்பெறவுள்ளது.

இதன்போது காலை 9 மணியளவில் பாடசாலை பிரதான மண்டபத்தில் முத்திரை வெளியீடு இடம்பெறவுள்ளதுடன் நடைபவனி காலை 11.00 மணியளவில் பாடசாலையிலிருந்து ஆரம்பமாகவுள்ளது.

இந்நிகழ்வுகளில் பழைய மாணவர்கள், பாடசாலை நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேலதிக தகவல்களுக்கு http://www.ogamowbray.com/ என்ற இணைத்தளத்தில் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளமுடியும்.

# நான் இணக்க அரசியல் செய்வதற்கு விரோதமானவன் அல்ல

**- இராதாகிருஸ்ணன் எம்.பி**



நுவரெலியா தினகரன் நிருபர்

நாம் மலையக மக்கள் முன்னணி என்ற தனித்துவத்துடன் தமிழ் முற்போக்கு கூட்டணியில் இணைந்து பயணிக்க தீர்மானித்திருக்கின்றோம் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

மலையக மக்கள் முன்னணியின் நிர்வாக குழு கூட்டம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஹற்றன் கிருஸ்ண பவான் மண்டபத்தில் நடைபெற்றுது. இதன்போது பல்வேறு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

அதில் கடந்த வாரம் இடம்பெற்ற தமிழ் முற்போக்கு கூட்டணி தலைமை காரியாலய திறப்பு விழாவில் ஏற்பட்ட ஒரு சில விடயங்கள்; தொடர்பாக இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டன. இதனை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து அவர் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில்,

தமிழ் முற்போக்கு கூட்டணி தலைமை காரியாலய திறப்பு விழாவின் பொழுது நான் இடைநடுவில் வெளியேறியமை தொடர்பாக பல்வேறு கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.அதனை தெளிவுப்படுத்த வேண்டிய தேவை எனக்கு இருக்கின்றது.

அன்று நடைபெற்ற சம்பவம் என்பது மிகவும் தவறான ஒரு விடயம் என்பதை நான் மிகவும் தெளிவாக சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

யார் அழைத்து யார் வந்தார்கள் என்பது தொடர்பில் பல கருத்து முரண்பாடுகள் இருக்கலாம். ஆனால் ஒரு கூட்டணி என்ற குடும்பத்தில் முடிவுகள் எடுக்கப்படுகின்ற பொழுது அனைவரும் இணைந்து கலந்துரையாடி தீர்மானங்கள் எடுப்பதே கூட்டணி தர்மமாகும்.எனவே இதனை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

நான் அரசியலுக்கு வருகை தந்துள்ள காலம் முதல் இணக்க அரசியலை முன்னெடுக்க வேண்டும் என்பதில் மிகவும் அக்கறையாக செயற்பட்டவன்.அதனை நான் பல சந்தரப்பங்களில் செயல்கள் மூலம் நிரூபித்திருக்கின்றேன். ஏனையவர்களை விமர்சிப்பதை நான் என்றுமே விரும்பாதவன்.

அன்றும் இன்றும் என்றும் நான் அரசியல் பயின்ற பாசறையான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மீதும் அதன் மறைந்த தலைவர்களான அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமான் ,ஆறுமுகன்; தொண்டமான ஆகிய இருவரையும் என்றுமே விமர்சனம் செய்ததோ அல்லது அவர்களின் தனிப்பட்ட விடயங்களை விமர்சிப்பதையோ தவிர்த்து வந்துள்ளேன்.

எனவே இணக்க அரசியல் செய்வதற்கு என்றுமே விரோதமானவன் அல்ல.

ஆனால் அதனை செய்கின்ற பொழுது அனைத்து தரப்பினரையும் கலந்துரையாடி செய்ய முடியுமாக விருந்தால் இன்னும் சிறப்பானதாக அமையும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# கண்டி நகரில் திறந்த வெளியில் சிறுவர் சித்திரப் போட்டி



ஜனநாயகத்துக்கான சிவில் அமைப்புக்களின் ஒன்றியம், கண்டி நகரில் திறந்த வெளியில் சிறுவர் சித்திரப் போட்டியொன்றை அண்மையில் ஏற்பாடு செய்திருந்தது.

கண்டி வாவிக் கரையில் இந்நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றன.

இதன் ஏற்பாட்டாளரான முன்னாள் விவசாயத்திணைக்கள மேலதிக பணிப்பாளரும் சட்டத்தரணியுமான கலாநிதி ஹேரத் எம் ஆரியரத்ன தெரிவிக்கையில்,

அண்மைக்காலமாக சிறுவர்களுக்கு மத்தியில் ஒருவகையான மன உளைச்சல் ஏற்பட்டுள்ளது. அதனை மன விரக்தியாக மாறவிடாது பாதுகாக்க வேண்டும். எனவே சிறுவர்களது மனதிற்கு ஒரு அக மகிழ்வையும், பொழுது போக்கையும் ஏற்படுத்தும் முகமாக இதனை ஏற்பாடு செய்தோம். அவர்களது மனநிலையை சமப்படுத்தும் பல்வேறு நிகழ்வுகளை எமது அமைப்பு செய்து வருகின்றது.

அதன் ஒரு கட்டமாகவே கண்டி வாவிக்கரையில் அழகியல் உணர்வை ஏற்படுத்தும் விதமாக சித்திரப்போட்டியொன்றை ஏற்பாடு செய்துள்ளோம். இதில் நூற்றுக்கணக்கான சிறுவர்கள் கலந்து கொண்டனர்.

இதற்கான அனுசரணையை பிளட்டினம் தனியார் நிறுவனம் வழங்கியிருந்தது.

# போதைப்பொருட்களுடன் ஒருவர் கைது

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

போதைப்பொருட்களுடன் சந்தேக நபரொருவர் நேற்று (4) அங்குணுகொல பெலஸ்ஸ முலன கொட பிரதேசத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்படும் போது 3 கிலோ ஹெரோயின் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இப்பிரதேசத்துக்கு போதைப்பொருளை விநியோகிக்கும் முக்கிய புள்ளிகளில் ஒருவராக இவர் கருதப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.





கண்டி இந்து சிரேஷ்ட பாடசாலையின் இரண்டாம் மாடிக் கட்டடம் கண்டி தமிழ் வர்த்தக சங்கம் இந்து இளைஞர் மன்றம் என்பவற்றின் பங்களிப்புடன் சுமார் ஒன்றரை கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இதன்ஆரம்பநிகழ்வு கண்டி அரசாங்க அதிபர் சந்தன தென்னகோன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது இடம்பெற்ற நிகழ்வுகளை படங்களில் காணலாம். (படங்கள்: நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்)

# போலி நாணயத்தாளுடன் இராணுவ சிப்பாய் கைது

பதுளை தினகரன் விசேட நிருபர்

போலி நாணயத்தாளுடன் இராணுவ சிப்பாயொருவர் தியத்தலாவை பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார். இவரிடமிருந்து 5000 ரூபா போலி நாணயத்தாள் மீட்கப்பட்டுள்ளது.

தியத்தலாவை நகரின் மதுபான விற்பனை நிலையத்தில் இராணுவ சிப்பாய், போலி 5000 ரூபா நாணயத்தாளினை கொடுத்து மதுபானமொன்றினை கொள்வனவு செய்ய முயன்றுள்ளார். இதன்போதே மதுபான விற்பனை நிலைய முகாமையாளர், இராணுவ சிப்பாய் வழங்கிய ஐயாயிரம் ரூபா நாணயத்தாள் மீது சந்தேகம் கொண்டு அது குறித்து தியத்தலாவைப் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து பொலிஸார் அங்கு விரைந்து சென்று 5000 ரூபா நாணயத்தாளை பரிசீலித்த போது அது போலியானது என தெரிய வந்துள்ளது. அதன் பின்னர் இராணுவ சிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

அவ்விசாரணையின் போது இராணுவ சிப்பாய் இராணுவ பயிற்சிப்பாடசாலை கணினித் தொகுதியின் மூலம் இரு ஐயாயிரம் ரூபா நாணயத்தாள்களை பெற்றதாகவும் அந்நோட்டுக்களில் ஒன்றை பயன்படுத்தி மதுபானத்தினைப் பெற முயற்சித்ததாகவும் தெரிவித்துள்ளார்.

ஆப்கான், அயர்லாந்தின் தோல்வியால்

# உலகக் கிண்ணத்தில் இருந்து வெளியேறியது இலங்கை அணி

டி20 உலகக் கிண்ணத்தில் சுப்பர் 12 குழு 1க்காக நேற்று நடைபெற்ற போட்டிகளில் ஆப்கானிஸ்தான் மற்றும் அயர்லாந்து அணிகள் தோல்வி அடைந்ததை அடுத்து இலங்கை அணி அரையிறுதிக்கு தகுதி பெறும் வாய்ப்பை இழந்தது.

இதில் அடிலெயிட்டில் நேற்று இரண்டாவது போட்டியாக நடைபெற்ற அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் ஆப்கானிஸ்தான் அணி கடைசி ஓவர் வரை போராடிய நிலையில் 4 ஓட்டங்களால் தோல்வியை சந்தித்தது.

169 ஓட்ட வெற்றி இலக்கை நோக்கி பதிலெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி 13 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 99 ஓட்டங்களை பெற்று வலுவான நிலையில் இருந்தபோதும் நான்கு பந்துகளில் மூன்று விக்கெட்டுகளை பறிகொடுத்ததால் ஆட்டம் திசைதிரும்பியது.

கிளென் மெக்ஸ்வெல் செய்த ரன் அவுட் மற்றும் அடம் சம்பா இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்த ஆஸி. அணி பக்கம் ஆட்டம் திரும்பியது.

எங்கள் சிங்கங்களை வாழ்த்திட
நீங்களும் இணைந்துக்கொள்ளுங்கள்
QR குறியீட்டை Scan செய்து உங்கள் வாழ்த்துகளை பதிவு செய்யுங்கள்
Dialog

கடைசி நேரத்தில் ரஷீத் கான் 23 பந்துகளில் 48 ஓட்டங்களை விளாச கடைசி ஓவருக்கு 22 ஓட்டங்களை எடுக்க வேண்டி ஏற்பட்டது. இதன்போது ரஷித் கான் ஒரு சிக்ஸர் மற்றும் இரு பௌண்டரிகளை விளாசிய போதும் வெற்றி இலக்கை எட்ட முடியாமல் போனது.

முன்னதாக முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸி. அணியின் விக்கெட்டுகள் தொடர்ச்சியான இடைவெளியில் வீழ்ந்தபோதும் அதனால் ஓட்டங்களை அதிகரிக்க முடிந்தது. கிளென் மெக்ஸ்வெல் 32 பந்துகளில் ஆட்டமிழக்காது 54 ஓட்டங்களை விளாசினார்.

இதன்மூலம் அவுஸ்திரேலிய அணி 20 ஓவர்களுக்கும் 8 விக்கெட்டுகளை இழந்து 168 ஓட்டங்களை பெற்றது. நவீட் உல் ஹக் 3 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

ஆப்கானின் இந்த வெற்றியுடன் அரையிறுதிக்கு நுழையும் இலங்கை அணியின் கடைசி எதிர்பார்ப்பு பறிபோனது. இலங்கை அணி தற்போது நான்கு புள்ளிகளுடன் நான்காவது இடத்தில் உள்ளது.

இந்நிலையில் இலங்கை அணி இன்று இங்கிலாந்து அணியை எதிர்கொள்ளவிருப்பதோடு அதில் வெற்றி பெற்றாலும் முதல் இரண்டு இடங்களுக்குள் முன்னேற முடியாது.

எனினும் நேற்றைய போட்டியில் அவுஸ்திரேலிய அணி தனது நிகர ஓட்ட விகிதத்தை அதிகரிக்கத் தவறியதால் அதிக நிகர ஓட்ட விகிதத்துடன் முதலிடத்தில் இருக்கும் நியூசிலாந்து அணி அரையிறுதி வாய்ப்பு உறுதி செய்துள்ளது.

இந்நிலையில் அவுஸ்திரேலிய அணி அரையிறுதிக்கு தகுதி பெறுவது இலங்கையின் கைகளிலேயே உள்ளது. இலங்கை அணி இங்கிலாந்து அணியை இன்றைய போட்டியில் வீழ்த்தினால் அவுஸ்திரேலியாவுக்கு அரையிறுதிக்கு முன்னேற முடியும்.



மறுபுறம் அவுஸ்திரேலியாவை விடவும் அதிக நிகர ஓட்டங்களுடன் இருக்கும் இங்கிலாந்து அணி அரையிறுதிக்கு முன்னேறுவதற்கு இன்றைய போட்டியில் இலங்கை அணியை வீழ்த்தினால் போதுமானது.

இலங்கை மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான சுப்பர் 12 சுற்றின் குழு 1க்கான கடைசிப் போட்டி இன்று பிற்பகல் 1.30க்கு சிட்னியில் நடைபெறவுள்ளது.

இதேவேளை டி20 உலகக் கிண்ணப் போட்டியின் சுப்பர் 12 சுற்றுப் போட்டிகள் நாளையுடன் நிறைவடையவுள்ளது.

இதுவரை நியூசிலாந்து அணி மாத்திரம் அரையிறுதியை உறுதி செய்திருக்கும் நிலையில் குழு ஒன்றில் இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலிய அணிகளும் குழு 2இல் இந்தியா மற்றும் தென்னாபிரிக்காவுடன் பாகிஸ்தான், பங்களாதேஷ் அணிகளும் போட்டியில் உள்ளன.

அயர்லாந்தை வீழ்த்தி

## உலகக் கிண்ண அரையிறுதியை நெருங்கியது நியூசிலாந்து அணி

அயர்லாந்துக்கு எதிரான டி20 உலகக் கிண்ண சுப்பர் 12 போட்டியில் 35 ஓட்டங்களால் வெற்றியீட்டிய நியூசிலாந்து அணி அரையிறுதிக்கு முன்னேறும் வாய்ப்பை நெருங்கியுள்ளது.



அடிலெயிட்டில் நேற்று (04) நடைபெற்ற போட்டியில் 186 ஓட்ட வெற்றி இலக்கை நோக்கி பதிலெடுத்தாடிய அயர்லாந்து அணியை 9 விக்கெட்டுகளை இழந்து 150 ஓட்டங்களுக்கு மட்டுப்படுத்த நியூசிலாந்தினால் முடிந்தது.

முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட நியூசிலாந்து அணிக்காக அணித் தலைவர் அதிகபட்சம் 35 பந்துகளில் 61 ஓட்டங்களை விளாசினார். இதன்மூலம் அந்த அணி 20 ஓவர்களுக்கும் 6 விக்கெட்டுகளை இழந்து 185 ஓட்டங்களை பெற்றது.

இதன்போது அயர்லாந்தின் ஜோஷ் லிட்டில் 19ஆவது ஓவரில் ஹட்ரிக் விக்கெட்டுகளை வீழ்த்தியமை குறிப்பிடத்தக்கது. இம்முறை உலகக் கிண்ணத்தில் மொத்த 11 விக்கெட்டுகளுடன் தொடரை முடித்துக் கொண்டிருக்கும் லிட்டில் டி20 சர்வதேச போட்டிகளில் ஹட்ரிக் விக்கெட் வீழ்த்திய இரண்டாவது அயர்லாந்து வீரராக சாதனை படைத்தார்.

இதற்கு முன்னர் கேர்டிஸ் கம்பஸ் கடந்த ஆண்டு டி20 உலகக் கிண்ணத்தின் நெதர்லாந்துக்கு எதிரான போட்டியில் நான்கு பந்துகளில் நான்கு விக்கெட்டுகளை வீழ்த்தியமை குறிப்பிடத்தக்கது. இந்த வெற்றியுடன் நியூசிலாந்து குழு 1 இல் 7 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. எனினும் அந்த அணியின் நிகர ஓட்ட விகிதம் 2.113 ஆக இருக்கும் நிலையில் அந்த அணி கிட்டத்தட்ட அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது என்று குறிப்பிடலாம்.

கட்டார் உலகக் கிண்ணம்:

## கால்பந்தில் மாத்திரம் கவனம் செலுத்த பிஃபா வலியுறுத்து

கட்டாரில் கால்பந்தில் மட்டும் கவனம் செலுத்துமாறு உலகக் கிண்ணக் கால்பந்துப் போட்டியில் பங்குபெறவுள்ள அணிகளை சர்வதேச கால்பந்து சம்மேளனம் (பிஃபா) வலியுறுத்தியுள்ளது.

சித்தாந்தம், அரசியல் ஆகியவற்றோடு விளையாட்டைக் கலக்க வேண்டாம் என்று கூறி கடிதம் ஒன்றை பிஃபா அணிகளுக்கு அனுப்பியுள்ளது. இம்முறை உலகக் கிண்ணப் போட்டிகளில் 32 அணிகள் பங்குபெறவுள்ளன.

அவற்றில் சில கட்டாரில் வெளிநாட்டு ஊழியர்கள் நடத்தப்படும் விதம், ஓரினச் சேர்க்கையாளர் உரிமைகள் ஆகியவை குறித்து குறை கூறியுள்ளன.

உலகெங்கும் அரசியல் தொடர்பான பல சவால்களும் சிக்கல்களும் உள்ளன என்று பிஃபா தலைவர் ஜியானி இன்பான்டினோவும் செயலாளரான பட்மா சமூராவும் கூறினர்.

இருக்கும் அனைத்துப் பிரச்சினைகளிலும் கால்பந்தை இழுக்க வேண்டாம் என்று அவர்கள் கேட்டுக்கொண்டனர்.



கட்டாரில் உலகக் கிண்ணப் போட்டிகள் வரும் நவம்பர் 20ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

அதன் மனித உரிமை மீறல்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் டென்மார்க்கின் வீரர்கள் தங்களின் குடும்பங்களை அழைத்து வரப்போவதில்லை என்று குறிப்பிட்டுள்ளனர்.

பிரான்ஸ் நடப்புச் சம்பியனாக இருந்தபோதும் பாரிஸ் மற்றும் ஏனைய நகரங்கள் போட்டிகளை திரையில் காண்பிப்பதற்கு மறுத்துள்ளன. ஒருபாலுறவு பற்றிய சட்டங்களை அகற்றும்படி அவுஸ்திரேலிய குழாம் வெளியிட்ட அறிக்கையில் கட்டாரை கேட்டுக்கொண்டுள்ளது.

உலகக் கிண்ணத்தின்போது இங்கிலாந்து அணித் தலைவர் ஹரி கேன் மற்றும் ஏனைய ஒன்பது ஐரோப்பிய அணிகளினதும் தலைவர்கள் பன்முகத்தன்மை மற்றும் பாகுபாட்டுக்கு எதிராக முத்திரைகளை அணியவிருப்பதாக குறிப்பிட்டுள்ளனர்.

## கல்முனை உவெஸ்லி ஆசிரியர் அணி வெற்றி

மாளிகைக்காடு குறூப் நிருபர்



கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை மற்றும் கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி ஆகிய இரு பாடசாலையின் ஆசிரியர் அணிகளுக்கிடையே அண்மையில் நடைபெற்ற சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டியின், இரு போட்டிகளிலும் கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை ஆசிரியர் அணியினர் அபார வெற்றியினை பெற்றுக்கொண்டனர்.

முதல் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கார்மேல் பற்றிமா கல்லூரி அணியினர் 35 ஓட்டங்களை பெற்றனர். 36 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய உவெஸ்லி உயர்தர பாடசாலை அணியினர் 5ஆவது ஓவரில் இலகுவாக வெற்றி இலக்கை அடைந்தனர்.

இரண்டாவது போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய உவெஸ்லி உயர்தர பாடசாலை அணியினர் 50 ஓட்டங்களை வெற்றி இலக்காக பெற்றனர். என்றாலும் கார்மேல் பற்றிமா கல்லூரி அணியினர் ஓவர் முடிவில் 36 ஓட்டங்களை மாத்திரம் பெற்றதனால் 14 ஓட்டங்களினால் உவெஸ்லி உயர்தர பாடசாலை ஆசிரியர் அணியினர் அபார வெற்றியினை பெற்றுக்கொண்டனர்.

## பல்கலை மகளிர் ரக்பியில் ஜயவர்தனபுர அணி வெற்றி



இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலய அனுசரணையில் கொழும்பு 7, தர்ஸ்டன் மைதானத்தில் நடைபெற்ற பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான மகளிர் மேம்பாட்டு ரக்பி போட்டியில் ஜயவர்தனபுர பல்கலைக்கழக மகளிர் ரக்பி அணி சம்பியனாகவும், கொத்தலாவெல பாதுகாப்பு பல்கலைக்கழக மகளிர் ரக்பி அணி இரண்டாம் இடத்தையும், சப்ரகமுவ பல்கலைக்கழக மகளிர் ரக்பி அணி மூன்றாம் இடத்தையும் வென்றன.

இந்த போட்டியில் மொத்தம் எட்டு பெண்கள் அணிகள் பங்கேற்றன. இதற்கு முன்னர் கண்டி, காலி மற்றும் கொழும்பில் மூன்று போட்டிகள் நடைபெற்றன. மொத்தம் நான்கு ரக்பி போட்டிகளில் இறுதிச் சுற்று கொழும்பு தர்ஸ்டன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போதே இந்த முடிவுகள் கிடைக்கப்பெற்றது. தங்களது திறமையான வீரர்களுக்கு ஆதரவளிப்பதில் சிரமங்களை எதிர்கொண்ட காலங்களில், பாகிஸ்தான் அரசாங்கத்தின் சார்பாக கொழும்பு பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம் மாவட்ட மட்டத்தில் ரக்பி போட்டிகளுக்கு அனுசரணை வழங்கியது. பிராந்தியத்தில் விளையாட்டுகளை ஊக்குவிப்பதன் மூலம் நட்பு நாடுகளின் இளைஞர்களை ஒன்றிணைக்கும் திட்டத்தின் கீழ் இந்த அனுசரணை வழங்கப்பட்டுள்ளது.

## முஸ்லிம் மகா வித்தியாலய வீரர்களுக்கு பாராட்டு விழா



அட்டாளைச்சேனை மத்திய நிருபர்

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளில் வெற்றியீட்டிய அக்கரைப்பற்று முஸ்லிம் மகா வித்தியாலய (தேசிய பாடசாலை) வீரர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் நடாத்திய இந்த விளையாட்டுப் போட்டிகளில், அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்ட பாடசாலை மாணவர்கள் பங்குபற்றி தங்களது திறமைகளை வெளிக்காட்டினர். இவ்விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளில் பங்குபற்றி வெற்றியீட்டி, அக்கரைப்பற்று கல்வி வலயத்திற்கும், தங்களது பாடசாலைகளுக்கும் பெருமை சேர்த்த மாணவர்கள், அவர்களுக்குப் பயிற்சியளித்த உடற்கல்வி ஆசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள் ஆகியோர் அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தினால் அண்மையில் பரிசு வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டதாக உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற் கல்வி) எஸ்.எம். ஜெமீல் தெரிவித்தார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 நவம்பர் மாதம் 5ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.




# SLIM NASCO விருதுகள் 2022 SLIM தேசிய விற்பனை விருதுகள் ஆக மீளமைப்பு




இலங்கையின் சந்தைப்படுத்த லுக்கான தேசிய அமைப்பான, இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம் (Sri Lanka Institute of Marketing SLIM) 2022 SLIM தேசிய விற்பனை விருதுகளை (முன்னர் SLIM NASCO என அழைக்கப்பட்டது) மீண்டும் நடாத்தவுள்ளது. விற்பனைப் பிரதிநிதிகளால் மிகவும் எதிர்பார்க்கப்படும் நிகழ்வான இது, 'SLIM தேசிய விற்பனை விருதுகள்' (SLIM National Sales Awards) என இவ்வருடம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இது விற்பனை தொடர்பான அம்சத்தில் அதிக தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இந்த மதிப்புமிக்க நிகழ்வானது, தொடர்ச்சியாக கடந்த 20 ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருவதோடு, நிறுவனங்களில் அதிக செயற்றிறன் கொண்ட விற்பனையாளர்களுக்கு அவர்களின் சிறந்த முயற்சிகள் மற்றும் விற்பனை தொடர்பான அம்சத்தில் அவர்களது சாதனைகளை கௌரவித்து, அவர்களுக்கு தேசிய அளவில் அங்கீகாரமளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தெற்காசிய பிராந்தியத்தில் விருதுகள் திட்டத்தை சிறந்த மட்டத்தில் நிலைநிறுத்துவது மற்றும் உலகத் தரத்திற்கு இணையான விற்பனை நிபுணர்களுக்கு அங்கீகாரமளிப்பதே, SLIM தேசிய விற்பனை விருதுகளின் தூர நோக்காகும். அத்துடன், வெற்றியாளர்களில் சிறந்தவர்களை உலக அரங்கில் சிறந்த மட்டத்திற்கு உயர்த்துவதற்கான திட்டங்களையும் SLIM கொண்டுள்ளது.

SLIM தேசிய விற்பனை விருதுகளானது, 20 இற்கும் மேற்பட்ட தொழில்துறைகளில் செயற்படுபவர்களுக்கு அங்கீகாரமளித்து வெகுமதிகளை வழங்குகின்றன. இது தனிநபர்கள் தமது நிறுவனங்களின் செயல்திறன் அடிப்படையில் விண்ணப்பிக்க அனுமதிக்கிறது. 2022 SLIM தேசிய விற்பனை விருதுகளானது, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டிற்காக சமர்பிக்கப்படும் விண்ணப்பங்களின் அடிப்படையில் முடிவுகளை அறிவிக்கும் ஒரு சிறந்த வருடமாக அமையவுள்ளது. ஒவ்வொரு பிரிவிற்குமான மதிப்பாய்வு காலமானது, உரிய நிறுவனத்தின் நிதியாண்டின் அடிப்படையில் 2021 டிசம்பர் 31 அல்லது 2022 மார்ச் 31 இல் நிறைவடையும் வருடமாக கணிப்பிடப்படும்.

# 850 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான உரிமை வெளியீட்டினை அறிமுகம் செய்யும் Softlogic Finance PLC

Softlogic Capital PLC இன் துணை நிறுவனமான Softlogic Finance PLC, அதன் போதுமான மூலதன அளவு விகித (CAR) தேவைகளைப் பின்பற்றுவதற்கும், டிஜிட்டல்மயமாக்கல் மற்றும் வணிக விரிவாக்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கும் புதிய மூலதனத்தைத் திரட்டுவதற்காக ரூ. 850 மில்லியனுக்கும் அதிகமான தொகையை திரட்டுவதற்கான உரிமைகள் வெளியீட்டிற்குச் செல்லும் திட்டத்தை மேற்கொண்டுள்ளது. உரிமை வெளியீடு நிறுவனத்தின் பங்குதாரர்கள் வைத்திருக்கும் ஒவ்வொரு நானூற்று இருபத்தி மூன்று (423) சாதாரண பங்குகளுக்கு தலா ரூ.7.31 என்ற விலையில் நூறு (100) புதிய சாதாரண பங்குகளை செயல்படுத்தும்.

அதன்படி நூற்று பதினாறு மில்லியன் நானூற்று எண்பத்து மூவாயிரத்து தொள்ளாயிரத்து ஒன்று (116,483,901) சாதாரண பங்குகளின் உரிமை வெளியீட்டின் மூலம் வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தை அதிகரிக்க நிறுவனம் முன்மொழிவதுடன் ஒரு பங்கிற்கு ரூ. 7.31/ என்ற பெறுமதியில் சாதாரண பங்குகளின் மொத்தத் தொகை எண்ணூற்று ஐம்பத்தொரு மில்லியன் நானூற்று தொண்ணூற்று ஏழாயிரத்து முந்நூற்று பதினாறு (ரூ. 851,497,316/) ரூபா ஆகும்.


Softlogic Finance PLC இன் செயல்திறன் பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரியான திருமதி Ivon Brohier, உரிமை வெளியீடு குறித்து கருத்து தெரிவிக்கையில், "இரண்டு வருடகாலமாக நிலவிய நோய் பரவல் மற்றும் மோசமான நிதி நெருக்கடி காரணமாக நாடு எதிர்நோக்கி வரும் சவால் நிறைந்த சூழ்நிலையில் இருந்து மீண்டு வெளியேறும் நிலையில், Softlogic Finance நிறுவனம் வணிகத்தை விரிவுபடுத்துவதிலும், குறிப்பாக டிஜிட்டல் தொழில்நுட்ப மயமாக்களிலும் இணைந்த நிலையில் உள்ளது. தனது தொழில்துறையில் Softlogic குழுமமானது நாட்டின் அழியாத முத்திரையைப் பதித்து, தனித்துவமான மற்றும் எளிதில் அணுகக்கூடிய மதிப்பைத் தொடர்ந்து வழங்குவதன் மூலம், எமது வாடிக்கையாளர்களின் முன்மொழிவுகளுக்குஅமையஎங்கள்பங்குதாரர்களுக்கு சிறந்த வருவாயை உறுதி செய்வதற்கு தேவையான வழிமுறைகளை பின்பற்றுகிறோம்." என்றார்.

# மூன்றாம் காலாண்டில் யூனியன் வங்கியின் செயற்பாடுகள் முன்னேற்றம்

சர்வதேச நாணய நிதியத்துடன் ஊழியர் மட்ட உடன்பாடு எட்டப்பட்டிருந்த போதிலும், நடப்பு ஆண்டின் மூன்றாம் காலாண்டு பகுதியில் தொடர்ந்தும் நெருக்கடியான சூழ்நிலை காணப்பட்டதுடன், வங்கியியல் துறையிலும் மந்தமான நிலையை அவதானிக்க முடிந்தது.

இவ்வாறான சூழ்நிலையிலும், வங்கி தொடர்ந்தும் உறுதியான வங்கியியல் நிதிப் பெறுபேறுகளைப் பதிவு செய்திருந்ததுடன், வியாபார வாய்ப்புகளை தெரிவு அடிப்படையில் மேற்கொண்டிருந்ததுடன், இடர்நிலைகளை சீராக கையாண்டிருந்ததுடன், இலாகா மற்றும் வசூலிப்புகளை மேற்கொண்டிருந்தது. சவால்கள் நிறைந்த சூழ்நிலையிலிருந்து மீள்வதற்கு வியாபாரங்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு ஆதரவளித்திருந்தது.

சவால்கள் நிறைந்த தொழிற்பாட்டு சூழலிலும், வங்கி மீட்சியுடன் திகழ்ந்ததுடன், மூன்றாம் காலாண்டில் வங்கி ரூ. 5,343 மில்லியனை ஒட்டு மொத்த வருமானமாக பதிவு செய்திருந்தது. இது ஒப்பீட்டளவில் 109% அதிகரிப்பாகும். 2022 செப்டெம்பர் 30 ஆம் திகதியுடன் நிறைவடைந்த 9 மாத காலப்பகுதியில், வங்கியின் ஒட்டு மொத்த வருமானம் 55% இனால் அதிகரித்து ரூ. 12,769 மில்லியனாக பதிவாகியிருந்தது. கடன் பிரிவு மற்றும் திறைசேரி சொத்துகளை மீள்விலையிட்டிருந்ததன் மூலம் பெறப்பட்ட வருமதிகளினூடாக தேறிய வட்டி வருமானம் (NII) 58% இனால் அதிகரித்திருந்தது. வட்டி செலவீனங்களை முறையாக நிர்வகித்திருந்தமையினூடாக, தேறிய வட்டி எல்லைப் பெறுமதி (NIM) 83 bps இனால் அதிகரித்திருந்தது.




உள்நாட்டு மற்றும் சர்வதேச நிதிப் பரிமாற்றங்கள், ATM கொடுக்கல் வாங்கல்கள், கடன் மற்றும் பற்று அட்டைகள், பண அனுப்புகைகள் மற்றும் வர்த்தக வியாபாரச் செயற்பாடுகளில் அதிகரிப்பு போன்றவற்றினால் தேறிய தரகு மற்றும் கூலி வருமானம் 53% அதிகரிப்பைப் பதிவு செய்திருந்தது. அந்நியச் செலாவணி வருமானத்தினால் ஏனைய தொழிற்பாட்டு வருமானமும் 23% இனால் அதிகரித்திருந்தது.

மூன்றாம் காலாண்டில், மதிப்பிறக்கங்களுக்கு முன்னரான தொழிற்பாட்டு வருமானம் ரூ. 1977 மில்லியனாக பதிவாகியிருந்தது. இது 45% அதிகரிப்பாகும்.

வங்கியின் மொத்த சொத்துகளின் பெறுமதி 2022 செப்டெம்பர் 30 ஆம் திகதியன்று ரூ. 136,715 மில்லியனாக காணப்பட்டது. இது 15% அதிகரிப்பாகும். கடன்கள் மற்றும் முற்பணங்கள் பிரிவு 11% இனால் அதிகரித்து ரூ. 75,148 மில்லியனாக பதிவாகியிருந்தது. வாடிக்கையாளர் வைப்புகள் 13% இனால் அதிகரித்து ரூ. 93,876 மில்லியனாக காணப்பட்டது. சகல பிரிவுகளிலிருந்தும் CASA மற்றும் தவணை வைப்புகளை பெற்றுக் கொள்வதில் கவனம் செலுத்தியிருந்தமை இவற்றில் பங்களிப்பைச் செலுத்தியிருந்தது. 2022 செப்டெம்பர் 30 ஆம் திகதியன்று CASA விகிதம் 23.7% ஆக காணப்பட்டது. வங்கியின் நிலை 3 கடன் விகிதம் 7.29% ஆக காணப்பட்டது.

# கொமர்ஷல் வங்கி அறிமுகப்படுத்தும் நடுநிலை முகாமைத்துவ மேம்பாட்டுத் திட்டங்கள்



கொமர்ஷல் வங்கி நடுநிலை முகாமைத்துவ மேம்பாட்டு திட்டங்களை அண்மையில் அறிமுகப்படுத்தியது. இந்தப் பிரிவில் உள்ள ஊழியர்களின் ஆற்றல் மற்றும் திறன்களை மேம்படுத்துவதற்கும் அவர்களது தொழில்சார் வளர்ச்சியினையும் இலக்கையும் அடையவும் உதவிடும் வகையில் இத்திட்டம் வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்டது.

இலங்கையில் உள்ள புகழ்பெற்ற தொழில்சார் மற்றும் தொழில் அபிவிருத்தி நிறுவனங்களால் வழங்கப்படும் இரண்டு இணையான நடுநிலை முகாமைத்துவ அபிவிருத்தித் திட்டங்களில், வங்கியின் சில தெரிவு செய்யப்பட்ட நிறைவேற்று அதிகாரிகளை வங்கி இணைத்துள்ளது. இதில் வெளிநாட்டு வங்கிப்பிரிவில் சேவையாற்றும் நிறைவேற்று அதிகாரிகளும் உள்ளடங்குவர்.



ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்துடன் இணைந்த முதுகலைப் பட்டதாரி மேலாண்மை நிறுவனம் மற்றும் திறமை, தலைமைத்துவம் மற்றும் நிர்வாகத் திறன்களை வளர்ப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்ட வெளிவாரி ஆலோசகர், நிபுணர்களின் குழுவினால் இந்த நடுநிலை மேலாண்மை மேம்பாட்டு நிகழ்ச்சி ஆன்லைன் ஊடாக நடத்தப்படும். கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் பிரதம செயற்பாட்டு அதிகாரி சனத் மனதுங்க நிகழ்ச்சியின் தொடக்கத்தில் பார்வையாளர்களிடம் உரையாற்றுவதையும் (கீழே) வங்கியின் கூட்டாண்மை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ பிரதிநிதிகள் வங்கியின் நடுநிலை முகாமைத்துவத்தின் சில உறுப்பினர்களும் இருக்கின்றனர்.

# சூரிய மின்வலுப் பிறப்பாக்கலினூடாக புதுப்பிக்கத்தக்க வலுப் பயன்பாட்டை ஆரம்பிக்கும் ஹேமாஸ்




தொடர்ச்சியான நிலைபேறான வியாபார செயற்பாடுகளை முன்னெடுப்பதை உறுதி செய்யும் வகையில் ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சியினால், புதுப்பிக்கத்தக்க வலுவை பயன்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குழுமத்தின் 2030 ஆம் ஆண்டை நோக்கிய சூழல் நிகழ்ச்சி நிரலின் அங்கமாக இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குழுமத்தின் பெருமளவான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் பகுதிகளில் ஹேலீஸ் சோலரின் புதுப்பிக்கத்தக்க வலு உற்பத்திப் பிரிவான ஃபென்டன்ஸ் லிமிடெட்டினால், ஹேமாஸ் நிறுவனத்தின் தொழிற்சாலைப் பகுதிகளின் கூரைகளின் மீது சூரியப் படல்களைப் நிறுவும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தப் பணிகள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர், தேசிய மின் வழங்கல் கட்டமைப்பிலிருந்தான மின்பாவனை 25 சதவீதத்தினால் குறைத்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும். இதனூடாக, சூழலுக்கு ஏற்படும் தாக்கமும் குறைக்கப்படுவது உறுதி செய்யப்படும்.

வளிமண்டலத்தில் காபன் வெளியீட்டை குறைப்பதற்கு மேலதிகமாகவும், ஓசோன் படலம் பாதிப்படைவதை தணிப்பதில் பங்களிப்பு வழங்கும் வகையிலும், மாற்று வலு மூலங்களை பயன்படுத்துவதை ஆரம்பிக்கும் வகையில், ஹேமாஸ் ஹோல்டிங்ஸ், நிலக்கரி தட்டுப்பாடுகளுக்கு முகங்கொடுக்க தன்னைத் தயார்ப்படுத்திய வண்ணமுள்ளது.

ஏனைய கூட்டாண்மை நிறுவனங்களையும் புதுப்பிக்கத்தக்க வலு மூலங்களை பயன்படுத்த ஊக்குவிக்கும் முன்மாதிரியான நிறுவனமாக திகழ்வதற்கு ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் எதிர்பார்ப்பதுடன், அதனூடாக புதிய வியாபார வழமையாக இதனை மாற்றியமைத்து, இலங்கையில் மொத்த சூழல் தாக்கத்தை தணிப்பதற்கு பங்களிப்பு வழங்கக்கூடியதாக இருக்கும்.

# நுகர்வோருக்கு வசதியாக Diva விடமிருந்து புதிய Diriya சலவைத் தூள்




முன்னணி சலவை வர்த்தக நாமமான Diva, இலங்கையின் நுகர்வோரின் இதயங்களோடு எப்போதும் நெருக்கமாக இருந்து வருகிறது. அந்த வகையில் அவர்களின் சலவைத் தேவைகளை கட்டுப்படியான விலை மற்றும் உயர்தர சலவை தெரிவுகள் மூலம் பூர்த்தி செய்கிறது. இவ்வர்த்தகநாமமானது நுகர்வோரின் தேவைகளை தொடர்ச்சியாக அறிந்து வருவதோடு, தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் நுகர்வோர் எதிர்கொள்ளும் சவால்களையும் புரிந்துகொண்டுள்ளது. இலங்கையர்களுக்கு கைகொடுக்கும் வகையிலும் தற்போதைய பொருளாதார சவால்களுக்கு மத்தியில் அவர்களுக்கு ஆதரவளிக்கும் முயற்சியாகவும் ஒரு சிறந்த, தரமான, கட்டுப்படியான விலையுடனான, புதிய சலவைத் தீர்வான, 'Diva Diriya' (தீவா திரிய) சலவைத் தூளை சமீபத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது. தீவாவிடமிருந்தான திரிய சலவைத் தூள் அறிமுகமானது, தீவாவின் வர்த்தக நாம நோக்கமான 'தீவா தேத்தட்ட திரியக்' (தீவா கைகளுக்கு பலம்) என்பதன் கீழ் திட்டமிடப்பட்ட பல்வேறு முயற்சிகளில் ஒன்றாகும்.

புதிய தீவா திரிய சலவைத் தூள் 500 கிராம், 40 கிராம் பொதிகளில் நுகர்வோரின் சலவைத் தேவைகள் மற்றும் அவர்களின் பட்ஜெட்டுக்கு ஏற்றவாறு கட்டுப்படியான விலையில் கிடைக்கிறது. இப்புதிய சலவைத் தூளானது, அழுக்கை அகற்றி, புத்துணர்ச்சியூட்டும் நறுமணத்துடன் ஆடைகள் சுத்தமாக இருப்பதை உறுதி செய்கிறது.

Hemas Manufacturing (Pvt) Ltd நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் பொது முகாமையாளர் டெரிக் அந்தனி இது தொடர்பில் கருத்து வெளியிடுகையில், "நாம் தற்போது கடினமான காலகட்டத்தை எதிர்கொண்டுள்ளோம் என்பதை நாம் அனைவரும் அறிவோம். எனவே, வீட்டு உபயோகப் பொருட்களைத் தேர்ந்தெடுக்கும்போது, கட்டுப்படியான விலை நுகர்வோரிடையே ஒரு முக்கிய காரணியாக உள்ளது. மிகவும் நெருக்கடியான நேரத்தில் எமது நுகர்வோருக்கு ஆதரவளிக்க வேண்டியதன் அவசியத்தை தீவா புரிந்துகொண்டுள்ளது. அதற்கமையவே, புதிய தீவா திரிய சலவைத் தூள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது கொடுக்கும் பணத்திற்கான பெறுமதியுடன் சிறந்த தரத்தையும் கொண்டுள்ளது. நாம் எமது நுகர்வோருக்கு தொடர்ச்சியாக விசுவாசமாக இருப்போம் என்பதுடன், எதிர்வரும் காலத்திலும் அவர்களது சலவைத் தேவைகளை பூர்த்தி செய்வோம்." என்றார்.

# அந்நியச் செலாவணியை அனுப்பும் அன்பார்ந்தவர்களின் குழந்தைகளை கௌரவிக்கும் HNB

இலங்கையின் முன்னணி தனியார் வங்கியான HNB, பல தசாப்தங்களாக இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்த தனது அதிகபட்ச பங்களிப்பை வழங்கி வருவதுடன், இலங்கைக்கு வெளிநாட்டுப் நாணயம் வருவதை அதிகரிப்பதற்காக இலங்கை மத்திய வங்கியால் (CBSL) முறையாக இலங்கைக்கு பணம் அனுப்பும் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் மூலம் வெளிநாட்டிற்கு வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்லும் இலங்கையர்களும் அவர்களது குடும்பங்களுக்கும் இந்த திட்டத்திற்கு தொடர்ந்து ஆதரவளிப்பதனால் அதன் நன்மைகளை அவர்களுக்கும் அவர்களது குழந்தைகளுக்கும் வழங்குவதற்கு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மேலும், "நாட்டை வெல்லும் சிறுவர்கள்" என்ற பெயரில் வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களின் பிள்ளைகளின் திறமைகள் மற்றும் திறன்களை மதிப்பிடுவதற்கு HNB புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.



கல்வி அமைச்சு, சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், SLT மொபிடெல் மற்றும் HNB அஷ்யூரன்ஸ் ஆகியவற்றின் அனுசரணையுடன், HNB "நாட்டை வெல்லும் சிறுவர்கள்" என்ற தொனிப்பொருளின் கீழ் நாடு முழுவதும் பல்வேறு போட்டி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களின் பிள்ளைகள் சித்திரம், நடனம், இசை மற்றும் கட்டுரை எழுதுதல் போன்ற கலைகள் மற்றும் இலக்கியங்களில் அவர்களின் திறமைகளை மதிப்பிடுவார்கள்.

வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களும் அவர்களது பிள்ளைகளும் அந்நிய செலாவணியை ஈட்டுவதில் செய்யும் தியாகங்களைப் பாராட்டுவதே இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். இது தவிர குழந்தைகளின் திறமைகளையும் கண்டறிந்து அவர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்கான பின்னணியை உருவாக்க முடியும். இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்யப்படாத பல இலங்கையர்கள் வெளிநாடுகளில் பணிபுரிகின்றனர். இவ்வாறான வேலைத்திட்டங்களினூடாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்ய அவர்களை ஊக்குவிப்பது அவர்களின் பிள்ளைகளுக்கு சிறந்த நன்மைகளைப் பெறுவதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்குவதற்கான மிக முக்கியமான படியாகும்.

# நகர்வலம்








பாகிஸ்தானின் உயர் ஸ்தானிகர், வர்த்தக மற்றும் முதலீட்டு இணைப்பாளருடன் இலங்கை வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோவை சந்தித்தார். வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் இலங்கை வர்த்தக திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். பாகிஸ்தான் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட முதலாவது நாடு என்ற வகையில் இலங்கைக்கு பல சாதகமான சலுகைகள் உள்ளதாக சுட்டிக்காட்டிய உயர் ஸ்தானிகர், பாகிஸ்தான் இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இரு தரப்பு வர்த்தகத்தை மேலும் மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் இதன்போது கலந்துரையாடப்பட்டது. பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தகம், கூட்டு முயற்சிகள் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை ஊக்குவிப்பதில் உள்ள தடைகளைத் தீர்ப்பதற்கு சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கான தங்கள் உறுதிப்பாட்டை இருதரப்பும் மீண்டும் உறுதிப்படுத்தினர்.



இந்தியாவிலுள்ள இலங்கை சிறப்புத் தூதரகம் சென்னையில் உள்ள இலங்கை துணை உயர் ஸ்தானிகராலயத்தில் அண்மையில் நடமாடும் முகாமொன்றை நடாத்தியது. இதில் திருவாதவூர், மதுரை மாவட்டம், பவானிசாகர், ஈரோடு மாவட்டம், கோபாலசமுத்திரம், திருநெல்வேலி ஆகிய இடங்களில் வசிக்கும் இலங்கையர்களுக்கு 12 பிறப்புச் சான்றிதழ்கள் மற்றும் 111 குடியுரிமைச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

## வாழ்வாதார உதவிப் பொருட்கள் வழங்கி வைப்பு





(திராய்க்கேணி நிருபர்)

பிலிசந்தர வேலைத்திட்டத்தின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப்பின் நிதி ஒதுக்கீட்டில் கொள்வனவு செய்யப்பட்ட வாழ்வாதார உதவிப் பொருட்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் சாபீர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம் முஷாரப் கலந்து கொண்டு சிறப்பித்தார். கௌரவ அதிதிகளாக உதவி பிரதேச செயலாளர் நஹீஜா முஸாபிர், கணக்காளர் ஏ.எல். எம்.றிபாஸ். உதவித்திட்டமிடல் பணிப்பாளர் அப்துல் மஜீட், பிரதேச சபை உறுப்பினர் ஏ.பி.பதுறுதீன், பாராளுமன்ற உறுப்பினரின் அட்டாளைச்சேனை இணைப்பாளர் எஸ்.எம்.அறூஸ், ஒலுவில் இணைப்பாளர் ஏ.ஜே.எம்.அஸ்ஹர் உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

வாழ்வாதார உதவிப் பொருட்கள் கொள்வனவிற்காக பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப்பினால் சுமார் 15 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை போதியளவு இடவசதி இல்லாமல் இருக்கும் அட்டாளைச்சேனை சமூர்த்தி வங்கிக் கட்டிடத்தை அபிவிருத்தி செய்து தருமாறு கோரி எம்.எப்.நவாஸ் தலைமையிலான சமூர்த்தி உத்தியோகத்தர்கள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். எம். முஷாரபிடம் மகஜர் ஒன்றைக் கையளித்ததுடன் அவரை அழைத்துச் சென்று வங்கிக் கட்டிடத்தினையும் அவருக்குக் காண்பித்தனர்.









தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு ஒக்டோபர் மாத இறுதி நாளான கடந்த திங்கட்கிழமை கமு/கமு/ பாண்டிருப்பு மகா வித்தியாலய நூலகத்தில் நூலகக் கண்காட்சி ஒன்று இடம் பெற்றது. பாடசாலை அதிபர் எஸ். புனிதன் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட இக் கண்காட்சியில் பல முக்கியமான இலக்கிய புத்தகங்கள், மொழிப் புத்தகங்கள் மற்றும் பாடப் புத்தகங்களும் காட்சிப்படுத்தப்பட்டன. இதேவேளை வாசிப்பு மேம்படுத்தல் தொடர்பாக மாணவர்களிடையே வினாவிடை போட்டிகள், வாசிப்பு போட்டிகள், பேச்சுப்போட்டிகள் போன்றனவும் நடாத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டன.




சென்னை BOC குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட 'இரத்த தான பிரச்சாரத்தில்' BOC சென்னையின் நாட்டு மேலாளர் திருமதி குமுதினி ஜே.யோகரத்தினத்தின் அழைப்பின் பேரில், துணை உயர் ஆணையர் டாக்டர். டி.வெங்கடேஷ்வரன், கலந்துகொண்டார். இலங்கை வங்கியின் இலங்கையில் 83 வருடங்களின் அற்புதமான பயணம்' மற்றும் 'இந்தியாவில் 27 ஆண்டுகள் புகழ்பெற்ற பிரசன்னம்'.குருநாதரால் சமய சடங்குகளுடன் இரத்த தான பிரச்சாரம் ஆரம்பிக்கப்பட்டது. நுககொல்லே சந்திரரத்ன தேரர், சென்னை மகாபோதி நிலையத்தின் பிரதமகுரு. தென்னிந்தியாவில் உள்ள இலங்கை நட்புறவு சங்கத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், சென்னை லயன்ஸ் கிளப் பிரதிநிதிகள், இலங்கை வங்கி, ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் மற்றும் இலங்கை துணை உயர் ஸ்தானிகராலயத்தின் ஊழியர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## கனடாவில் உதயம் கலாசார அமைப்பின் இன்னிசை நிகழ்ச்சி

கனடாவில் உள்ள உதயம் கலாசார அமைப்பு, நாளை 6ஆம் திகதி மாலை 4 மணிக்கு கனடா ரோயல் கிங் பென்குவட் மண்டபத்தில் "உதயம் கனடா 2022" என்ற பெயரில் இன்னிசை நிகழ்ச்சியொன்றை நடத்தவுள்ளது.

இதில் பிரபல பாடகர்கள் பலரின் பாடல்களும் இடம் பெறவுள்ளது. இங்கு சீட்டிழுப்பு ஒன்றும் நடத்தப்படவுள்ளது. இதில் முதல் பரிசை பெற்றுக் கொள்பவருக்கு விமானச்சீட்டு வழங்கப்படவுள்ளது.

## சென்னை லயோலா கல்லூரியில் இரண்டு நாள் கருத்தரங்கு

எழுத்தாளர் அகிலன் நூற்றாண்டு விழா சென்னை லயோலா கல்லூரியில் இரண்டு நாள் கருத்தரங்காக நடைபெற்று வருகிறது.

இதன் தொடக்கவிழாவில் சாகித்திய அகாதெமியின் பொறுப்பு அலுவலர் சந்திரசேகர ராஜூ அனைவரையும் வரவேற்று, சாகித்திய அகாதெமியின் செயல்பாடுகள் குறித்து விளக்கினார்.

சிறப்புரை ஆற்றிய கல்லூரியின் தாளாளர் போனிபஸ் ஜெயராஜ் சாகித்திய அகாதெமி கொரோனா காலத்திலும் இணைய வழியில் நிகழ்ச்சிகளை நடத்தித் தமிழை வளர்ப்பதில் முக்கிய அமைப்பாக இருந்து வருகிறது. அகிலனின் பன்முகத் திறமையை வெளிப்படுத்தும் கருத்தரங்காக அமையும். தமிழக அரசு 100 இளம் பத்திரிகையாளர்களை லயோலா கல்லூரியில் உருவாக்க பொருளுதவி செய்துள்ளது என்று கூறினார்.


அறிமுக உரை ஆற்றிய பாரதிபாலன், அகிலன் விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொள்ள விரும்பி, பாரதியார் பாடல்கள் தடை செய்யப்படடிருந்த காலத்தில் துணிந்து பாட முயற்சி செய்தார். பள்ளிப் பருவத்தில் 'அவன் ஏழை' என்ற தலைப்பில் ஒரு சிறுவனின் ஏக்க உணர்வைக் குறித்த தன் முதல் கதையை எழுதினார். காந்தி மீது கொண்ட பற்றால் கதர் உடுத்தித் திருமணம் செய்தவர் அகிலன் என்று கூறினார். தொடக்கவுரை நிகழ்த்திய திலகவதி IPS, ஞானபீடம் பெற்று முதல் எழுத்தாளர் அகிலன் என்றும், எழுத்தும் வாழ்க்கையும் என்ற அவர் சுயசரிதை அவரைப் பற்றித் தெளிவாக அறிந்து கொள்ள உதவும் என்றும் கூறினார். தலைமை உரை ஆற்றிய பத்மஸ்ரீ கவிஞர் சிற்பி தான் 1952 இல் வெளிவந்த சிநேகிதி என்ற பின் நவீனத்துவ நாவலைக் குறித்துப் பேசினார். வாழ்வுக்காகத்தான் கலை, அன்பு காட்டுவதே கலைஞனின் நோக்கம் என்பதே அகிலனின் சித்தாந்தம் என்றும் தன் அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார்.

வாழ்த்துரை வழங்கிய அகிலனின் மகன் அகிலன் கண்ணன் தன் தந்தை ICS படிக்க வேண்டும் என்று தன் தாத்தா விரும்பியதாகவும் அது நடைபெறவில்லை என்றும், பல்கலைக்கழகங்களில் நவீன இலக்கியங்களை கொண்டு செல்ல குரல் கொடுத்தவர் தனது தந்தை என்றும் கூறினார். இறுதியாக தமிழ்த் துறைத் தலைவர் அமல்ராஜ் நன்றி கூறினார்.

## நெருக்கடிக்குள்ளாகி இருக்கும் பரிதாப நிதிநிலை இம்ரான் மீதான தாக்குதலால் மேலும் மோசமடையும்

### அவதானிகள் எச்சரிக்கை

நீண்டகால அடிப்படையில் வெளிநாட்டு பணப்புழக்கத்தில் ஈடுபடும் தன்மையை பாகிஸ்தான் இழந்திருப்பதால் அந்நாட்டை 'பீ' தகுதியில் இருந்து தரமிறக்கி சிசிசி 10 தரத்தில் வைத்திருப்பதாக சர்வதேச நிதி தரப்படுத்தல் அமைப்பான ஃபிட்ச் ரேட்டிங் அறிவித்துள்ளது. ஏற்கனவே சர்வதேச நிதி தரப்படுத்தும் அமைப்பான 'மூடி' பாகிஸ்தானை தரமிறக்கியதையடுத்து ஃபிட்ச் நிறுவனமும் தனது தீர்மானத்தை அறிவித்துள்ளது.




சர்வதேச மட்டத்தில் பாகிஸ்தானின் நிதிநிலை தரமிறக்கப்பட்டுள்ளதால் அதன் வெளிநாட்டு பண வைப்பு நிலை மேலும் மோசமடையும் என்று ஜியோநியூஸ் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

2021 ஒகஸ்ட் மாதம் 20 பில்லியன் அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்ட அந்நாட்டின் நிதிநிலை கீழிறங்கத் தொடங்கியது என்றும் கடந்த அக்டோபர் 14ம் திகதி பாகிஸ்தான் மத்திய வங்கியிடம் 7.6 பில்லியன் அமெரிக்க டொலர்களே கையிருப்பாகக் காணப்பட்டதாகவும் தகவல் வெளியிட்டிருக்கும் ஜியோ நியூஸ், வெளிநாட்டுக் கடன்களை திருப்பிச் செலுத்தும் தன்மையை பாகிஸ்தானில் ஏற்பட்ட பெருவெள்ளம் பெரிய அளவில் பாதித்திருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளது.

பாகிஸ்தானின் நிதி நெருக்கடி மேலும் மோசமடைந்து வருவதையடுத்தே பாகிஸ்தானை இந் நிறுவனங்கள் தரமிறக்கியுள்ளன என்று தெரிவித்திருக்கும் பாக்.நிதியமைச்சின் முன்னாள் ஆலோசகர் காகுவான் நஜீப், வெளிநாட்டுக் கடன்களை மீளாய்வு செய்ய பாக். முன்வந்ததும் உள்நாட்டு அரசியல் ஸ்திரமின்மையும், வெள்ளச் சேதங்களும் தரமிறக்கப்பட்டமைக்கான காரணங்களாகக் குறிப்பிட்டுள்ளார்.

## ஜம்மு – காஷ்மீர் கிராமங்களுக்கு பாதை வசதி



காஷ்மீரின் மலைப்பாங்கான பகுதிகளில் அமைந்துள்ள கிராமங்களுக்கு இடையே பாதை வசதி செய்து கொடுக்கப்பட்டதையடுத்து அப்பிராந்திய மாணவர்களின் கல்வி வசதியும் தொழில் வாய்ப்புகளும் மேம்படுத்தப்பட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்திய அரசு ஜம்மு, காஷ்மீர் யூனியன் அரசுகளோடு இணைந்து மேற்கொண்டுவரும் தொடர்; அபிவிருத்தி நடவடிக்கைகளால் அடிப்படை தேவைகள் மட்டத்தில் மட்டுமின்றி கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் சமூக மாற்றத்திலும் பலத்த மாறுதல்களை நிகழ்த்தி வருவதாக அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மலைப்பாங்கான கிராமங்களில் பாதை வசதி மோட்டார் வண்டிப் பயணத்துக்கு ஏற்றதாக இல்லாததால் கல்வி, மருத்துவம், தொழில் வாய்ப்புகளை அக்கிராமங்களுக்கு கொண்டு செல்வதில் சிரமங்கள் காணப்பட்டன. ஒரு கிராமத்தில் இருந்து தொழில் மற்றும் கல்விக்காக மற்றொரு கிராமத்துக்கு பயணிப்பதில் சிரமங்கள் இருந்தன. தற்போது சிறப்புத் திட்டங்களின் ஊடாக 427 வீட்டுத் திட்டங்கள், 114 குடியிருப்புகளுக்கு பாதை வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

பாதை வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளதால் கல்வியை தொடரவும் புதிய வேலை வாய்ப்புகளை நாடிச் செல்லவும் புதிய ஆஸ்பத்திரிகளை அமைத்து தொடர்ச்சியாக மருந்துகளை விநியோகிக்கவும் முடிந்திருப்பதாக ஜம்மு காஷ்மீர் அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஜம்மு – காஷ்மீர் பகுதிகளில் மருத்துவ சேவையாளர்களுக்கு கடுமையான பற்றாக்குறை நிலவி வந்ததால் நோயாளர்கள் அவதிக்குள்ளாகி வந்தனர். தற்போது இந்நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

## ஜம்மு காஷ்மீரில் 11 நாள் நடமாடும் சேவை



ஜம்மு – காஷ்மீர் நிர்வாகம் மக்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை அவர்களிடம் எடுத்துச் செல்லும் 'கிராமங்களுக்கு செல்வோம்' திட்டத்தை கையாண்டு வருகிறது. சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட 11 நாள் நடமாடும் சேவைகள் ஊடாக பல அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதாக ஜம்மு – காஷ்மீர் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இந் நடமாடும் சேவைகள் மூலம் 63 ஆயிரம் பேருக்கு சுயதொழில் வாய்ப்புகளும் 6,245 கோடி ரூபா பெறுமதியான செயற்திட்டங்களுக்கான காணி ஒதுக்கீடும் வழங்கப்பட்டதாகவும் ஐந்து தொழில் வலயங்களை ஆரம்பிக்கும் திட்டம் நடைமுறைக்கு வரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு சுற்றுலாவுக்கான நூறு இடங்கள் தெரிவு செய்யப்பட்டிருப்பதாகவும் நிர்வாகம் கூறியுள்ளது.

ஜம்மு – காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் காணப்படும் 4,200 பஞ்சாயத்துகளில், ஒரு பஞ்சாயத்தில் 15 பேர் என்ற அளவில் 63 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு எழங்க நிதித்துறைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் பஞ்சாயத்துக்கு ஐந்து என்ற ரீதியாக சுற்றுலாத் தளங்களை அடையாளம் காணும்படியும் தங்குமிட வசதிகொண்ட வீடுகளை கணக்கெடுக்கும்படியும் சுற்றுலாத்துறை கேட்கப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இப் 11 நாள் வேலைத்திட்டத்தில் 35 திணைக்களங்கள் 85 மக்கள் நல திட்டங்களை முன்வைத்தன.